
புத்தம் புதிய மயிலிறகு நாவல்
ரமணிசந்திரன்
ரூ.25/-
அழகிய
மங்கையர்
நாவல்
தேடினேன் வந்தது....
உலகிலேயே மிக அதிகமானவர்கள் படிக்கும் தமிழ் நாவல்!

## பாரதி ஸ்பீக்கிங்



ஹாய்! நலம்... நலமா?

தீபாவளிக்கு யார்... யாரெல்லாம் ஊருக்குப் போறீங்க..? டிக்கெட் புக் பண்ணியாச்சா? பஸ், ட்ரெயின் எல்லாத்துலயும் கூட்டம் வழியும்கிறதால முன் கூட்டியே பயணச் சீட்டை புக் பண்ணிக்கங்க... தீபாவளிய சந்தோஷமா... மங்கையர் நாவலோடும் கொண்டாடுங்கள் வாழ்த்துக்கள்.

அப்புறம், திரைப்படத்துறையின் மிகச்சிறந்த உயரிய விருதான 'தாதா சாகேப் பால்கே' விருதை நம்ம இயக்குனர் இமயம் கே.பாலசந்தர் சார் குடியரசு தலைவர் கையால வாங்கியிருக்கார். அவருக்கும் மற்ற தேசிய விருதாளர்களுக்கும் நம்மோட வாழ்த்துக்கள்

அடுத்ததா, சாலை விபத்துக்களோட மரண எண்ணிக்கை ஆண்டாண்டுக்கு கூடிக்கிட்டே போகுது. கடந்த 2010ல் மட்டும் 15,400க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். இதில் ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை ஏராளம். குறிப்பாக இளைஞர்கள் செல்போனில் பேசியபடியும், பாடல் கேட்டுக்கொண்டும், குடித்துவிட்டும், வாகனத்தை ஓட்டும்போது கவனத்தை வேறெங்கோ வைத்துக்கொண்டு ஓட்டுவதால்தான் பெரும்பாலான விபத்துக்கள் நடக்கின்றன. இப்படிப்பட்ட தவறுகளுக்காக மிகவும் பாதிக்கப்படுவது அவரவரின் குடும்பங்கள்தான். யோசியுங்கள் நண்பர்களே... நன்றி.

ப்ரியமுடன் பாரதி



## பாரதி பதில்கள்

-என்.காயத்ரி, பெருந்துறை.

◆ **காலம் கடந்தபின் ஞானம் வருகிறது என்கிறார்களே அப்படியென்றால் என்ன பாரதி?**

✍ குண்டு வெடிப்புக்குபின் எச்சரிக்கையாக இருப்பதும், சோதனை செய்து அனுப்புவதிலும் என்ன இருக்கிறது. எப்போதுமே எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அப்படி இருந்திருந்தால் சமீபத்தில் நடந்த டெல்லி ஐகோர்ட் குண்டுவெடிப்பு சம்பவத்தை தடுத்திருக்கலாம். அதேபோல ஆழ்துளை கிணற்றை பாதுகாப்புடன் மூடாமல் விட்டால் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்று முன் நடந்த சம்பவத்துக்கும் தண்டனை வழங்கியிருந்தால் பல உயிர்களை காப்பாற்றி இருக்கலாம். ஆக இதுதான் காலம் கடந்த ஞானம்.

-திருமதி.ராஜப்ரியா, வேலூர்.

◆ **அரசின் இலவச கேபிள் ஒளிபரப்பால் பல முக்கியமான சேனல்கள் வரவில்லை என்று ஆண்களை விட, அதிகம் பெண்களே கொடி பிடித்து கோஷம் போடுகிறார்களே...?**

✍ தினம் மாலை ஆறு மணியிலிருந்து இரவு 10மணி வரை சீரியல் பார்த்துப் பழகிப் போனவர்கள். பல சீரியல்களில் அடுத்து என்ன நடந்திருக்குமோ என்ற பதட்டத்தில் கவலைப் படுகிறவர்களால்



பாரதி பதில்கள்

தொடர் பார்க்காமல் இருக்கவே முடியாது. சில பெண்கள் நூறு என்ன இருநூறு கூட தருகிறோம் கட்டணச் சேனல்களை ஒளிபரப்புங்கள் என்கின்றனர்.

-இரா.செல்வமுருகேசன், பாண்டிச்சேரி.

◆ **ஆசிரியர் தினத்தன்று உங்கள் ஆசிரியர்களுக்கு வாழ்த்து சொல்லும் பழக்கமுண்டா... பாரதி?**



✍ எனக்கு மிகவும் பிடித்த மல்லிகா டீச்சர், மனோகரி, ராஜமாணிக்கம், குணசேகரன், விஜயலட்சுமி போன்ற ஆசிரியப் பெருமக்களை மறக்கவே முடியாது. வருடந்தோறும் வாழ்த்து அட்டை அனுப்புவதை வழக்கமாக்கி கொண்டிருக்கிறேன். முடிந்தால் உங்கள் ஆசிரியர்களுக்கு எஸ்எம்எஸ் அல்லது மனதிலாவது வாழ்த்துங்கள்.

-ஆர்.வசுமதி, பென்னாகரம்.

◆ **சமையல் புத்தகம் பார்த்து சமைத்த அனுபவம் உள்ளதா?**



✍ இருக்கிறது. தீபாவளி, பொங்கல் போன்ற விசேஷ தினங்களில் ஏதேனும் சமைக்கத் தோன்றும். பிரபலமான சமையல் கலைஞர்களின் புத்தக உதவியு



பாரதி பதில்கள்

டன் உணவு தயாரிப்பேன். சில நேரங்களில் வெற்றி, சில நேரங்களில் தோல்வி. இன்றைக்கும் காலிபிளவர் சூப் தயாரிப்பதில் படு கில்லாடி நான்.

-கா. ஜான்ஸி, சென்னை.

◆ **சமீபத்தில் தாங்கள் பார்த்த திரைப்படம்?**



✍ கிருஷ்ணா வந்தாச்சு.... நிலா வந்தாச்சு.... படம் பார்த்து மிகவும் நெகிழ்ந்து போனேன். 'ஐயாம் ஷாம்' படத்தின் தாக்கம் இருந்தாலும், சீயானின் நடிப்பு அபாரம். கையை உதறிக்கொண்டு நடப்பது, பேசுவது, மகள் மீது பாசம் காட்டுவது, கதை சொல்ல திணறுவது என அடுக்கிக்கொண்டே போகலாம். இப்படிப்பட்ட படங்கள் எப்போதாவதுதான் வருகிறது. எப்போதாவது வருகிறதே.

-ஏ.இளங்குமரன், பள்ளிப்பாளையம்.

◆ **செங்கொடியின் மரணம் குறித்து...?**

✍ மரணம் என்பது மிகவும் கொடுமையானது. நானும் தூக்கை ஆதரிக்காத இனம்தான். குற்றவாளியின் மரணத்துக்குப் பின்னால் நிராதரவாக நிற்கப்போவது அவரைச் சார்ந்துள்ள குடும்பம்தான். மூவரின் உயிரை மீட்க, தன் உயிரை மாய்த்துக் கொள்வது அந்த நேரத்தில் சட்டென எடுக்கப்படும் அவசர முடிவுதான். உயிரை மீட்க

# பாரதி பதில்கள்

உயிரை கொடுப்பது சரியான தீர்வாகாது. எனவே எதையும் போராடித்தான் வெல்ல வேண்டும். செங்கொடியின் இந்த முடிவு வலிதான்.

-வீ.தங்கதுரை ஸ்டாலின், ஊட்டி.



◆ தாய் பாசம் எதைவிட சிறந்தது?

✍ தாயின் அன்புக்கு ஈடு இணை எதுவுமில்லை. தாயின் பரிவு உயிரை கூட மீட்டுவிடும் என்பதற்கு உதாரணமாக ஒரு சம்பவம். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டேவிட்-கேட் கணவன் மனைவி. கேட் கர்ப்பமாக, ஆஸ்பத்திரியில் பிரசவத்துக்கு சேர்க்கின்றனர். ஆண் குழந்தை உயிரோடு அல்ல இறந்தே பிறக்கிறது. துயரம் தாங்காமல் அந்த பச்சிளங்குழந்தையை மார்மீது போட்டுக்கொண்டு, தடவிக் கொடுத்தபடி கண்ணீர் விட்டு அழுகிறாள் தாய். தாயின் கதகதப்பு, மூச்சின் சுவாசம், அழுகையின் அதிர்வு இவையனைத்தும் சேர்ந்து இறந்த அந்த குழந்தையை உயிர் பிழைக்க வைத்திருக்கிறது. மருத்துவத்தின் மிகப்பெரிய ஆச்சரியம் இது. காரணம் தாய்.

-ஆவடி புருஷோத்தமன், சென்னை.

◆ கடுமையாக ஏறிக்கொண்டே செல்லும் தங்கத்தின் விலையால் அதிகம் பாதிக்கப்படுவது ஆண்களா... பெண்களா...?





✍ பெண்களைப் பெற்ற பெற்றோர்களாகிய ஆண்களும், பெண்களும், மற்ற எதற்கும் இல்லையென்றாலும் திருமணத்திற்கு கண்டிப்பாக நகைகள் எடுத்தே ஆக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். போடுவதாக சொன்ன நகைகளை போடாமல் திணறுவதும், பவுனுக்காகத் திருமணத்தைத் தள்ளிப் போடுவதும், பெரிய தொகையை ஆபரணங்களுக்காக மட்டுமே ஒதுக்குவது போன்ற நிலையில் தாய், தந்தை இருவரும்தான் பாதிக்கப்படுகிறார்கள்.

-என்.வசந்தகுமாரி, உளுந்தூர்பேட்டை.



◆ பெண்களுக்கான நிலையான அழகு எது...?

✍ மேக்கப் சாதனங்களை பயன்படுத்தி முகத்திற்கு அழகூட்டுவதும், சிலரின் விளம்பரங்களின் கவர்ச்சியில் மயங்கி ப்யூட்டி பார்லர்களுக்கு சென்று பளபளப்பாக்கிக் கொள்வதெல்லாம் சில மணிநேர தற்காலிக அழகு மட்டும்தான். நிலையான அழகு ஒவ்வொரு பெண்ணின் தன்னம்பிக்கையிலும், எதையும் சாதிக்கும் துணிச்சல், தைரியத்தில்தான் இருக்கின்றன.



பாரதி பதில்கள்






அன்றைய பயணத்தின்போது,
அவளுக்கு இருந்த
ஒரே ஒரு டிக்கெட்டுக்கு,
சுந்தரவதனியின் மூட்டை,
முடிச்சுகள் மிக அதிகம்தான். ரயில்
பெட்டியில், இருக்கைக்கு அடியில் ஒருபுறம்
முழுவதுக்கும், அவளது சாமான்களே
நிரம்பியிருந்தன.
அதுவும், நெருக்கி அடுக்கிய பிறகு!
அதுபோக, இன்னும் சிலது, இருக்கை மீதும்
கிடந்தன.
குனிந்து நின்று, அடுக்கி முடித்து மூச்சு
வாங்க நிமிர்ந்தபோது, நெற்றி
வியர்வையையும், முகக் கன்றலையும்
மீறிக்கொண்டு, அவளது மதி முகத்தில்
புன்னகை மலர்ந்திருந்தது.
சாதித்துவிட்ட திருப்தி!

"ஏ, அப்பா! எவ்வளோ சாமான், அந்தக்காவுக்கு!" என்ற இளங்குரலும், "ஷ், அப்படிச் சொல்லக்கூடாது, குட்டிம்மா!" என்ற அதன் தாயின் கனிவான கண்டிப்பில், சுந்தரியின் முறுவல் மேலும் விரிவடைந்தது.!

மகளைக் கண்டித்தாலும், தனக்கும் அதே எண்ணம்தான் என்பதை முகத்திலே காட்டிய பெற்றவளைப் பார்த்து முத்துப் பல் தெரிய முறுவலித்தாள், தனக்கும் அதே கருத்தே என்று சொல்பவள் போல.

கூடவே "பரவாயில்லை சகோதரி, பாப்பாவை அதட்டாதீர்கள். அவள் நிஜம்தானே சொல்கிறாள்" என்றவள் தொடர்ந்து "மூன்றும் இரண்டுமாக, ஐந்தாண்டு படிப்பு முடிந்து, அறையைக் காலி பண்ணிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிப் போகிறேன். ஒவ்வொரு தடவை விடுமுறை முடிந்து செல்லும்போதும், அது, இது என்று சேர்ந்து கொண்டே போய்விட்டது. சொல்லச் சொல்லக் கேளாமல், அண்ணன் வேறு, நிறைய வாங்கிக் கொட்டி விடுவான். கடைசியாக காலி பண்ணும்போது, அதெல்லாம் சேர்ந்து, இவ்வளவு ஆகியிருப்பதே புரிந்தது. எதையாவது கழிக்கலாம் என்று பார்த்தால், அண்ணனும், பாட்டியும், ஆசையாக வாங்கிக் கொடுத்த எதையும் தூக்கிப் போடவும், மனம் வரவில்லை! பலன், சாமான்கள் இவ்வளவு சேர்ந்துவிட்டன"

தப்புச் செய்துவிட்ட சிறுமி போல, சுந்தரவதனி விளக்கம் சொன்ன விதம், எதிர்சீட் பெண்ணின் மனதை இளக்கியது போலும் "வாங்கித் தருவோர் பட்டியலில், உன் அம்மா, அப்பாவை விட்டுவிட்டாயே!" என்று புன்னகையோடு வினவி, உரையாடலைத் தொடர்ந்தாள்.

"அது..." என்று ஒரு கணம் யோசித்துப் பார்த்தாள் சின்னவள்.

அம்மா, இப்படி எதையேனும் வாங்கிக் கொடுத்திருக்கிறாளா? தேவைக்கு மேல், ஒரு துணிமணி? ஒரு கைப்பை? வளையல்... ஊகூம்! கிடையவே கிடையாது!

நிமிர்ந்து "எங்கள் அம்மா ரொம்பவும், யதார்த்தவாதி! தேவைப்படாத எதையும் வாங்கித் தரவே மாட்டார்கள். அப்பாவும், ரொம்பவும் அப்படித்தான். எப்போதாவது, எல்லோரையும் ஹோட்டலுக்கு கூட்டிப் போவதோடு சரி! அதுகூட, அதிசயம்தான். அண்ணன்தான், என்னை அடிக்கடி வெளியே கூட்டிப்போய், எதையாவது வாங்கித் தருவான், காசைக் கரியாக்குகிறான் என்று அம்மா



திட்டினாலும் விட மாட்டான். பாட்டி இருந்தபோது, இருவரையும் சேர்த்து கூட்டிப் போவார்கள். தங்கையைப் பார்த்துக் கொள்வது, அண்ணனின் பொறுப்பு என்று அவனிடம் ஏதாவது சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன், சும்மாவுமே அவனுக்கு என் மேல் பிரியம்தான்!" என்று இதழ்களில் புன்னகை விரிய, பரபரப்போடு கைகளைத் தேய்த்து விட்டுக் கொண்டாள்.

"இவ்வளவு நாள் கழித்து, இனிமேல்தான், வீட்டிலேயே எல்லோருடனும் சேர்ந்து இருக்கப் போகிறேன். நினைக்கவே சந்தோஷமாக இருக்கிறது! என்னவோ, விறுவிறுவென்று உடம்பை என்னமோ பண்ணுகிறது. அம்மா கூடவே இருப்பேன், கேக், ஐஸ்க்ரீம் எல்லாம் செய்யப் படித்தேன். அம்மாவுக்குச் செய்து கொடுக்க வேண்டும்! அம்மாவுக்கு ஐஸ்க்ரீம் ரொம்பப் பிடிக்கும்.." என்றாள் கருவிழிகளில் கனவு மிதக்க.

பள்ளிச் சிறுமி போல, சின்னவளின் 'அம்மா'ப் பாட்டு, எதிர்சீட் பெண்ணுக்கு வேடிக்கையாக இருந்தது போலும். புன்னகை செய்து, "அம்மா, அம்மா என்கிறாய், இங்கே, அம்மாவுடனேயே தங்கிப் படித்திருக்கலாமே! இங்கே சென்னையில் இல்லாத படிப்பா?" என்று வினவினாள்.

லேசாகப் புருவம் சுளித்து யோசித்து "எனக்கும், அதேதான்க்கா! அம்மாவிடம் கேட்டுக்கூடப் பார்த்தேன். ஆனால், இது பாட்டியின் ஏற்பாடு என்று நினைக்கிறேன். போ, எல்லாம் உன் பாட்டியிடம் கேட்டுக்கொள் என்று விரட்டிவிட்டார்கள். ஒரே பேத்தி என்றோ, என்னவோ, பாட்டி எப்போதும் என்னைத்தான் கூடவே வைத்துக் கொள்வார்கள், நிறைய வாங்கித் தருவார்கள். நிறைய புத்தி வேறு சொல்வார்கள்., அவர்களுக்கிடையே மாமியார் மருமகள் பிரச்சினை ஏதும் இருந்திருக்கும் போல! நான் பாட்டி கூடவே இருந்ததால், பெற்ற மகளான என்னை, அம்மா அதிகம் பக்கத்தில் சேர்ப்பதே கிடையாது! இனிமேல்தான்... பாட்டியை எனக்கும் பிடிக்கும்தான். ஒருவரின் மறைவை, எந்த விதத்திலும் நமக்கு நல்லதாக நினைக்கக்கூடாதுதான்! ஆனாலும், பாட்டி இல்லாததால், மற்ற பெண்கள் மாதிரி, இனிமேல் அம்மாவோடு ஒட்டிப்பழகலாம். செல்லம் கொஞ்சலாம் என்று நினைக்கும்போது, மனதுக்குள் கிளுகிளுவென்று இருக்கிறது!" என்று

"ஏ, அப்பா! எவ்வளோ சாமான், அந்தக்காவுக்கு!" என்ற இளங்குரலும், "ஷ், அப்படிச் சொல்லக்கூடாது, குட்டிம்மா!" என்ற அதன் தாயின் கனிவான கண்டிப்பில், சுந்தரியின் முறுவல் மேலும் விரிவடைந்தது.!

மகளைக் கண்டித்தாலும், தனக்கும் அதே எண்ணம்தான் என்பதை முகத்திலே காட்டிய பெற்றவளைப் பார்த்து முத்துப் பல் தெரிய முறுவலித்தாள், தனக்கும் அதே கருத்தே என்று சொல்பவள் போல.

கூடவே "பரவாயில்லை சகோதரி, பாப்பாவை அதட்டாதீர்கள், அவள் நிஜம்தானே சொல்கிறாள்" என்றவள் தொடர்ந்து "மூன்றும் இரண்டுமாக, ஐந்தாண்டு படிப்பு முடிந்து, அறையைக் காலி பண்ணிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிப் போகிறேன். ஒவ்வொரு தடவை விடுமுறை முடிந்து செல்லும்போதும், அது, இது என்று சேர்ந்து கொண்டே போய்விட்டது. சொல்லச் சொல்லக் கேளாமல், அண்ணன் வேறு, நிறைய வாங்கிக் கொட்டி விடுவான். கடைசியாக காலி பண்ணும்போது, அதெல்லாம் சேர்ந்து, இவ்வளவு ஆகியிருப்பதே புரிந்தது. எதையாவது கழிக்கலாம் என்று பார்த்தால், அண்ணனும், பாட்டியும், ஆசையாக வாங்கிக் கொடுத்த எதையும் தூக்கிப் போடவும், மனம் வரவில்லை! பலன், சாமான்கள் இவ்வளவு சேர்ந்துவிட்டன"

தப்புச் செய்துவிட்ட சிறுமி போல, சுந்தரவதனி விளக்கம் சொன்ன விதம், எதிர்சீட் பெண்ணின் மனதை இளக்கியது போலும் "வாங்கித் தருவோர் பட்டியலில், உன் அம்மா, அப்பாவை விட்டுவிட்டாயே!" என்று புன்னகையோடு வினவி, உரையாடலைத் தொடர்ந்தாள்.

"அது..." என்று ஒரு கணம் யோசித்துப் பார்த்தாள் சின்னவள்.

அம்மா, இப்படி எதையேனும் வாங்கிக் கொடுத்திருக்கிறாளா? தேவைக்கு மேல், ஒரு துணிமணி? ஒரு கைப்பை? வளையல்... ஊகூம்! கிடையவே கிடையாது!

நிமிர்ந்து "எங்கள் அம்மா ரொம்பவும், யதார்த்தவாதி! தேவைப்படாத எதையும் வாங்கித் தரவே மாட்டார்கள். அப்பாவும், ரொம்பவும் அப்படித்தான். எப்போதாவது, எல்லோரையும் ஹோட்டலுக்கு கூட்டிப் போவதோடு சரி! அதுகூட, அதிசயம்தான். அண்ணன்தான், என்னை அடிக்கடி வெளியே கூட்டிப்போய், எதையாவது வாங்கித் தருவான். காசைக் கரியாக்குகிறான் என்று அம்மா



திட்டினாலும் விட மாட்டான். பாட்டி இருந்தபோது, இருவரையும் சேர்த்து கூட்டிப் போவார்கள். தங்கையைப் பார்த்துக் கொள்வது, அண்ணனின் பொறுப்பு என்று அவனிடம் ஏதாவது சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன், சும்மாவுமே அவனுக்கு என் மேல் பிரியம்தான்!" என்று இதழ்களில் புன்னகை விரிய, பரபரப்போடு கைகளைத் தேய்த்து விட்டுக் கொண்டாள்.

"இவ்வளவு நாள் கழித்து, இனிமேல்தான், வீட்டிலேயே எல்லோருடனும் சேர்ந்து இருக்கப் போகிறேன். நினைக்கவே சந்தோஷமாக இருக்கிறது! என்னவோ, விறுவிறுவென்று உடம்பை எண்ணமோ பண்ணுகிறது. அம்மா கூடவே இருப்பேன், கேக், ஐஸ்க்ரீம் எல்லாம் செய்யப் படித்தேன். அம்மாவுக்குச் செய்து கொடுக்க வேண்டும்! அம்மாவுக்கு ஐஸ்க்ரீம் ரொம்பப் பிடிக்கும்.." என்றாள் கருவிழிகளில் கனவு மிதக்க.

பள்ளிச் சிறுமி போல, சின்னவளின் 'அம்மா'ப் பாட்டு, எதிர்சீட் பெண்ணுக்கு வேடிக்கையாக இருந்தது போலும். புன்னகை செய்து, "அம்மா, அம்மா என்கிறாய், இங்கே, அம்மாவுடனேயே தங்கிப் படித்திருக்கலாமே! இங்கே சென்னையில் இல்லாத படிப்பா?" என்று வினவினாள்.

லேசாகப் புருவம் சுளித்து யோசித்து "எனக்கும், அதேதான்க்கா! அம்மாவிடம் கேட்டுக்கூடப் பார்த்தேன். ஆனால், இது பாட்டியின் ஏற்பாடு என்று நினைக்கிறேன். போ, எல்லாம் உன் பாட்டியிடம் கேட்டுக்கொள் என்று விரட்டிவிட்டார்கள். ஒரே பேத்தி என்றோ, என்னவோ, பாட்டி எப்போதும் என்னைத்தான் கூடவே வைத்துக் கொள்வார்கள். நிறைய வாங்கித் தருவார்கள். நிறைய புத்தி வேறு சொல்வார்கள்., அவர்களுக்கிடையே மாமியார் மருமகள் பிரச்சினை ஏதும் இருந்திருக்கும் போல! நான் பாட்டி கூடவே இருந்ததால், பெற்ற மகளான என்னை, அம்மா அதிகம் பக்கத்தில் சேர்ப்பதே கிடையாது! இனிமேல்தான்... பாட்டியை எனக்கும் பிடிக்கும்தான். ஒருவரின் மறைவை, எந்த விதத்திலும் நமக்கு நல்லதாக நினைக்கக்கூடாதுதான்! ஆனாலும், பாட்டி இல்லாததால், மற்ற பெண்கள் மாதிரி, இனிமேல் அம்மாவோடு ஒட்டிப்பழகலாம். செல்லம் கொஞ்சலாம் என்று நினைக்கும்போது, மனதுக்குள் கிளுகிளுவென்று இருக்கிறது!" என்று

ஒரு சந்தோஷப் பெருமூச்சு விட்டாள்.

"இப்படியாக்கா?" என்று தாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, கன்னத்தில் முத்தமிட்டாள் சிறுமி.

சிறுமியின் பாவனையில், இரு பெண்களும் கலகலவெனச் சிரித்தனர்.

"கவனித்துக் கொண்டே இருந்திருக்கிறது பாரேன்! படு பயங்கரமான சுட்டி!" என்றாள் பெற்றவள் பெருமிதத்துடன்!

"சுட்டியில்லை.. என் பேர், மத்துமித்தா!" என்றாள் குழந்தை அழுத்தம் திருத்தமாக. "சொல்லு. இப்பிடிக் கட்டிப் பிடிப்பியா?" என்று தாயை மேலும் அழுத்தமாக அணைத்துக் கேட்டாள்.

இப்படியெல்லாம் தாயை அணைப்பதா?

சுந்தரிக்குக் கொஞ்சம் ஆசையாகத்தான் இருந்தது. ஆனால்... நினைவு தெரிந்து, அப்படி நடந்ததே இல்லை! அருகில் போய், உரசிக்கொண்டு நின்றாலே, ஒரு சில வினாடிகளில், அம்மா எங்கோ நகர்ந்து போயிருப்பாள்.

தொட்டுப் பழகப் பிடிப்பது இல்லை! அப்பாவிடம் கூட, அப்படித்தான். தெரியாமல் பக்கத்தில் நின்றால், விரைவிலேயே விலகிப் போய்விடுவான்.

'பர்சனல் ஸ்பேஸ்' என்று சுந்தரவதனி படித்திருக்கிறாள். சில பேருக்கு, அது அதிகம் தேவைப்படுமாம். அந்த எல்லைக்குள் யாரும் வந்தால், பிடிக்காதாம். இயன்றவரை, எப்படியாவது விலகிப் போய்விடுவார்கள். அல்லது எரிச்சல் படுவார்கள் என்று மனோதத்துவ வகுப்பில் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால், குடும்பத்தில் கணவன், பிள்ளைகளிடம் கூடவா, ஒருத்திக்கு அது போலத் தனியிடம் தேவைப்படும்?

ஆனால், அண்ணன் மட்டும் தனி. சில சமயங்களில் அண்ணனின் தோள்மேல் சாய்ந்து, தாயார் கண் மூடி அமர்ந்திருப்பதை, சுந்தரவதனி கண்டதுண்டு.

ஆண்பிள்ளைதான் பின்னர் தன்னைக் காப்பாற்றப் போகிறவன் என்கிற பழைய கால 'சென்டிமென்டா'க இருக்கலாம். அல்லது, அண்ணன் கூடவே இருந்ததால், எதற்கும் அவனைச் சார்ந்திருக்கப் பழகியும் இருக்கலாம்.



ஆனால், இனி அது மாறிவிடும். பெற்ற மகள் அருகிலேயே இருந்து, அன்பைப் பொழியும்போது, அதுதான் பெரிதாகத் தோன்றத் தொடங்கிவிடும்!

ஆவலாகப் பார்த்துக் கொண்டிருந்த சிறுமியின் குண்டுக் கன்னத்தை வருடி, "கிட்டத்தட்ட அப்படித்தான்" என்றவள், அப்படியேதான் என்று தனக்குள்ளும் சொல்லிக் கொண்டாள்.

இந்த அன்புக்காக, வதனி என்ன மாதிரி தியாகம் செய்திருக்கிறாள் என்று அறியும்போது, வீட்டில் எல்லோருக்குமே நெஞ்சைத் தொடத்தான் செய்யும்.

தொடக்கத்திலேயே முதல் சம்பளமே நாற்பத்து ஐயாயிரம் ரூபாய்! வீட்டு வாடகை, போக்குவரத்துச்செலவு போக! கடைசி செமஸ்டரில் தொழில் பயிற்சிக்குப் போன நிறுவனத்திலேயே, வேலைக்குக் கூப்பிட்டார்கள்! வேறு யாருக்கும் அளிக்காத சலுகை! அதையே மறுத்துவிட்டு வந்து விட்டாள்!

ஒரே காரணம், குடும்பத்தாரோடு, முக்கியமாக அம்மாவோடு சேர்ந்து இருக்க வேண்டும் என்ற மகத்தான நோக்கம்!

இதைச் சொல்லும்போது, வீட்டில் எல்லோருக்கும் எப்படி இருக்கும்!

ஆச்சரியம்? அதிசயம்! காரணம் தெரியும்போது...

திடுமென ஒரு சந்தேகம் சுந்தரவதனியை உலுக்கியது.

இவ்வளவு வருமானத்தை மறுக்க வேண்டாம் என்று யாரும் சொல்வார்களோ?

அம்மா? அப்பா? அண்ணன் எப்போதும், அவள் கட்சி!

போன தடவை விடுமுறைக்குச் செல்லும்போது, அவனே சொன்னதுதான். "எப்போதடா, படிப்பு முடிந்து, நீ வீட்டுக்கு வருவாய் என்று இருக்கிறது! படிப்பு, படிப்பு என்று மெலிந்துவிட்டாய். வீட்டுச் சாப்பாட்டில் கொஞ்சம் தேறின பிறகு, வேலை மற்றது எல்லாம் பார்க்கலாம். வீட்டில் சும்மா இருக்கப் பிடிக்காவிட்டால், நம் நிறுவனத்திலேயே ஒரு வேலை போட்டுக் கொள்ளலாம்..." இந்த ரீதியில் நிறையச் சொன்னான்.

ஆனால், ரமேஷ் சொன்னதில், ஒன்று அன்பினால் நேர்ந்த பிழை.

அவனது பாசக் கண்களுக்குத் தோன்றியது போல, அவள் ஒன்றும் மெலிந்து போய் இருக்கவில்லை. இயல்பாகவே, அவளுக்குச் சற்று

மெல்லிய மேனி. உயரமும் அதிகம். அதனால், சற்று ஒல்லியாகத் தெரியுமே தவிர, ஆரோக்கியத்தில், அவளுக்கு ஒரு குறையும் கிடையாது. அம்மா சாப்பாட்டில் தேற வேண்டிய அவசியமும் கிடையாது!

சொல்லப் போனால், அம்மாவுக்கு விதம் விதமாகச் செய்து கொடுக்க வேண்டும் என்று, ஓய்வு நேரத்தில் சமையல் வகுப்பில் சேர்ந்து, படித்து, டிப்ளமோவே வாங்கி வைத்திருக்கிறாள். அதைத் தினம் தினம் செய்து எல்லோரையும் அசத்த வேண்டும்...

வழக்கம்போல, ரமேஷ்தான் ரயிலடிக்கு வந்திருந்தான். அவள் கொண்டு வந்திருந்த சாமான்களைப் பார்த்ததும், "என்னடி, சல்லிசாகக் கிடைத்தது என்று, ஹைதராபாத் ஊரையே விலைக்கு வாங்கி வந்துவிட்டாயா?" என்று கிண்டலடித்தான்.

"என்னவோ, நீங்கள்தான் அப்படி வாங்கிக் கொடுத்ததாக, உங்கள் தங்கை சொன்னாளே!" என்றாள் கூடவே ரயிலை விட்டு இறங்கிய எதிர்சீட் பெண். "விழித்திருந்த நேரம் எல்லாம், அவளுக்கு அண்ணன் புராணம்தான்!" என்று சிரித்தாள்.

லேசாக முகம் சிவந்தபோதும், "சுந்தரிக்கு என் மேல் பாசம் அதிகம். அவளது அன்புக்கு, ஹைதராபாத் என்ன? இன்னும் சென்னை, பங்களூரு என்று எத்தனை ஊர்களை வேண்டுமானாலும் வாங்கிக் கொடுக்கலாம். ஆனால், படுபாவிப் பசங்கள், எந்தக் கடையிலும், இந்த ஊர்களையெல்லாம் விற்கவே மாட்டேன் என்கிறார்களே!" என்று ரமேஷ் சோகம் காட்ட, எல்லோருக்கும் சிரிப்பு வந்தது.

கணவன் சாமான்களை எடுத்துக் கொள்ள, தூங்கும் குழந்தையைத் தோளில் சாய்த்துக்கொண்டு, அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு அந்தப் பெண்மணி செல்ல, போர்ட்டர் கொண்டு வந்த ட்ராலியில் பொருட்களை ஏற்றிக்கொண்டு, அண்ணனும் தங்கையும் சேர்ந்து, வீட்டுக்குக் கிளம்பினர்.

வீடு செல்லும் வழியில், தான் வேலையை மறுதலித்த விவரத்தை, அண்ணனிடம் எடுத்துச் சொன்னாள் தங்கை.

கணம் கூடத் தயங்காமல் "நல்ல காரியம் செய்தாய், சுந்தும்மா!" என்று பாராட்டினான் சகோதரன். தொடர்ந்து "கொஞ்ச நாள் பிடித்து வைத்த பிள்ளையார் மாதிரி அசையாமல், வீட்டில் இரு. அப்புறமும் நீ வேலை பார்த்துதான் நமக்கு நிறைய வேண்டும் என்பது இல்லை.



அப்படியே, வேலை பார்த்துதான் ஆக வேண்டும்போல உனக்குத் தோன்றினாலும், வெளியே எங்கேயும் போக வேண்டாம். நம் நிறுவனத்திலேயே, நிதிப் பொறுப்பைக் கவனிக்கும் தலைமைக் கணக்கர், இரு மாதங்களில் ஓய்வில் போகிறார். அந்த வேலையில் நீ சேர்ந்து விடலாம். யாருக்கோ போகிற நாற்பது ஆயிரமும், நம் வீட்டுக்குள்ளே, உன் கணக்கில் வந்து சேரும். உன் படிப்பு இந்த ஆண்டு முடியப் போகிறது என்பதால், அப்பாவிடம் இது பற்றி, நான் ஏற்கனவே பேசிவிட்டேன். அதனால், முதலில் உனக்கு பூரண ஓய்வு, அதன்பிறகு, உனக்குப் பிடித்தால், என் கூடவே, அலுவலகம் வந்து, என் கூடவே, திரும்பப் போகிறாய்!" என்றான்.

சுந்தரவதனியின் கண்கள் லேசாகப் பனித்தன.

எவ்வளவு பிரியமான அண்ணன்! அவளது படிப்பு முடிவதைக் கூடக் கணக்கிட்டு, அவளது எதிர்காலத்தையும் யோசித்து வைத்திருக்கிறானே!

"அப்பாவுக்கும் விருப்பம்தானா, அண்ணா?" என்று மெல்ல வினவினாள் அவள்.

பொதுவாக, எதற்கும் சட்டென முடிவெடுக்கும் பழக்கம், அவருக்குக் கிடையாது. ஆனால் இப்படி என்று சொன்னால், அதை நன்றாகச் செய்வார். பாட்டி இருந்தவரை, தொழிலில் கூட, அவர்களது அதிகாரம்தான். இப்போது, அண்ணனா? அப்பாவா?

"அப்பாவைப் பற்றித்தான், உனக்குத் தெரியுமே? எப்போதும், கொஞ்சம் கொழ கொழதானே? எதற்கும், அம்மாவைக் கேட்டுக்கொள் என்றார்!

"அம்மாவா? அம்மா தொழிலில் தலையிட்டதே கிடையாதே!"

"அதனால்தான், நானும் அம்மாவிடம் ஒன்றும் சொல்லவில்லை. முதலில் அம்மாவும் நீயும் மட்டுமாக வீட்டில் இருந்து, அம்மா மகளாக, ஒரு நெருக்கத்தை உண்டு பண்ண வேண்டும். நீ ஹாஸ்டலில் இருந்து, இருந்து அம்மாவுக்கு உன்னை மறந்தே போய்விடும் போல இருக்கிறது. பக்கத்திலேயே இருப்பதால், தினம் தினம் அப்பாவுக்கும் எனக்கும் தேவைப்படுவதை யோசித்து செய்வது போல, உனக்குச் செய்யவில்லை பார், உன் அறை ஏசியை சர்வீஸ் பண்ணக்கூட மறந்து விட்டார்கள். எனக்குக் கோபமே வந்துவிட்டது! உன் தங்கைக்கு என்றால் நீ

செய்வதுதானே. அம்மாவை ஏன் தொல்லை செய்கிறாய்! என்கிறார் அப்பா! என்னதான் படித்தும், பெண் குழந்தைகள் செலவு அயிட்டம், அதனால் மட்டம் என்கிற புத்தி நம் சமுதாயத்தை விட்டுப் போகவே, போகாது போல! சட்டப்படி உனக்குச் சம பங்கு உண்டு என்பதே, நாம் சொன்னால்தான், தெரியும் போல!" என்று எரிச்சல் குரலில் பேசினான் பெரியவன்.

அவன் தோளில் சலுகையாகச் சாய்ந்து, "பங்கு, கிங்கு என்று எதுவும் எனக்கு வேண்டாம், அண்ணா! நம் எல்லோரும், அன்பாகச் சேர்ந்து இருந்தால், அதுவே போதும்!" என்றாள் தங்கை.

"இருப்போம், இருப்போம்! நீ என்ன மாதிரி வேலையை உதறிவிட்டு, குடும்பத்தோடு சேர்ந்து இருப்பதற்காக வந்திருக்கிறாய் என்று தெரியும்போது, அம்மாவும், அப்பாவும் உருகிப் போய்விடுவார்கள்! அந்த உருகலில் மகன் நான் ஒருவன் இருப்பதை மறந்து, யாரடா நீ பொடியன்... இல்லை, தடியன் என்று கேட்காமல் இருந்தால், அது போதும்டா சாமி!" என்று அவன் கூறிய விதத்தில், சின்னவள் கலகலவென்று சிரித்தாள்.

சந்தரவதனி மகிழ்ந்து சிரித்தது, அன்றைக்கும், அதன் பின் பல காலத்துக்கும், அதுதான் கடைசியாக இருக்கப் போகிறது என்று, அவர்கள் இருவருக்குமே, அப்போது தெரியாது!

அது தெரியாத காரணத்தினாலேயே, தாயும் தந்தையும், முகத்தில் முறுவல் என்ற பெயரில், அரைகுறையான உதட்டு நெளிப்புடன் தன் அன்புத் தங்கையை வரவேற்கவும், ரமேஷ் சீறிச் சினந்துவிட்டான்.

"என்ன இது?வீட்டின் செல்ல மகள். உங்கள் கடைசிக் குழந்தை. கடந்த ஐந்து ஆண்டுகளின் பெரும்பகுதியைக் கல்லூரி விடுதியிலேயே, கழித்ததோடு, நல்லபடியாகப் படிப்பையும் முடித்துவிட்டு வந்திருக்கிறாள்! இந்த சினிமா, சீரியல்களில் வருகிற மாதிரி, ஆலம் சுற்றி, திருஷ்டி கழித்து வரவேற்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. சுந்து கூட, அது போலெல்லாம் எதிர்பார்க்க மாட்டாள். ஆனால், மகள் வந்துவிட்டாள் என்று முகத்தில்கூடக் கொஞ்சம் மகிழ்ச்சியைக் காட்டலாம்தானே?" என்று கோபத்தோடு கேட்டான்.

"என்னடா, ஒரேயடியாக ஓட்டுகிறாய்? அதுதான் வா என்று சொல்லியாயிற்றே. குளித்துவிட்டு வந்து சாப்பிடச்சொல்லு, உன்



அருமைத் தங்கையைப் பட்டினி போட்டுவிடாமல், சிற்றுண்டியெல்லாம் செய்துதான் வைத்திருக்கிறேன்" என்று உள்ளே செல்லத் திரும்பினாள் மரகதம்.

சுந்தரவதனியின் கண்களில் தெரிந்த வலியும், அதை மறைக்கும் முயற்சியாக, அவள் தலை குனிந்து நின்ற நிலையையும் உசுப்பி விட, "நில்லுங்கம்மா!" என்று முழங்கினான் ரமேஷ்!

மெல்ல, தன் அறைப் பக்கமாக நகரத் தொடங்கிய தந்தையையும், "அப்பா, நீங்களும் எங்கேயும் ஓடாதீர்கள்!" என்று நிறுத்திவைத்துத் தொடங்கினான்.

"வீட்டுக்கு வந்த விரோதியைக் கூட, நீங்கள் பட்டினி போட்டு விட மாட்டீர்கள் என்று எங்களுக்குத் தெரியும், அம்மா. ஏன் அம்மா, சுந்தரி... ஏன் நானுமே ஆசைப்படுவது, அவளிடம் உங்களது பாசம் மட்டும்தான். ஏன் அம்மா, மகன் என்றால் வரவு, மகள் என்றால் செலவு என்கிற பாமரத்தனமான பழம் பாடாவதி எண்ணம்தான், உங்களுக்கும் இருக்கிறதா? அப்படி இல்லையம்மா. ஒரு விஷயம் தெரியுமா? நான் படித்து முடித்தபோது, 'காம்பஸ் செலக்ஷனுக்கு வந்தார்களே, எனக்கு அவர்கள் தருவதாகச் சொன்ன முழு ஊதியம் இருபத்தெட்டாயிரம் ரூபாய்தான். ஆனால், நம் சுந்துவுக்கு என்ன சம்பளத்தில் வேலைக்கு அழைக்கிறார்கள், தெரியுமாம்மா? வீட்டு வாடகை, போக்குவரத்துச் செலவு எல்லாம் தந்து, அதற்கு மேல் நாற்பத்தி ஐயாயிரம் ரூபாய்! நம் தலைமைக் கணக்கருக்கு, ஓய்வு பெறும் வயதில், நாம் நாற்பதாயிரம் கொடுக்கிறோம்! இவளுக்குத் தொடக்கத்திலேயே, இந்த வருமானம்! ஆனால், அம்மா, அப்பா கூட இருக்க வேண்டும் என்ற ஆசையில், அதையே வேண்டாம் என்று மறுத்துவிட்டு, வீட்டுக்கு ஓடி வந்திருக்கிறாள். அந்த மாதிரிப் பெண்ணை போய்..."

"அவளைப் போய், அந்த வேலையைப் பார்க்கச் சொல்லு!"

தன் பேச்சில் குறுக்கிட்டு, தாய் சொன்ன வார்த்தைகளை, ஒரு கணம் ரமேஷால் நம்பக்கூட முடியவில்லை!

சுந்தரிக்கோ, அதை விட அதிர்ச்சி!

அப்படியானால், தாயாருக்குப் பணம்தான் பெரிதா? என்னமோ, பித்து, கல்லு என்று பழமொழியெல்லாம் சொல்வார்களே! இங்கே நேர் உல்டாவாக இருக்கிறதே! நெஞ்சு கலங்கியது அவளுக்கு.

பெரிய கண்கள் விரிய அதிர்ந்து நின்ற தங்கையைப் பார்த்த மேஷும் தங்கையைப் போலவே, நினைத்தான் போலும்! ஆனாலும் ன் தாயை அப்படி ஒரேடியாக ஒதுக்க முடியாமல், ஒரு சிறு அமைதியின் பின் "என்னம்மா சொன்னீர்கள்?" என்று விளக்கம் கேட்டான்.

நிற்கச் சொன்ன மகனின் முழக்கத்துக்குப் பணிந்து நின்ற மரகதம், ன்னமும் யாரையும் திரும்பிப் பாராமலே, "அவளை, அந்த வேலையை ப்புக்கொண்டு, இங்கிருந்து போகச் சொன்னேன்" என்றாள் சற்று ரத்த குரலில்.

முதலில் சொன்னது காதில் விழாததால், மகன் மறுபடிச் சொல்லச் சொன்னதாகக் கருதினாள் போலும்!

ஆனால், மகனின் மனம் அடிபட்டுச் சுருண்டது என்றால், மகன் ம்பாய்ச் சீறலானான்.

"இந்தப் பேச்சை, இத்தோடு நிறுத்தலாமே" என்று முணுமுணுத்த ந்தையை அலட்சியம் செய்து, தங்கையின் கையைப் பற்றி தாயிடம் இழுத்துப் போனான்.

"பாருங்கள் அம்மா. அன்புக்கு ஏங்கி வந்திருக்கும், இந்தப் பேதை கத்தை நன்றாகப் பாருங்கள்! எனக்கு ஒரு விரலில் அடி பட்டாலும் லங்கிப் போய், 'பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்று பரிதாக ஒரு பழமொழி, எத்தனை முறை நீங்களே சொல்லியிருக்கிறீர்கள்! அதே தாய் மனம், பெண்ணாகப் பிறந்த ஒரே ரணத்துக்காக, இவளைப் போகச் சொல்வது, என்னம்மா நியாயம்? ந்துவும், நீங்கள் பெற்ற பெண்தானே? என்னைப் பெற்றது போலவே, த்து மாதம் சுமந்து..."

"இல்லை!" என்று வீறிட்டாள் மரகதம். "இவள் நான் பெற்ற பெண் ல்லை! இல்லவே இல்லை!"

சிவஞானம் அங்கிருந்து மெல்ல நகர்ந்ததைக் கவனிக்கும் நிலையில், மற்ற மூவருமே இருக்கவில்லை.

மனதோடு, உடலும் சில்லிட்டு சுந்தரவதனி சிலையாக நிற்க "...என்னம்மா சொல்லுகிறீர்கள்? நம் சுந்துவை... எ...என்ன சொல்கிறீர்கள்?" என்று திகைப்புடன் வினவினான் ரமேஷ்.

"நான் சொன்னது உண்மை. இவள் நான் பெற்ற மகள் இல்லை! மூக்கம் கெட்ட உன் தந்தை, எங்கோ ஊர் மேய்ந்து யார் வயிற்றிலோ



பிறந்த பெண்! உன் பாட்டி, அந்தத் தட்டுக் கெட்டவளிடம் போய், ஐந்து லட்சரூபாய் கொடுத்து வாங்கி வந்து, மகளாக வளர்க்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தி, தத்தெடுக்க வைத்து, என் தலையில் சுமத்திய பாரம், மறுத்தால், நம்மை நடுத்தெருவில் நிறுத்தி விடுவார்களோ என்று பயந்து! ஐயோ! இவளைப் பார்க்கும் போதெல்லாம் நான் உள்ளூர அனுபவித்திருக்கும் நரக வேதனை, எனக்குப் போதாதா? நீயுமா என்னை... இப்படி... ஐயோ கடவுளே! கடவுளே!" என்று முகத்தில் அறைந்து கொண்டு கதறி அழுதாள் மரகதம்.

தாயைத் தேற்ற விரைந்த மகனின் கை, ஏற்கனவே பற்றியிருந்த தங்கையின் கையைச் சட்டென விட்டு விலகியது!



## தேடினேன் வந்தது 2

சற்றுநேரம் சுந்தரவதனியின் கை, அந்தரத்தில் அப்படியே நின்றது

"ஐயோ, வேண்டாம்மா! வேண்டாம். அழாதீர்கள் முகத்தில் போய்... வேண்டாம், அம்மா! ப்ளீஸ்!" என்று தாயின் கைகளைப் பற்றி, மேலும் முகத்தில் அறைந்து கொள்ளாமல் ரமேஷ் தடுப்பதைப் பார்த்த பிறகுதான், தன்னைப் பற்றியிருந்த அண்ணனின் கை அங்கே இல்லை என்பதையே, அவள் முழுமையாக உணர்ந்தாள்.

'ஸ்லோமோஷன்' திரைப்படம் போல, கை மெல்லக் கீழே விழுவதைப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு, அண்ணன் கை, தன்னைத் தாங்கியிருக்கவில்லை என்பது, வேறு விதமாகத் தாக்கியது

தாங்குவதா? அவனுக்கு, அவளது நினைவே இல்லை என்பதும், "அம்மா, அம்மா, வேண்டாம்மா... அழ வேண்டாம்மா... எனக்குத் தெரியாதும்மா! அம்மா..." என்று தாயின் கைகளையும், கன்னங்களையும் தட்டியும், தடவியும் கொடுத்து சமாதானப்படுத்திய விதத்தில் நன்றாகத் தெரிந்தது.

அது மட்டுமல்ல, அவளுக்கு, அங்கே இடம் இல்லை என்பதும்.

மெல்லத் திரும்பியபோது, தந்தை காணாமல் போயிருப்பதும் தெரிந்தது.

வழக்கம் போல, நழுவிவிட்டார்.

செய்வது அறியாமல், மெல்ல அவளது அறைக்கு வந்து சேர்ந்தாள்!

மூட்டை கட்டிக் கொண்டு வந்த சாமான்களை எல்லாம், வேலைக்காரி அவளது அறையில் கொணர்ந்து வைத்திருந்தாள்.

அன்பான உறவு கொடுத்தது என்று, அத்தனையையும் அள்ளி வந்தாள். ஆனால், இப்போது இதில் எதை, அவளது என்று கொள்வது?

மனது அமைதியின்றித் தவித்ததில், அவளால் உட்கார கூட முடியவில்லை. அந்த அறையில் பரவிக் கிடந்த பெட்டி, பைகளுக்கிடையே அலைந்தபோது, ஏதேதோ எண்ணங்களும் தோன்றியும் மறைந்தும் அவளை அலைக்கழித்தன!

தாயார்... தாயார் என்று இனிச் சொல்லலாமா? ஆனால், வேற மாதிரி எப்படி நினைப்பது?

பெரியம்மா என்றா? வாயிலேயே போடுவார்கள்! அண்ணனே, உதைப்பான்.

எப்படியும் அவர்கள் சொன்னது நிஜமாகத்தான் இருக்க வேண்டும்.

என்ன மாதிரிக் கதறல்! அந்தக் கதறல், முழு நிஜம்! அது நிஜமே என்பதற்கான ஆதாரங்கள், சரம் கட்டினாற்போல, ஒவ்வொன்றாக வந்து சேர்ந்து கொண்டன.

முக்கியமாகப் பாட்டி!

எப்போதும் கூடவே வைத்துக் கொள்வதோடு, ஓதிக் கொண்டே இருப்பார்கள்.

அம்மாவிடம் வாக்குவாதம் செய்யவே கூடாது. அம்மா பார்க்க, அப்பாவிடம் போய்க் கொஞ்சக் கூடாது. இது, அவசியமற்ற எச்சரிக்கை. ஏனெனில், அம்மா முன்னிலையில் அவர், மகளைக் கண்டுகொண்டதே கிடையாது. எப்போதேனும் தலையை வருடி, கன்னத்தைத் தட்டிக் கொடுத்தால், அது, அம்மா வீட்டில் இல்லாத நேரமாகத்தான் இருக்கும்!

அதற்கெல்லாம் காரணம், இப்போதல்லவா புரிகிறது!

பாட்டி ஓதியதின் காரணமும்!

திரும்பத் திரும்ப, இதையே சொல்லி, போரடிக்கிறார்களே என்று, சுந்தரவதனி உள்ளூர எரிச்சல்படுவாள். ஆனால், மந்திரப் பாராயணம் மாதிரி, பாட்டி, சொல்லிக் கொண்டே இருந்தது ஏன் என்று இவ்வளவு வலியோடு அல்லவா, தெரிய வந்திருக்கிறது!

இதை விடவும் உயர்வாக பாட்டி சுந்தரிக்காக இன்னொன்று செய்து



வைத்திருந்தாள். பேத்தியின் பெயரில் ஒரு வங்கிக் கணக்கு தொடங்கி அதில் நிறையப் பணம் சேர்த்து வைத்திருந்தாள்! இந்தப் பணம் பற்றி, ரமேஷ் உட்பட, குடும்பத்தில் யாருக்கும் சொல்லக்கூடாது என்று, சுந்தரவதனியிடம் சத்தியமே வாங்கியிருந்தாள்! யாருக்குமே தெரியக் கூடாதாம்! பாட்டியின் தனிப்பட்ட பரிசாம்!

தொழிலில் பெண்களுக்குப் பங்கு கூடாதாம்! ஒரு திருமணத்தைச் செய்து வேறு குடும்பத்துக்கு, ஓட்டி விடத்தான் முயற்சிப்பார்களாம்! அதனால்தான், இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக, அவளுக்காகப் பாட்டி பதுக்கினாள் போல!

தொழிலில் கூட, பாட்டியின் பங்கை, அவளுக்குப் பாதி கொடுக்கப் போவதாக, உயிலில் எழுதியே வைத்திருக்கிறாள். ஆனால், அதை வதனிக்குத் தருவது சந்தேகம். அனேகமாகத் தர மாட்டார்கள் என்பாள். அம்மா, தர விட மாட்டாளாம்! அப்படியே தந்தாலும், அதில் ஏதாவது வில்லங்கம் இருக்கும். அதனால் இந்தப் பணம் வதனிக்கு. மற்ற யாருமே அறியக் கூடாத தனிப் பரிசு என்று சொல்லுவாள்.

ஆகச் சுற்றி வளைத்து, பாட்டி சொல்ல முயன்றது இதைத்தான்.

மருமகள் மரகதம், உன்னைப் பெற்ற தாய் அல்ல, அதனால், உனக்கு உரிய பங்கைத் தர மாட்டாள். ஆனால், என் பேத்தியான உன்னை நான் கைவிட மாட்டேன்!

இதுதான் பாட்டி குறிப்பாக அவளிடம் கூறியது. கூடவே இன்னோரன்ன வார்த்தைகளால், வெளிப்படையாகச் சொல்ல விரும்பாததும் கூட!

ஒருவேளை, இத்தனை காலமும் போல, மருமகள் வாய் மூடியே இருந்தும் விடலாமே! அப்படி இருந்துவிட்டால், இந்த உண்மை, யாரும் அறியாமல், புதைந்து, போகவும் கூடுமே என்று ஆசைப்பட்டிருக்கலாம்!

ஆனால், பாட்டி ஆசைப்பட்டது நடக்காமல், அஞ்சியதுதான் நடந்திருக்கிறது!

விதி என்று ஒன்று இருக்கிறதே! பிறக்கும் போதே எழுதப்பட்ட அவளது தலைவிதி!

காரணம் இன்றி எதுவும் நடப்பது இல்லை என்று, எதிலோ படித்தது, தொடர்பற்று நினைவு வந்தது. அப்படியானால், இது எதற்காக நடந்தது?

இனி? இனி என்ன ஆகும்?

எப்படியும், இந்த வீட்டில் அவள் இருப்பது கடினம்!

வேறு என்ன... என்று யோசித்தவாறே, கையிலிருந்த சல்வாரைப் பெட்டியில் வைக்க முனைந்தபோதுதான், தன் பெட்டி ஒன்றில் சில பல பொருட்களை அடுக்கிக் கொண்டிருப்பதை, ஒரு திடுக்கிடலுடன் சுந்தரவதனி உணர்ந்தாள்.

உணர்ந்தவளுக்கு, ஒரே திகைப்பாக இருந்தது!

பெட்டியுள் இருந்தவைகளைப் பார்க்கையில், இன்னமும் பிரமிப்பாக இருந்தது. அவளது கல்விச் சான்றிதழ்கள், பாங்க் கணக்கு தொடர்பானவை, அடியில் பாட்டி தந்த பாஸ்புக்!

யோசனையாகச் சுற்றிலும் பார்த்தபோது, பாட்டிக்காகவோ, பிற காரணங்களுக்காகவோ, அவளுக்கு வாங்கிக் கொடுக்கப்பட்ட நகைகள் அத்தனையும், டிரெஸ்ஸிங் டேபிள் மீது அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

எல்லாமே, இந்த அறைக்குள் வந்து... சுமார் ஒரு மணி நேரம் இருக்குமா? அந்த அவகாசத்தில், இன்னது இப்படி என்ற யோசனையே இல்லாமல், தன் உணர்வின்றியே செய்திருக்கிறாள்!

அப்படியானால், இங்கிருந்து வெளியேற, அவளது ஆழ் மனம் தயாராகி விட்டதா? அப்படித்தானே, அர்த்தம்?

போக வேண்டியதுதான். கண்ணில் படும்போதெல்லாம், ஒரு வீட்டரசிக்கு வேதனையைத் தந்து கொண்டு, அந்த வீட்டிலேயே ஒருவர் இருப்பது, கூடாதுதான்! நியாயமும் இல்லை!

ஆனால் எங்கே போவது? எப்படி போவது?

இந்தக் கோடானு கோடி மக்களில், அவள் எந்த முக்கியத்துவமும் இல்லாத ஒரு பிறவியாக இருக்கலாம். ஆனால், அதற்காக காற்றடிக்கிற திசையில் பறந்து, எங்கோ விழுகிற வெறும் தூசியாக இருக்க, அவளால் முடியாது. மாறாக... பின்னே என்ன செய்வது?

யோசிக்க வேண்டும்! அடுத்து என்ன செய்ய வேண்டும்?

இங்கிருந்து செல்லும்போது... செல்லுமுன்...

கதவைத் தட்டும் ஒலியில், வதனி விக்கித்து நின்றாள். எதற்கு, யார் தட்டுகிறார்கள்? அவளைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளப் போகிறார்களா? ஆனால்...

கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தவன் ரமேஷ்!

அவளுடைய அன்பான அண்ணன்! ஆனால்... அது, ஒரு மணி



நேரத்துக்கு முன்பாக என்று, அவனது இறுகிய முகம் சொன்னது.

அண்ணா என்று அழைக்க வாயெடுத்தவளுக்குக் குரல் எழும்ப மறுத்தது.

எவளோ தட்டுக் கெட்டவள் பெற்றுப் போட்ட பெண்ணுக்கெல்லாம், நான் அண்ணன் இல்லை என்று சினந்தால்?

பெற்றுப் போட்டவள், குழந்தை வேண்டாம் என்றால் அப்படியே கழுத்தை நெறித்துக் கொன்றிருக்கலாமே! அவளை, ஐந்து லட்ச ரூபாய்க்கு விற்கிற கேவலத்தை வேறு செய்து... வேண்டாத பிள்ளையை விற்று, வளம் தேடிக் கொண்டாளாக்கும்! அவளை...

புரிந்துவிட்டது!

திக்கு திசை அறியாமல், என்ன செய்ய வேண்டும் எதுவும் தோன்றாமல் தடுமாறிக் கொண்டிருந்தவளுக்கு, இனி என்ன செய்ய வேண்டும் என்று, இப்போது புரிந்துவிட்டது!

இன்னமும் கையில் இறுகப் பற்றிக் கொண்டிருந்த சல்வாரை, மெல்லக் குனிந்து பெட்டியுள் வைத்தாள்.

அதற்குள் அறையின் நிலவரத்தைக் கண்டு விட்டிருந்த ரமேஷின் முகமும் லேசாக இளகியிருந்தது.

"வந்து... நிலைமை புரிந்து, நீயாகக் கிளம்புவது சற்று நிம்மதியாக இருக்கிறது. ஆனால் அம்மாவை எண்ணிப் பார்க்கும்போது... சே, அம்மா ரொம்பப் பாவமில்லை?"

அம்மா பாவம்தான். ஆனால், நான்? நானும்தான் என்ன பாவம் செய்தேன்? சுந்து, சுந்தும்மா என்று உருகுகிற... இல்லை, உருகியவனுக்கு, தன்னந் தனியாக அந்த சுந்து என்ன செய்வாள் என்கிற எண்ணமே வரவில்லையா? ஒருதரம்கூட?

ஏக்கத்துடன் நோக்கியபோது, இல்லவே இல்லை என்றது, ரமேஷ் தொடர்ந்து பேசிய பேச்சு "சே! பெற்ற பிள்ளை, நான் கூட, அம்மாவைத் தப்பாக நினைத்து, எவ்வளவு பெரிய குற்றம்! ஜாடை மாடையாக அதை எத்தனை முறை காட்டியிருப்பேன்! சும்மாவே, துரோகம் செய்த கணவன்! பிள்ளையும் விலகிப் போவதை, எப்படித்தான் தாங்கினார்களோ! பாட்டி பயத்தால் வெளியே காட்டவும் முடிந்திராது! உள்ளுக்குள்ளேயே குமுறிக் குமுறி... அம்மாவுக்கு நான் செய்த அனியாயத்துக்கு, என் வாழ்க்கை முழுவதும் பரிகாரம் செய்தாலும்

நீராது!" என்று வருந்தினான்.

ஏதோ முடிவுக்கு வந்தவன் போல நிமிர்ந்து "இனி வாழ்க்கை முழுதும் அதைத்தான் செய்யப் போகிறேன். அம்மா பட்ட துன்பங்களுக்கெல்லாம் ஈடு கட்டப் போகிறேன். ம், அதற்காகத்தான் இப்போதுகூட, இங்கே வந்தேன்" என்று வந்த வேலையைச் சொல்லத் தொடங்கினான்.

சுந்தரவதனிக்குப் புரிந்து போயிற்று!

ஆங்கிலத்தில் 'க்ளீன் கட்' என்பார்கள். அதுபோல, அடியோடு விலகச் சொல்லப் போகிறான்!

ஆனால், இப்போது அவளும் அதற்குத் தயாராக இருந்தாள். அவளுக்குத் தேவை, ஒன்றே ஒன்றுதான். ஆனால், அந்தப் பேச்சை எடுக்க வேண்டுமானால், தொடக்கம், அங்கிருந்துதான் வரவேண்டும்.

வந்தது!

"இதோ பார் சுந்தரி, நீ கெட்டிக்காரி. நான் இவ்வளவு நேரம் சொன்னது, உனக்கு நன்றாகப் புரிந்திருக்கும். என் அம்மா, இனி வேதனைப்படக் கூடாது. அது நடக்க வேண்டும் என்றால், நீ முழுமையாக வெளியே போய்விட வேண்டும். அதாவது, சும்மா இப்போதைக்கு மட்டும் வீட்டை விட்டுப் போவது மட்டும் அல்ல. தொழில், வாழ்வு எல்லாவற்றிலும் இருந்து, அடியோடு, முழுதாக விலகிப் போய்விட வேண்டும். தொழிலில் பாட்டி உனக்குத் தந்திருக்கும் பங்குகளுக்குப் பணம் வாங்கிக்கொள். இதோ, இந்த நகைகள், நீ விரும்பித் தேர்ந்தெடுத்து வாங்கியவை! அவைகளை நீயே வைத்துக் கொள்ளலாம், இன்னும்..."

"வேண்டாம்" என்றாள் அவள் ஒற்றைச் சொல்லாக.

"என்னது வேண்டாம்? இந்த நகைகளா?" என்று புரியாமல் வினவினான் ரமேஷ்.

"எல்லாமே. நகை, பணம், தொழிலில் பங்கு எதுவுமே வேண்டாம். ஆனால்..."

சுந்தரவதனி மெல்லிய குரலில் கூறி வரும்போதே, பெரியவன் முகம் சட்டெனக் கடுத்தது.

"எதுவும் வேண்டாம் என்றால்? வீட்டில் மட்டும் இடம் வேண்டும் என்கிறாயா?" அது முடியாது என்றுதானே, இவ்வளவு நேரம்..."



"வீட்டில் இடம் வேண்டாம்"

"வாட்?! அதுவும் வேண்டாமா? ஆனால்... ஆனால் என்றாயே, வேறு என்ன கேட்கப் போகிறாய்?" என்று அவளை, ஐயப் பார்வை பார்த்தான் அவன்.

"எனக்கு, அப்பாவுடன் பேச வேண்டும்"

"இப்போது புரிந்து விட்டது!" என்றான் ரமேஷ். "அப்பாவிடம் அழுது, குழையடித்துக் காரியம் சாதிக்கப் பார்க்கிறாயாக்கும்! நானும், அம்மாவும் அப்பா கூடவே இருப்போம்! ஒன்றும் பிடுங்க முடியாது!" என்றான் மிரட்டுவது போலே.

முகத்தில் மாறுதலே இல்லாமல், "நான்தான், பணம் பொருள் இங்கே தங்கி இருப்பது எதுவும் வேண்டாம் என்கிறேனே!" என்றாள் சின்னவள்.

"பின்னே?"

"எனக்குச் சில விவரங்கள் வேண்டும். அவைகளை, அப்பா மட்டுமே கொடுக்க முடியும். அதற்காகத்தான், அப்பாவிடம் பேச வேண்டும்"

ரமேஷின் புருவச் சுருக்கம், ஒரு கணம் மறைந்தது.

சற்று இரக்கத்துடன் "ஓ! உன்... உன்னைப் பெற்றவள் பற்றிக் கேட்கப் போகிறாயா?" என்று வினவியவனின் இளகல், உடனே மறைந்தது. "ஆனால், அம்மா கூட இருப்பார்களே! அவர்களுக்குக் கஷ்டமாக இருக்குமே" என்றான் கவலையோடு!

எனக்கு? இந்தப் பேச்சே, எனக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கக்கூடும் என்று, உனக்கு ஒரு தரம் நினைத்துப் பார்க்கத் தோன்றவில்லையே அண்ணா, என்று புலம்பிய மனதை அடக்கிக்கொண்டு, "அப்படியானால் அம்... அவர்கள் அங்கே இல்லாமல் பார்த்துக் கொள்வது, உன் பொறுப்பு" என்றாள் சின்னவள்.

"ஆமாம், அவர்களோடு நான் பேசிக் கொண்டு... ஊகூம், அது எப்படி முடியும்? நாங்கள் இருவருமே இல்லாததைப் பயன்படுத்திக்கொண்டு, அப்பாவிடமிருந்து, நீ பெரிதாக எதையும் அடித்துப் போய்விட மாட்டாய் என்று என்ன நிச்சயம்? ஊகூம். அது முடியாது!"

தமையனை வெறித்துப் பார்த்து "நான், உன் தங்கை என்பதை அடியோடு மறந்து பேசுகிறாயே!" என்றாள் சுந்தரவதனி.

"தங்கைதான். ஆனால், அப்பா வழியில் மட்டும் என்பதுதானே,

உதைக்கிறது! அவரே மோசம்! அத்தோடு, பணத்துக்காகப் பெற்ற குழந்தையை விற்ற ஒருத்தியுடைய மகளும் கூட எனும்போது, உன்னிடம் நல்லதை எப்படி எதிர்பார்ப்பது?"

மெல்லத் தலையசைத்தாள் அவள். இவனிடம் பேசிப் பயன் இல்லை. கழுத்திலும், காதிலும் தொங்கும் மிகச் சின்ன தோடு, சங்கிலி தவிர, கை வளையல் உட்பட, பெரிய சிறிய நகைகள் அத்தனையையும் மேஜை மேல் வைத்திருக்கிறாள். அதைப் பார்த்த பின்னும், இப்படிச் சொல்கிறவனிடம், என்ன பேசுவது?

குரலும் முகமும் கடினமுற, "அப்படியானால், கொஞ்சம் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை என்று, தாயும் பிள்ளையும் அங்கேயே காவல் இருங்கள். எப்படியும், நான் ஒரேயடியாகப் போய்விடுவேன் என்பதை நிச்சயமாக அறியும்போது ஏற்படும் மகிழ்ச்சி, இந்தத் துன்பத்தை ஈடு கட்டி விடும்தானே? அதனால், தைரியமாக, அவர்களை அங்கேயே இருக்கச் சொல்லு! ஆனால், நான் அப்பாவிடம் பேசியே தீர வேண்டும்" என்றாள் சுந்தரி, கறார்க் குரலில்!

ஒருகணம் திகைத்து விழித்துவிட்டு, "என்ன மாதிரிப் பேசுகிறாய்! அம்மா சொன்ன மாதிரி, இவ்வளவு நாள் மறைத்து வைத்திருந்த உன் கோரைப்பல்லும், கூர் நகங்களும் இப்போதுதான் வெளிச்சத்துக்கு வருகின்றன போலும்! பரவாயில்லை. பிழைத்துக் கொள்வாய்! அப்பாவிடம் பேச, ஏற்பாடு செய்கிறேன்" என்று விட்டுக் கிளம்பியவன், கதவருகில் நின்று, "என்னமோ ஒன்றுமில்லாமல் விரட்டியது போல, உடுமாற்றுக்கு இரண்டு துணிகளை மட்டும் எடுத்துக் கொண்டு போக வேண்டாம். எல்லாவற்றையும், அந்த நகைகளைக் கூட, எடுத்துக் கொண்டே போ. உன்னை நினைவுபடுத்தும் எதுவும் இங்கே இருக்க வேண்டாம்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

கண்மூடி திறந்தவளுக்கு, இதுவும் நல்லதுதான் என்று தோன்றியது. இந்த அண்ணனுக்காகவும், ஏங்க வேண்டியிராதே!

பெற்ற தாயைப் பற்றிய விவரங்களுக்காக மட்டுமே, அவ்வளவு காலம் தனதென்று நினைத்த அனைத்தையுமே விட்டுக் கொடுக்க, சுந்தரவதனி தயாராக இருந்தாள்.

பாட்டி கொடுத்த தொழில் பங்குகளையும் கூட!

ஆனால், அந்த அளவு தியாகங்களுக்கு ஏற்ற அளவில், அவளுக்கு



விவரங்கள் பெரிதாக எதுவும் கிடைக்கவில்லை.

சுந்தரவதனியைப் பெற்றவளின் பெயர் வனிதா என்றார் சிவஞானம்.

சிறு திகைப்பின் பின், பாட்டி பரவாயில்லையே என்று சுந்தரிக்குத் தோன்றியது.

ஆனால் அதற்குள் "உன் பாட்டிக்கு குசும்பைப் பாரேண்டா!" என்று வீறிட்டாள் மரகதம்.

ஆண்கள் இருவரும் புரியாது பார்க்கையில் "தன் பெயர் பேத்திக்கு என்று முதல் பாதியை வைத்த மகராசி, அந்த 'வனிதா' என்ற பெயரை லேசாக மாற்றி 'வதனி' என்று வைத்திருக்கிறார்கள் பார்! உன் அப்பா, அவளை மறந்துவிடக் கூடாதாம்! ரகசியமாக, அவ்வப்போது போய்ப் பார்க்க, அனுப்பி கூட வைத்திருக்கலாம்! என்ன போனீர்களா?" என்று ஆங்காரத்துடன் கேட்டாள்.

பெற்றவளுக்கு ஒரு சிறு மரியாதை என்று எண்ணியதை, எவ்வளவு கொச்சைப் படுத்திவிட்டாள், இந்த இன்னோர் அன்னை!

"ஐயய்யோ! பெயரில் இருக்கும் இந்த ஒற்றுமைகூட, நீ சொன்ன பிறகுதான், எனக்குத் தெரிகிறது! நான் தப்பு செய்ததே, அந்த ஒரே ஒரு தடவைதான். மற்றபடி, நான் ராமன், மரகதம்! என்னைப் போய், இன்னும் சந்தேகப்படுகிறாயே!"

கெஞ்சிக் கொஞ்சி, அவர் பேசிய விதம், சுந்தரிக்கு அருவருப்பாக இருந்தது என்றால், மனைவியின் கத்தலுக்குப் பிறகு, மற்றவளைப் பற்றி மேலே பேசுவதற்கு, சிவஞானத்துக்கு அச்சமாக இருந்தது போலும்! மகனின் ஆதரவு வேறு, இப்போது மனைவிக்கு முழுதாகப் போய்விட்டதே!

எனவே, வனிதாவைப் பற்றி மேலே எதுவுமே தெரியாது என்று சாதித்தார்.

அவரைக் கூர்ந்து பார்த்த மகளுக்கு விஷயம் புரிந்தது. "என்னைப் பெற்றவள் இப்போது எங்கே, என்னவாக இருக்கிறாள் என்று நான் உங்களிடம் கேட்கவில்லை, அப்பா. அது, உங்களுக்குத் தெரிந்திருக்காது என்று, எனக்கு நன்றாகப் புரிகிறது. என்னை விற்று விட்டுப் போனவர்களோடு, அதற்குமேல், உங்களுக்குத் தொடர்பிருக்க வாய்ப்பே கிடையாதுதான். ஆனால் நான் கேட்பது, முன்கதை, நான்

பிறக்குமுன்... அந்தச் சமயத்தில் அவர்கள் எங்கே என்னவாக இருந்தார்கள்? அவர்களுடைய குடும்பம்... வயது... இந்த மாதிரி விவரங்கள். அதைத்தான் கேட்கிறேன்" என்றாள்.

ரமேஷுக்கு விஷயம் புரிந்தது போலும். அத்தோடு இந்த விவரம் தெரியும்வரை, சுந்தரி இங்கிருந்து செல்ல மாட்டாள். இந்தப் பேச்சு தாய்க்குத் தரும் துன்பமும் தீராது என்று உணர்ந்தவனாக, "சொல்லுங்களேன், அப்பா! இருபத்தியிரண்டு ஆண்டுகளுக்கு முன் பாட்டி ஐந்து லட்சம் ரூபாய்க் கொடுத்து இவளை வாங்கி வந்தார்கள் என்றால், அவள் ஒன்றும் தெருவில் சுற்றுகிறவளாக இருக்க முடியாது. ஏதோ, குடும்பம், முகவரி என்று இருக்கத்தானே செய்யும்? அதைச் சொல்லி, சீக்கிரமாக இந்தப் பேச்சை முடித்து, இவளை அனுப்பி வையுங்களேன்!" என்று காய்ந்தான்.

"செல்ல மகளாயிற்றே! தாயைப் போல ஏதோ ஜாடை இருக்கிறதோ, என்னவோ? அவ்வளவு சீக்கிரமாக அனுப்ப மனம் வருமா?" என்று எங்கோ பார்த்தபடி, தெளிவாக முணுமுணுத்தாள் மரகதம்.

சுந்தரியின் முகம் வாட்டமுற, "சொல்லித்தான் தொலையுங்களேன்!" என்று எரிந்து விழுந்தான் மகன்.

"அது... அவளது வீட்டு விலாசம் எனக்குச் சரியாகத் தெரியாது. அண்ணன் குடும்பத்தோடு இருந்தாள்... அப்போது பங்களூருவில், எம்ஜி சாலையின், இரண்டாவது கிளைத் தெருவில், 'ப்ரைமா' என்று ஒரு சாதாரண ஆட்டோமொபைல் கடையில், பில் போடுகிறவளாக இருந்தாள். நம் தயாரிப்பு சிலதை அங்கே விற்கப் போனபோது..."

"போதும்.." என்று அதட்டினான் ரமேஷ். "அதற்குமேல், நீங்கள் குணம் கெட்டுக் கூத்தடித்த கதையெல்லாம் எங்களுக்கு வேண்டாம்" என்றவன், தங்கையிடம் திரும்பி, "உனக்கு இவ்வளவுதானே தேவை? விடுதலை எழுதிக் கொடுத்துவிட்டுக் கிளம்புகிறாயா?" என்று அவளை விரட்டுவதிலேயே குறியாகக் கேட்டான்.

தாயார் மனம் வருந்தாமல் காப்பாற்றுகிறானாம்.

முகத்தை அமைதியாக வைத்துக்கொண்டு "நீ உரிய விதமாக எழுது, அண்ணா. நான் கையெழுத்துப் போடுகிறேன். அதற்குள் அப்பாவிடம் இன்னும் ஒரு விவரம் மட்டும் கேட்டு விடுகிறேன்" என்று விட்டுத் தந்தையிடம் திரும்பினாள் சுந்தரி.



"நான்தான்... அந்த வனிதாவிடைய பெண் என்று காட்டக் கூடிய விதமாக, ஏதாவது இருக்கிறதா? அதாவது, திடுமெனப் போய் நின்று, நான்தான் மகள் என்று சொன்னால், நம்புவது கடினம் ஆயிற்றே என்று கேட்கிறேன். அடையாளமாகக் காட்டுவதற்கு, ஏதாவது மோதிரம், சங்கிலி, பெண்டன்ட்... இதுபோல ஏதாவது இருக்கிறதா?" என்று வினவினாள்.

அலட்சியமாக உதட்டைப் பிதுக்கினார் சிவஞானம். "அவளே ஒரு அன்றாடம் காய்ச்சி! மேலே படிக்கக் கூட பணம் இல்லாமல், பிளஸ் டூவோடு படிப்பை நிறுத்திவிட்டு, வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். உடுமாற்றுக்கு மூன்றாவது துணியே, நான் வாங்கிக் கொடுத்ததுதான். அப்படிச் சாப்பாட்டுக்கும் துணிக்கும் கழுத்தை நீட்டி வந்த கழுதை. உனக்கு அடையாளமாக நகை கொடுப்பதா? வேடிக்கைதான்!" என்றார் உதாசீனமாக.

அருவருப்புடன் பெற்றவரைப் பார்த்தாள் சுந்தரவதனி.



## தேடினேன் வந்தது 3

அந்தப் பெண் வனிதா அன்றாடம் காய்ச்சி என்பதோ, சாப்பாடு துணிக்காக வந்தவள் என்பதோ தெரியாமலா, இந்த மனிதர் அன்று அவளோடு இணைந்து பழகினார்?

அப்படிப் பழகியதன் சான்றாகக் கிட்டத்தட்ட அவரது உயரத்தில் வளர்ந்து நிற்கும், மகளை வைத்துக்கொண்டு, என்ன பேச்சு பேசுகிறார்!

எதற்காக, தன்னைப் பெற்றவளைத் தந்தை இழித்துப் பேசுகிறார் என்பது, சுந்தரிக்குப் புரியாமல் இல்லை! ஆனால், இந்த மனைவியும், மகனும் இருபத்தியிரண்டு ஆண்டுகளுக்கு முன்பல்லவா, அவருக்கு நினைவு வந்திருக்க வேண்டும்!

மறுத்துப் பேச, அந்தப் பெண் இங்கே இல்லாத நிலையில், குறைந்த பட்சமாக, அவள் பெற்ற மகளின் முன்னிலையிலேனும், இந்த மாதிரி அவர் பேசியிருக்கக்கூடாது!

உள்ளே கனன்ற தீயை வெளிக்காட்டாமல் அடக்கி "அப்பா, நான் பாட்டிக்கு மகாபாரதம் வாசிப்பேனே, நினைவு இருக்கிறதா? அதில்,

மகன் சாவதற்குக் காரணமாக இருந்த ஜயத்ரதனைக் கொல்வதாக சபதம் செய்யும் அர்ஜுனன், அந்த சபதத்தைச் செய்து முடிக்காவிட்டால், சில கொடிய பாவிகள் செல்லும் நரகத்துக்குப் போவதாகச் சொல்லுவான். அதில் ஒன்று என்ன மாதிரிப் பாவம் தெரியுமா? ஒரு பெண்ணோடு இன்பமாக இருந்துவிட்டு, அந்தப் பெண்ணையே இழிவாகப் பேசுகிறவர்கள் செல்லுகிற நரகத்துக்குப் போவேன் என்பான்! உங்கள் மகிழ்ச்சிக்குச் சான்றாக, நான் இதோ இருக்கிறேன். ஆனால்... பாவம், என்ன கதி காத்திருக்கிறதோ?" என்று சிறு வெறுப்புடன் கூறியவள், அதற்குமேல், பெற்றவரை ஏறிட்டும் பார்க்கவில்லை.

ரமேஷிடம் திரும்பி "எழுதியாயிற்றா?" என்று கேட்டு, அவன் மௌனமாக நீட்டிய காகிதத்தை வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு, அடியில் ஒட்டியிருந்த கோர்ட் ஸ்டாம்பின் மீது கையெழுத்திட்டாள்.

"அந்த நகைகள், கூடக் கொஞ்சமும் பணமும் வேண்டுமானால்..." என்றுதொடங்கி, அவன் ஏதோ சொல்லத் தொடங்கியதை நின்று கேளாமல், பெட்டியைத் தூக்கிக்கொண்டு, மடமடவென்று வெளியே சென்றுவிட்டாள்.

பாட்டி கொடுத்திருக்கும் பணம், அவளிடம் நிறையவே இருந்தது.

பழக்க தோஷம் விடாமல், அவளுக்காகவும் சற்று கவலைப்படும் அண்ணனிடம் அது பற்றிச் சொல்ல வாயெடுத்தவள், சட்டெனத் தன்னை அடக்கிக் கொண்டாள். வெறும் ஆயிரம் ரூபாயே ஆனாலும், பாட்டியை இழித்துப் பேச, அவன் தாய் தயங்க மாட்டாள். கிட்டத்தட்ட நாற்பது லட்சம் ரூபாயைத் தூக்கிக் கொடுத்திருப்பது தெரிந்தால் சும்மா விடுவாளா?

அதுவும், மகனின் பரிதாபமும், ஆதரவும் தன் பக்கம் இருக்கும் இந்த நேரத்தில்? பாட்டியை வார்த்தைகளாலேயே நார் நாராகக் கிழித்து விடுவாள். பெண்ணையும்தான்!

அதேசமயம், இது சுந்தரிக்கு உரிமையற்ற பணமும் அல்ல. முறைப்படி தத்து எடுக்கப்பட்ட, அதேசமயம் ரத்த உரிமையும் உள்ள வாரிசு.

கழுத்தை நீட்டி என்று, தந்தை வாயை விட்டதிலிருந்து திருமணம் என்று ஏதோ நடந்திருப்பதும் உறுதியாகிறது. சட்டப்படி அந்த வனிதா மனைவியாக முடியாது என்பது, வேறு விஷயம். ஆனால்,



சிவஞானத்துடைய மகள் என்கிற உரிமை, அவளுக்கு உண்டு!

உரிமை உள்ள சொத்தும் தொழிலுமாக அவள் விட்டுக் கொடுத்துவிட்டு வந்திருப்பவைகளின் மதிப்போடு ஒப்பிட்டால், பாட்டி பாங்க்கில் போட்ட பணமாக, அவள் கொண்டு வந்தது, மிக மிகக் குறைவான தொகையே.

அதனால், இந்தப் பணம் பற்றிச் சொல்லாததில் குற்றமே இல்லை என்று அமைதி அடைந்தவளாக, அடுத்து செய்ய வேண்டியது பற்றி, அவள் யோசித்தாள்.

சுந்தரவதனிக்கு, இப்போது அவளுடைய தாயைப் பார்த்தாக வேண்டும். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக! பெற்றவளை வெறுமனே, சும்மாப் பார்த்தால் மட்டும் போதாது! அவளிடம் பேச வேண்டும்!

ரத்தமும் சதையுமாகப் பெற்ற குழந்தையைப் பணத்துக்காக, ஐந்து லட்சம் அந்தச் சமயத்தில் பெரிய தொகையாகவே இருந்திருக்கலாம் என்றாலும், வெறும் பணத்துக்காகப் பத்து மாதம் சுமந்து பெற்ற மகளை விற்க எப்படி மனம் வந்தது என்று கேட்க வேண்டும்.

அந்தக் குழந்தையை, அவர்கள் எப்படியெப்படி நடத்தக் கூடும் என்று ஒரு தரம் யோசித்தால்கூட, பிள்ளையைத் தூக்கிக் கொடுக்க முடியுமா?

சொல்லப்போனால், பாட்டி தந்த பணத்தை சுந்தரி ஏற்று வந்ததன் முக்கியமான காரணமே, இதுதான்! பெற்று விற்றவளைக் கண்டுபிடித்துக் கேட்பது!

மற்றபடி, அவளது கல்வித் தகுதிக்கு, அவளுக்கு, அடுத்தவர் உதவி தேவையே கிடையாது! அவளாகவே, நிறையச் சம்பாதித்து, நன்றாக வாழ முடியும். பாட்டியின் தயவில் கிடைத்த அந்தக் கல்வியே, அவளுக்குப் போதுமானது.

ஆனால், இருபத்தியிரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு பெரிய நகரத்தில், ஓசையின்றி வாழ்ந்த ஓர் ஏழைப் பெண்ணைக் கண்டுபிடிப்பதற்கு, எவ்வளவு செலவு ஆகக்கூடும் என்று, அவளுக்குச் சுத்தமாகத் தெரியாது!

எவ்வளவு செலவு ஆனாலும், அதுதான் முதல் வேலை, அதன் பிறகுதான், ஒரு வேலையைத் தேடித் தன் காலில் நிற்பது எல்லாம்

என்று தீர்மானித்தாள்.

அதன் முதல் படியாக, ஒரு துப்பறியும் நிறுவனத்தை நாடிச் சென்றாள், சுந்தரவதனி.

நிறுவனத் தலைவர், அவரது நாற்பதுகளில் இருந்தார்.

தாயைப் பற்றித் தனக்குத் தெரிந்த தகவல்களை, வாய்விட்டுச் சொன்னபோதுதான், இவ்வளவு கொஞ்சமான தகவல்களை மட்டுமே வைத்துக்கொண்டு, அதுவும் இருபதுக்கும் மேலான ஆண்டுகளுக்கு அங்கே இருந்தவளைத் தேடிப் பிடித்துக்கொடு என்றால், எப்படி முடியும்? சாத்தியமே கிடையாது என்று கையை விரிக்கத்தான் போகிறார் என்று அவள் கலக்கத்துடன் பார்த்தபோது, நம்பிக்கை ஊட்டும் விதமாக முறுவலித்தார், நடேசன். துப்பறியும் நிறுவனத்துடைய தலைவர்!

"பெயர் சொல்லிவிட்டீர்கள். வேலை செய்த இடம். பொருளாதாரம். ஓரளவு குடும்ப நிலை எல்லாம் சொல்லி விட்டீர்கள். இதற்குமேல் விவரம் தெரிந்தால், கண்டுபிடிப்பதற்கு, நாங்கள் எதற்கம்மா? உங்களுக்கே, அது சாத்தியமாகி விடுமே!"

"இனி, நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். 'காஷ் கவுண்டரி'ல் முன் பணமாக ஒரு தொகை கட்டச் சொல்லுவார்கள். செலவாகிவிட்டால். மீண்டும் பணம் கட்ட வேண்டியிருக்கும். சும்மா, ஏதோ மிஷின் ரிப்பேர் வேலை போல. இந்திந்த வேலைக்கு இவ்வளவு பணம் என்பது போல, இதில் கறாராகத் தொகையைச் சொல்ல முடியாது. ஒரு சில வேலைகள், ஊர் ஊராகச் சென்று கூடச் செய்ய வேண்டியவைகளாக இருக்கும். அதையெல்லாம் உங்களிடம் பணம் வாங்கித்தானே, நாங்கள் செய்ய முடியும்?"

பணத்தைக் கட்டிவிட்டு, சுந்தரவதனி காத்திருந்தாள்.

பாதுகாப்புக் கருதி, ஒரு பெரிய ஹோட்டலில்தான், அவள் தங்கியிருந்தாள்.

நம்பிக்கையும், அவநம்பிக்கையும், எதிர்பார்ப்பும், நிராசையுமாக இருபது நாட்கள் சுந்தரவதனி தவித்துத் தடுமாறிய பிறகு, திரு நடேசனிடமிருந்து அவளுக்கு அழைப்பு வந்தது.

விழுந்தடித்துக்கொண்டு ஓடிப் போனாள் சுந்தரவதனி.

சாதாரண முகமனாக ஏதோ சொல்ல வாயெடுத்தவர், அவளது முகத்தைப் பார்த்ததும், முதல் வார்த்தையாக "கண்டுபிடித்துவிட்டோம்"



என்றார்.

ராமாயணத்தில் ராமனிடம் 'கண்டேன் சீதையை! என்றாராமே அனுமான். கிட்டத்தட்ட அதுபோல.

முகம் பூவாய் மலர விவரம் கேட்டாள் சுந்தரி.

"திருமதி வனிதா, இப்போது கோயம்புத்தூரில் இருக்கிறார்கள். இப்போது, அவர்கள் டைப்பிஸ்ட் இல்லை. மேலே நிறையப் படித்திருக்கிறார்கள். அதன்மூலம் ஒரு பெரிய மொபைல் ஃபோன் நிறுவனத்தில், எம்டியாக இருக்கிறார்கள். வேலையில் நல்ல பேர், மேடத்துக்கு. கண்டிப்பும் ரொம்பவே, உண்டு என்கிறார்கள்! மொத்தத்தில் அவர்களது நிறுவனம் நன்றாக வளர்ந்திருக்கிறது என்பது, எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை!" என்று அவரது நிறுவனம் சேகரித்த விவரங்கள் அனைத்தையும், அவள் முன் நகர்த்தினார்.

குறிப்புகளை ஆராய்ந்தவளுக்கு மனம் திகைத்தது.

அவளைப் பெற்றவளை யாரோ ஒருத்தியாக எண்ணி, பச்சைக் குழந்தையாக இருந்த என்னை எப்படி விற்கலாம் என்று 'சிண்டைப் பிடித்து உலுக்கி' என்பார்களே, அதுபோலக் கேட்கலாம் என்பது, கிட்டத்தட்ட அவளது திட்டமாக இருந்தது.

ஆனால், ஒரு பெரிய நிறுவனத்துடைய எம்டியிடம் போய் அப்படி, எப்படிக் கேட்க முடியும்?

தொழில் நிர்வாகம் படித்த அவளுக்கு, அதுபோலக் கற்பனை செய்து பார்ப்பது கூடக் கடினமாக இருந்தது.

எம்டி! ஒரு நிறுவனத்தின் சர்வ வல்லமை படைத்த தலைமை அதிகாரி!

முதலில் அவளைச் சந்திப்பதே இலகுவாக இராதே, என்ன காரணத்தைச் சொல்லி, அவளைத் தனியாகப் பார்க்க, அனுமதி கோருவது? அப்புறமாக, இந்த விஷயத்தை அங்கே எப்படி எடுத்துப் பேசுவது?

நடேசனின் தொழில் மூளை, எதிரில் இருந்தவளின் முகத்திலிருந்து ஊகித்ததோ?

"திருமதி வனிதாவுடைய 'சதா செல்ஃபோன்' நிறுவனத்தில் பெரிய அளவில் ஒரு விரிவாக்கம் நடைபெற இருக்கிறது. அதற்கான

பணியாளர்கள் தேர்வுக்காக விளம்பரம் கொடுத்திருக்கிறார்கள். இன்றைய தினப் பத்திரிகையில், அந்த விளம்பரம் வெளி வந்திருக்கிறது" என்று அதிகப்படி விவரம் ஒன்று தெரிவித்தார்.

"எ...எந்தப் பத்திரிகையில், சார்?" என்று பரபரப்புடன் கேட்டாள் சுந்தரி.

"இதோ"என்று ஓர் ஆங்கிலப் பத்திரிகையை எடுத்து அவளிடம் கொடுத்தார் அவர். கொடுக்கும்போதே "நான் படித்து முடித்தாயிற்று. பில் பணத்தைக் கட்டிவிட்டு? பத்திரிகையை வேண்டுமானால் இலவசக் கொசுறாக எடுத்துப் போகலாம்" என்று, அவர் இலகுவாகப் பேசிய விதத்தில் அவளது முகம் தெளிந்தது.

"நன்றி சார்!" என்று பில் பணத்தை எடுத்து, அவரிடமே கொடுத்துவிட்டு, பத்திரிகையோடு கிளம்பினாள், அவள்.

அவளது அறைக்குள் சென்று பத்திரிகையை விரித்துப் படித்தாள்.

பெரிய அளவிலான விரிவாக்கம்தான்! அதற்கு ஏற்ப, நிறையப் பேரை வேலைக்குச் சேர்க்கப் போவதாக அறிவித்திருந்தார்கள்.

அந்த அன்னையைச் சந்திக்க, நல்ல வாய்ப்பு!

இந்த வேலைக்கு எழுதிப்போட வேண்டியதுதான். ஆனால், வேலைக்காக அல்ல.

நேர்முகத் தேர்வுக்கு அழைக்கும்போது 'பட்'டென்று முகத்தில் அடித்தாற்போல, வயிற்றில் பிறந்த குழந்தையை எப்படி விற்றாய்? அதற்கு எப்படி மனம் வந்தது என்று சூடாக இரண்டு வார்த்தை கேட்பதற்காக!

அதைக் கேட்டுவிட்டால், உள்ளூரத் தீப்பிடித்தாற்போல எரிந்து கொண்டிருக்கும் அவமான உணர்வு, பெற்றவளே அவளைக் குப்பையாகக் கருதி வீசிவிட்டது போன்ற குன்றல், மறைந்து போகக்கூடும்!

இருக்கட்டும். இன்னும் சில நாட்கள்!

சட்டென ஒரு கலக்கம்! அவளைத் தேர்வுக்கு அழைப்பார்கள் தானே?

நேர்முகத் தேர்வு வரை வராமல், அதற்குள்ளாகவே, அவளை வடிகட்டிவிட்டால்?

ஆனால், அந்தக் கலக்கம் ஒரு சில வினாடிகள்தான். அவளது



கல்வித் தகுதிக்கும், அதை அடைந்திருக்கும் திறமைக்கும், அவளை நேரடியாகக் கூப்பிட்டு, 'இந்தாம்மா வைத்துக்கொள்' என்று இந்த வேலையைத் தராதிருந்தால், அதுதான் ஆச்சரியம்! நேர்முகத் தேர்வு நிலையிலேயே வடிகட்டுவது, நடக்காத விஷயம்!

அவள் நினைத்தது போலவே, நேர்முகத் தேர்வுக்கு அழைப்பும் வந்தது.

சென்னையில் இருந்து கோவை சென்றது, அங்கேயும் ஒரு நல்ல தரமான ஹோட்டலிலேதான், செலவைப் பாராமல் சுந்தரி தங்கினாள். ஆனால், அங்கே அவள் உண்டது, உறங்கியது எல்லாமே, வெறுமனே சுந்தரவதனியின் உடலையும், புலன்களையும் பொறுத்த விஷயங்களாக மட்டுமே இருந்தது.

மனதளவில், பெற்ற தாயைப் பார்க்கப் போகிறோம், ஏன் இப்படிச் செய்தாய் என்று, அவளிடம் நேரடியாகக் கேட்கப் போகிறோம் என்று, அது மட்டுமே நினைவாக இருந்தது!

பிள்ளை வேண்டாம் என்றால், பெறாமலேயே இருந்திருக்கலாமே! அல்லது, என்னவோ கள்ளிப் பால் ஊற்றுவது, அது இது என்று என்னென்னவோ சொல்கிறார்களே, அதுபோல ஏதாவது செய்து விட்டிருக்கலாமே, இந்த மாதிரி அவமானப்பட்டிருக்க வேண்டாமே என்று, அதே நினைவாக மனம் கொதித்துக் குமுறிக்கொண்டே இருந்தது.

ஆனால் ஒன்று! கொன்று போட்டிருந்தால், ஐ...ந்து லட்சம் பணம் கிடைத்திருக்காது அல்லவா?

பிள்ளையை விற்றுப் பணம் சம்பாதித்த பெரிய மனுஷி. இன்றைக்கு 'சதாசெல்ஃபோன்' நிறுவனத்துக்கு எம்டியாமா? வருகிறேன், தாயே வருகிறேன்! வந்து, உன் முகத்திரையைக் கிழிக்கிறேன்!

நேர்முகத் தேர்வு நாளும் வந்தது.

வேண்டும் என்றே, கொஞ்சம் கேவலமாக உடையணிந்து போகலாமா என்று, ஒரு தரம் சுந்தரி யோசித்தாள். என்ன என்று கேட்டால், 'உன் பெண் வேறு எப்படி இருப்பாள்' என்று பதிலுக்குக் கேட்கலாம் அல்லவா?

உடனேயே கூடாது என்றும் தோன்றிவிட்டது. அவளைப் பொறுத்த வரையில், குறை சொல்லும்படியாக எதுவும் இருக்கக்கூடாது!

பாட்டி சுந்தரம்மாளைப் பொறுத்த வரையில், அவள் மெய்யான பெரிய மனுஷி! பாட்டியின் வழிகாட்டுதலில் பயின்றதால், சுந்தரவதனியின் நடை, உடை, பாவனையிலும், குன்றல், குறைப்பட எதுவும் இராது.

சிறு யோசனையின் பின், மெருனும் க்ரீமுமாக ஒரு சல்வார் செட்டை எடுத்து அணிந்தாள். அடர் நிறத்து கமீசின் சிறு வேலைப்பாட்டுக்குப் பொருத்தமாய் பாட்டமும் துப்பட்டாவுமாக அழகாகவும், அதேசமயம் கண்ணை உறுத்தாததாகவும், கண்ணாடியில் பார்த்தபோது, அவளுக்கே திருப்தியாகவும் இருந்தது.

அடர் கூந்தல் அங்குமிங்கும் பறக்காமல் பின்னே இழுத்து ஒரு 'க்ளிப்' காது, கழுத்தில், எப்போதும் அணியும் மெல்லிய நகை, கையில் சிறு கடிகாரம், கைப்பை.

விண்ணப்பத்தோடு அனுப்பிய நகல்களின் அசல்கள் அடங்கிய ஃபைலோடு, சுந்தரவதனி நேர்முகத் தேர்வுக்கு கிளம்பிவிட்டாள்.

அதாவது, பெற்ற தாயைப் பார்ப்பதற்கு! பார்த்துக் கேள்விகளை, அவள் கேட்பதற்கு!

ஒரு பெரிய நான்கடுக்குக் கட்டிடம் ஒன்றின் மூன்றாவது, நாலாவது தளங்களில் 'சதா செல்ஃபோனி'ன் அலுவலகம் அமைந்திருந்தது.

நல்ல பெரிய 'லிஃப்ட்'

பொதுவாக, உடலுக்கு ஒரு பயிற்சி என்று, படியேறிப் போவதே அவளுக்குப் பழக்கம் என்றாலும், நேர்முகத் தேர்வுக்காக வந்திருந்த இன்னும் ஏழெட்டுப் பேர் ஏறவும், அவர்களோடு சேர்ந்துகொண்டாள். அப்படிச் செல்லும்போது, தான் எண்ணி வந்த காரியம் நடக்கக் கூடியதா என்ற மலைப்பு, திடுமென சுந்தரவதனிக்கு உண்டாயிற்று.

பல்வேறு செல்ஃபோன்களின் படங்கள், அவைகளைப் பற்றிய விளக்கங்களையும் பார்த்துப் படிப்பதும், ஒத்திடுவதும், கலந்து ஆலோசிப்பதுமாக மற்றவர்களைப் பார்க்கையில்தான், இந்த நேர்முகத் தேர்வு எதற்காக நடத்தப்படுகிறது என்பதே, அவளது மனதில் முழுமையாகப் பதிந்தது!

நாற்பது பேருக்கும் மேலாகத் தேர்வு செய்யப் போகிறார்கள். அதாவது, குறைந்தது, ஐம்பது, அறுபது பேருக்காவது, தேர்வு நடக்கப் போகிறது.



அத்தனை பேரும் வந்திருப்பார்கள் என்பதுகூட, அவளுக்கு முக்கியமில்லை.

ஆனால், அத்தனை பேரையும் ஒருவரே தெரிவு செய்ய முடியாதல்லவா? அந்த அறையில், அதிகாரத்தில் உள்ளவர்களே, இன்னும் பலர் இருக்கலாம். அவர்களுக்கு உதவி செய்யும் அலுவலர்கள்!

அவர்களுடைய எம்டியை, யாரோ ஒருத்தி திடுமென் மரியாதைக் குறைவாக ஏதோ கேட்கத் தொடங்கினால், இவர்கள் அவளை மேலே பேச விடுவார்களா? விரட்டிப் பிடித்து, அடித்துத் துரத்தி விட மாட்டார்கள்?

அதை விடவும், அத்தனை பேர் முன்னிலையில் பெற்றவளை, அவமானப்படுத்துவது எப்படி? அவள் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்து, இந்த நிலைக்கு உயர்ந்தாளோ?

அந்தத் தாய், பெற்ற மகளைக் கைவிட்டிருக்கலாம்! ஆனால், அதற்காக அடுத்தவர் முன்னிலையில் அவளை அவமானப்படுத்த, அந்த மகளால் எப்படி முடியும்?

ஆனால், அதற்காக இவ்வளவு தூரம் வந்துவிட்டு, ஒன்றுமே செய்யாமல், கோழையாக ஓடி விடுவதா? அதுவும் கூடாதே என்று யோசித்தவளுக்கு, இன்னொரு வழி தென்பட்டது.

இப்போதைக்கு, இங்கே வேலை செய்வது, இங்கேயே இருந்து, வாய்ப்புக் கிடைக்கும்போது, பெற்றவளிடம் திட்டமிட்டபடிப் பேசுவது!

நல்ல யோசனை என்று, தன்னைத் தானே பாராட்டிக் கொள்ளும்போது, வேலை தேடிக் கொள்ளும் விதமாக, இந்த நேர்முகத் தேர்வுக்காக, அவள் எந்த விதத்திலும், தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளவில்லை என்பதும், அவளுக்கு மூளையில் உறைத்தது!

தாயைக் கேள்வி கேட்பதிலேயே கருத்துக் குவித்து வைத்திருந்தவளுக்கு, இந்த நிறுவனம் எத்தனை வகை செல்ஃபோன்களை விற்பனை செய்கிறது என்பதுகூடச் சரிவரத் தெரியாதே!

அவசரமாக மற்றவர்களின் பேச்சைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினாள் சுந்தரவதனி!

கூடவே, அங்கங்கே சுவர்களில் மனதைக் கவரும் வண்ணமாக ஒட்டப்பட்டிருந்த செல்ஃபோன் படங்கள்! ஒவ்வொன்றாக அந்தப்

படங்களைப் பார்ப்பது போலவே, அதைப் பற்றி எழுதப்பட்டிருந்த சிறப்பு விவரங்களையும் படித்து, மனதில் இருத்திக் கொண்டாள்.

ஆங்கில எழுத்து வரிசைப்படி அமைந்ததாலோ என்னவோ, சுந்தரவதனியின் பெயர், சற்று தாமதமாகத்தான் அழைக்கப்பட்டது.

உள்ளே செல்ல எழுந்தபோது, கால்கள் சற்றே பலமிழந்திருப்பது போல, சுந்தரி உணர்ந்தாள்.

பெற்றவளை முதல் முதலாகப் பார்க்கப் போவதாலா? ஆனால், அது, இப்போது அவளைப் பாதிக்க விடக்கூடாதே!

நடக்கப்போகும் தேர்வு மட்டுமே, அதில் வெல்வது மட்டும்தான், அர்ஜுனன் குறியாக, அவளது கவனத்தில் இருக்க வேண்டும்! இங்கே வேலை கிடைப்பதுதான், இப்போது முக்கியம்!

மனதுள் இதையே உருப்போட்டபடி, நேர்முகத் தேர்வு நடந்த அறைக்குள் சுந்தரி நுழைந்தாள்.

என்னதான் மனது உருப் போட்டாலும், கண்கள் தாயின் உருவத்தைத் தெளிவாகப் படம் பிடித்தன.

அகன்ற நெற்றி, தெளிவான கண்கள், நேர்நாசி, உதடுகள் அழுந்தியிருந்த விதம், எதிலுமே பலவீனம் தெரியவில்லை!

பலவீனம் என்ன, துளியளவு இளக்கம் கூடக் காணப்படவில்லையே!

பிறந்ததில் இருந்து, இந்தப் பதவியில் இருப்பது போல அல்லவா, காட்சி தருகிறார்கள்!

ஏதோ ஒரு சின்னக் கோயிலில், பேருக்கு ஒரு தாலியை வாங்கிக்கொண்டு, தன்னை ஒருவரிடம் ஒப்படைத்து, ஒரு பிள்ளையையும் பெற்ற பேதமை, இவரிடம் எப்படி இருந்திருக்க முடியும்?

ஒருவேளை... பட்டறிவு என்பார்களே, அந்த அனுபவப் பாடம், இந்தப் பெண்மணியை இவ்வளவு தூரம் செப்பனிட்டு இருக்கிறதா?

திகைப்புடன் நோக்கியவாறு நின்றவளுக்கு என்னென்னவோ தோன்றியது. எவ்வளவு காலம் பார்க்காமல் இருந்தாலும், பெற்ற தாய்க்குத் தன் குழந்தையைத் தெரியாமல் போகாது. குறைந்தது, ஏதோ ஒரு சலனமேனும் தோன்றும் என்று எத்தனையோ கதைகள், திரைப்படங்களில் வந்திருக்கிறதே! இப்போது இந்தத் தாய் அப்படி ஏதேனும் உணர்ந்திருப்பாளா என்று அவளது யோசனை ஓடியது.



ஏனெனில், மகளான அவளுக்கு இருந்தது வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும், உள்ளூர ஒரு விதிர்விதிர்ப்பை சுந்தரி நன்றாகவே உணர்ந்தாள். பேசினால், குரலில் கூட அது தெரியக்கூடும்!

ஆனால், அது, இவள்தான் தாய் என்று நிச்சயமாகத் தெரிந்திருந்தாலும், இருக்கக்கூடும்... ஒருவேளை, பாட்டி சாயலில் இல்லாமல், அம்மாவைப் போல இருந்திருந்தால்... ஆனால் ரமேஷும் பாட்டி சாயல் என்பதால், அண்ணன் தங்கை உறவேனும் கிடைத்தது!

அளவிடுவது போல எதிரில் நின்ற மகளைப் பார்த்த வனிதா, வாய்திறந்து எதையும் பேசுமுன், "மா, பாட்டி சொல்லுகிறார்கள்..." என்று ஏதோ கூறியவாறு ஓர் இளைஞன் அந்த அறைக்குள் வந்தான்.

மா? அம்மாவா?

பிரமிப்புடன் "அதெப்படி முடியும்?" என்று கேட்டாள் சுந்தரவதனி.

"எது, எப்படி?" என்று இருவரின் பார்வையும், கேள்வியும், கூர் அம்புகளாக அவள் மீது பாய்ந்தன!



## தேடினேன் வந்தது 4

அதெப்படி முடியும்?

இந்தக் கேள்வியை இந்த இடத்தில், சுந்தரி எப்படிக் கேட்டாள்?

திகைப்புதான்! இந்தத் தாய்க்கு, அவள் மட்டுமே மகள் என்று எண்ணி வந்தால், இன்னொருவனும் அவளை அம்மா என்பதா?

தன்னை மீறி வாயை விட்டுவிட்டவளுக்கு, இப்போது அதைச் சமாளிக்க வேண்டிய கட்டாயம்!

எம்டி, அந்த இளைஞன் இருவருமே விளக்கம் கேட்டுவிட்டார்களே!

என்ன சொல்வது என்று யோசிக்கும்போதே, ஒரு முரண்பாடும் அவளது கண்ணில் பட்டது!

ஒன்று எம்டியாக அமர்ந்திருந்த, அவளுடைய தாயின் இளமை!

உடம்பையும், மனதையும் மிகவும் சீராக வைத்திருந்ததாலோ என்னவோ, இருபத்திரண்டு வயதுப் பெண்ணான வதனியுடைய தாயாக அவளை ஒப்புவதே கடினமாக இருந்தது. அதற்கும் ஐந்தாறு வயது அதிகம் போலத் தோன்றிய அந்த இளைஞனுடைய தாயாக,

அவள் எப்படி இருக்க முடியும்?

இதில் ஏதோ தவறு இருக்கிறது என்று, உள்ளூர ஆறுதலோடு உணர்ந்தவள், விளக்கம் கேட்டவர்களுக்கு, அதையே பதிலாகக் கூறவும் முற்பட்டாள்.

"அது... அது வந்து...மே...மேடம், நீங்கள் மிகவும் இளமையாய்... சி...சின்ன வயதாக இருக்கிறீர்களே, இ...இ... இந்த வயதுக்காரருக்கு எப்படி அம்மாவாக இருக்க முடியும் என்று... அ...அந்தத் திகைப்பில் கேட்டுவிட்டேன்" என்று தட்டுத் தடுமாறிச் சொல்லி முடித்தாள்.

வரிசைப் பல் தெரிய, அந்த இளைஞன் வாய் விட்டு நகைத்தான் "ஐயோடா, வனிம்மா! உங்களுக்குப் பயங்கர ஐஸ்! ஒரேடியாக உச்சி குளிர்ந்து போகாமல், பார்த்துக் கொள்ளுங்கள்" என்று வனிதாவை இலகுவாக எச்சரித்துவிட்டு, சுந்தரியிடம் திரும்பினான் அவன் "ஆமாம் பெண்ணே, உன் கேள்விக்குரிய பதிலைத் தெளிவாகத் தெரிந்து கொள். எங்கள் வனிம்மாவின் பதிமூன்றாம் வயதிலேயே, நான் பிறந்து விட்டேனாம்!" என்றான் அவன், சற்றே ஏளனம் கலந்த நமட்டுச் சிரிப்புடன்.

பதிமூன்று வயதிலா?

கண்கள் வட்டமாக விரிய "ப... பதிமூன்று வயதிலா? அதெப்படி முடியும்?" என்று மீண்டும் கேட்டாள் சுந்தரவதனி.

"ஆஹா... வனிம்மா, இவள் இந்தக் கேள்வியாலேயே, உங்களை உண்டு இல்லை என்று ஆக்கிவிடுவாள் போலத் தெரிகிறதே! பாரம்மா... இவள் பேரென்னம்மா..." என்று எம்டியின் முன்னே இருந்த ஃபைலை எடுத்துப் பார்த்துவிட்டு மேலே பேசினான். "பார் சுந்தரவதனி... வனிம்மாவுக்கும் எனக்கும் உள்ள உறவு, உன் பிரச்சினை அல்ல! அத்தோடு இங்கே கேள்வி கேட்கும் உரிமையும் உனக்குக் கிடையாது. எனவே, எங்களைப் பற்றிய விவாதத்தை விடுத்து, நீ வந்த வேலையைப் பார்ப்போம். உட்கார்!" என்று நாற்காலியைக் காட்டிவிட்டு, மேஜையைச் சுற்றிச் சென்று எம்டியின் அருகில் இருந்த பெரிய சுழல் இருக்கையில் அமர்ந்து, கையில் இருந்த ஃபைலைப் பிரித்துப் பார்த்தான்.

"பார்த்தீர்களாம்மா?" என்று புருவம் உயர்த்தி, அருகில் இருந்தவளைப் பார்த்தான்.

மறுபடியும் அம்மா என்கிறானே என்று மனம் கடுத்தபோதும்,



இளைஞன் வைத்த குட்டுக்கு பிறகு, அது பற்றிப்பேச சுந்தரிக்குத் தைரியம் வரவில்லை.

"ஆமாம் சதா, அதனால்தான், இவளைச் சற்று தாமதமாக வரவழைத்தேன்" என்றாள், சுந்தரியுடைய அன்னை.

சதா! அப்படியானால், இவன் பெயரில்தான் இந்த நிறுவனம் இருக்கிறது! எம்டிக்குச் சரியாக, இவனும் முக்கியமானவனாகத்தான் இருக்கவேண்டும்!

நிறுவனத்துடைய உரிமையாளன்?

இருக்கலாம்! ஆனால் அவளுடைய தாயை, அம்மா என்கிறானே, அதுதான் நன்றாக இல்லை! பதிமூன்று வயதில் பிறந்ததாக, அது வேறு என்ன கதை!

கம்பீரமாக எழுந்த வனிதாவின் குரலை, ஒரு திடுக்கிடலுடன் சுந்தரி கவனித்தாள்.

"நீ கற்றிருக்கும் கல்வி, அதில் சிறப்பாக வெற்றி பெற்றிருக்கும் விதம் எல்லாம் பார்க்கும்போது, பல நாடுகளில் பரந்துள்ள பெரிய நிறுவனங்களிலேயே, உனக்கு வேலை கிடைக்குமே! ஊதியமும், அதற்குத் தக்க, நிறையக் கிடைக்கும். அப்படி இருக்க, கோவையிலிருந்து தமிழ்நாட்டின் மற்ற ஊர்களுக்கே இப்போதுதான் செல்ல இருக்கும், இந்த சிறு நிறுவனத்தின் வேலையை நாடி, ஏன் வந்தாய்?

பளீரென்று, பாயின்டைப் பிடித்துவிட்டாளே!

என்னைப் பெற்ற தாய், நீ இங்கேதானே இருக்கிறாய், அதற்காகத்தான் என்று உண்மையான பதிலையா சொல்ல முடியும்?

ஆனால், இப்படியொரு கேள்வியை ஓரளவு எதிர்பார்த்தே வந்ததால், தயக்கம் ஏதும் இன்றி, சுந்தரி பதில் சொன்னாள் "மேடம், அங்கெல்லாம் வேலைக்குப்போனால், பெரிய கடலில் ஒரு சின்ன மீனின் நிலைதான் எனக்கு இருக்கும். அதைவிட, ஒரு சின்ன இடத்தில் சேர்ந்து சீக்கிரமே பெரிய ஆளாக வளரத்தான் எனக்கு விருப்பம்" என்றாள்.

"இன்னும் கொஞ்சம் விளக்கம் தேவை"

"சொல்கிறேன், மேடம். நீங்கள் குறிப்பிட்ட அந்தப் பன்னாட்டு நிறுவனங்களில் வேலைக்குச் சேர்ந்தால், 'இந்த' நிறுவனத்தில் வேலை பார்க்கிறேன் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாமே தவிர,

எப்போதும்... குறைந்தது வெகு காலத்துக்கு. அந்தச் சின்ன மீன் நிலைமைதான் எனக்கு இருக்கும். ஆனால், இங்கே அப்படி இராது..."

"அதெப்படி?" என்று கண்ணில் சிரிப்புடன் கேட்டான் அந்த சதா.

அவளது கேள்விகளை நினைவுபடுத்துவது போல இலகுவாகக் கேட்டாலும், உடனேயே "உன்னுடைய அதிகப்படியான கல்வித் தகுதிகள் எங்களுக்குத் தேவை இல்லாதபோது, வேலைக்கு எடுக்கப்படும் மற்றவர்களுக்கும் உனக்கும் என்ன வேறுபாடு காட்டக் கூடும் என்று எண்ணினாய்?" என்று துருவிக் கேட்டான் அவன்.

அவளுக்கு, ஏதோ உள் நோக்கம் இருக்கிறது என்று ஊகித்து விட்டானோ? இந்த மாதிரிக் குறுக்கு விசாரணையை அவள் எதிர்பார்த்திருக்கவில்லையே! பெரிய படிப்பு படித்த கெட்டிக்காரி கிடைத்தாள் என்று நீண்ட கால ஒப்பந்தத்தில் சட்டெனச் சேர்த்துக் கொள்வார்கள் என்று நினைத்தால், இப்படி கேட்டுவிட்டானே!

அவசரமாக யோசித்து "அந்த மாதிரி நினைக்கவில்லை சார். ஆனால் உங்களது வளர்ந்து வரும் நிறுவனம் இல்லையென்றால், விரிவாக்கம் செய்வது முடியாது. இப்போது பல ஊர்களுக்கும், இங்கேயே பல இடங்களுக்கும் செல்லப் போகிறீர்கள். ஒன்றைப் பத்து மடங்காக்கி இருப்பது, இப்போதைய வளர்ச்சி என்றால், அந்தப் பத்தை மறுபடியும் பத்து மடங்காக ஆக்குவது அடுத்த நிலை. அதாவது, பத்திலிருந்து நூறுக்குப் போகப் போகிறீர்கள். வேகமான வளர்ச்சி, அந்த அளவுக்கு. உங்களுக்குத் திறமையுள்ள மேல் நிலைப் பணியாளர்களும் தேவைப்படுவார்கள். இப்போதே, பெரும்பாலானவர்களை விட, என் தகுதி அதிகம் எனும்போது, தானாக அந்த இடம் எனக்குக் கிடைக்கும்தானே? என் 'ப்ராஜெக்ட் ரிப்போர்ட்' பார்த்தீர்கள் என்றால், என் வேலைத் திறன் பற்றி, உங்களுக்கு தெரியவரும்" என்று தன் ஃபைலில் இருந்து, அதை எடுத்து, அவர்கள் இருவருக்கும் நடுவே வைத்தாள்.

அதை லேசாகப் புரட்டியவாறு "இன்றைய பெண்களுக்குத் தன்னம்பிக்கை நிறைய இருக்கிறது... திறமையும்" என்றாள் எம்டி ஒரு மாதிரிக் குரலில்.

தனக்கு இல்லையே என்பது போல... ஆனால், இப்படி ஒரு வெற்றி நிறுவனத்துடைய எம்டியாக இருந்துகொண்டு, அது எப்படி முடியும்?



அவளது மனதையே எதிரொலிப்பது போல "உங்களை விடவாம்மா? இப்படி ஒரு நிறுவனத்தைத் தொடங்கி, வளர்த்திருக்கிறீர்களே! உங்களில் பாதி கூட, யாருமே வர மாட்டார்கள், வனிம்மா!" என்றான் சதா பெருமைக் குரலில்.

"அது ஒரு தேவையில் ஏற்ப...." என்று தொடங்கிய வனிதாவுக்கு, அன்னியாள் ஒருத்தி எதிரில் இருப்பது, அப்போதுதான் நினைவு வந்தது போல, சுந்தரியை ஏறிட்டுப் பார்த்தாள்.

உடனேயே "ஓகே சுந்தரவதனி, இந்த நேர்காணலில் முடிவு, இன்னும் மூன்று தினங்களில், உனக்கு எஸ்எம்எஸ் செய்யப்படும். இப்போது நீ போகலாம்" என்றாள்.

உரியவாறு நன்றி கூறி, அங்கிருந்து வெளியேறிய சுந்தரிக்கு, உள்ளூர ஒரே யோசனை!

அவளுடைய தாயார் ஒரு காலத்தில், அதாவது அவளது சிறு வயதில், ஒன்றும் அறியாத ஒரு கோழையாக இருந்திருப்பாளா? மற்றபடி 'இன்றைய' பெண்களின் தன்னம்பிக்கை, திறமை பற்றி ஏக்கம் தொனிக்க, எப்படிப் பேச முடியும்?

அப்படி இருந்ததால்தான், அப்பாவை முறையற்று என்று கூடத் தெரியாமல், யாரோ அண்ணன் என்று அப்பா சொன்னாரே, அந்த அண்ணன் வீட்டாரின் விருப்பத்துக்காக, வேறு வழியற்று மணந்திருப்பாளோ? பாவம்!

ஆனால்....

பண்டமாற்றுப் போலப் பணத்துக்காக தன்னை விற்ற தாய்க்கு ஆதரவாகச் சப்பைக்கட்டு கட்டுகிறோம் என்று, தன்மீதே, சுந்தரிக்குக் கோபம் வந்தது.

பெற்ற குழந்தையை, ஐந்து லட்சம் ரூபாய்க்கு விற்றவள், கை தேர்ந்த வியாபாரியாக இருக்க முடியுமே தவிரக் கோழையாக எப்படி இருந்திருக்க முடியும்? அவளுக்குப் போய் ஏக்கமாவது, மண்ணாங்கட்டியாவது? ஒன்றுமே இராது! அது நிச்சயம்!

போகட்டும், அது ஒரு பக்கம் இருக்கட்டும்.

இப்போது இந்த சதாவுக்கும் அவளுக்கும் என்ன உறவு?

அம்மா என்கிறான், கூடவே வனிம்மா என்றும் கூப்பிடுகிறான்.

பெற்ற தாயை பெயர் சேர்த்து அழைக்க மாட்டார்கள் என்பதோடு,

வயது வித்தியாசம் வேறு, பெரிதாக இருக்கிறது!

அதனால், இவன் நிச்சயமாக மகனில்லை! நிச்சயமாக என்று நினைக்கும்போதே, சுந்தரிக்கு சற்று நிம்மதியாக இருந்தது. ஆனால் நிச்சயம்தானா?

முறைகெட்ட வழியில் ஒருவன் அண்ணனாக இருப்பதே, இந்தப் பிறவிக்குப் போதும். இன்னொன்று வேண்டவே, வேண்டாம்!

தேர்வு பற்றிய எஸ்எம்எஸ் கொடுப்பதற்குத் தன் செல்ஃபோன் எண், அங்கே பதிவாகி இருக்கிறதா என்று கேட்பவள்போல, வரவேற்புப் பகுதியில் போய், சுந்தரி பேச்சுக் கொடுத்தாள்.

பளீரென்று புன்னகை செய்து, "ஒரே ஒரு நிமிஷம் காத்திருங்கள், மிஸ் சுந்தரவதனி. இதோ பார்த்துச் சொல்லுகிறேன்" என்று உதவும் மனப்பான்மையோடு, சம்பந்தப்பட்ட பிரிவுக்கு அந்தப் பெண் உடனே ஃபோன் செய்து பேசவும், சுந்தரிக்கு மனம் சுட்டது!

ஏனெனில், விண்ணப்பப் படிவத்தில் கேட்டிருந்தபடி, செல் எண்ணை அதில் எழுதியது, அவளுக்கு நன்றாகவே நினைவிருந்தது.

ஆனால், சும்மா வந்து நின்று, அந்த சதாவுக்கும், எம்டிக்கும் என்ன உறவு என்று கேட்டால், நன்றாக இராதே!

ஆனால், ஒன்றை ஐயமறத் தெரிந்து கொண்டால்தான் மனதுக்கு முழு நிம்மதி கிடைக்கும் என்றால், அதற்கான முயற்சியை எடுத்துதானே ஆக வேண்டும்?

வரவேற்புப் பெண் விவரம் கேட்டுச் சொன்னபின், பொதுப்படையாக இரண்டொரு வார்த்தை பேசி, தனக்கு வேண்டிய விவரங்களையும் தெரிந்து கொண்டு பெருநிம்மதி அடைந்த பிறகே, சுந்தரி தன் ஹோட்டலுக்குத் திரும்பிச் சென்றாள்.

முக்கியமாக சதானந்தன்... அந்த 'சதா'வின் விரிவாக்கம்! அவன், வனிதாவுக்கு சொந்த மகன் அல்ல!

இந்த 'சதா செல்ஃபோன்' நிறுவனத்துடைய உரிமைக்கார அம்மாவுடைய பேரன். பாட்டியுடைய மகனும், மகளும் ஒரு விபத்தில் இறந்து போனார்கள். வனிதா மேடம், அந்தப் பாட்டிக்கு ஏதோ வகையில் மகள் முறை. இப்போது எம்டி!

சிறு வயதிலிருந்து, வனிதாவிடம் வளர்வதால், சதானந்தன் அந்த மாதிரி அழைத்துப் பழகிவிட்டான்!



போகட்டும். அவனையாவது, நன்றாக வளர்த்தாளே! ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தான் பிள்ளை தானே வளரும், என்று ஏதோ சொல்வார்களே! அதுபோல, அவளும் நல்லபடியாகவே வளர்ந்தாள் போலும்!

ஆனால், மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் கூட இயற்கையாகக் கிடைக்கும் தாயன்பு, அவளுக்கு இல்லாமல் போனது, போனதுதானே?

அம்மாவுக்குப் பிடிக்கும் என்று எதை எதையோ செய்துவிட்டு, ரமேஷுடைய அன்னை ஒதுங்கிப் போகும்போது, காரணம் தெரியாமல் எத்தனை முறை, எவ்வளவு வருத்தப்பட்டிருப்பாள்!

அதற்கெல்லாம் இந்த வனிதாம்மா பதில் சொல்லித்தானே ஆக வேண்டும்?

சொல்லாமல், சுந்தரி அவளை விடப் போவதே இல்லை!

நேர்முகத் தேர்வின் முடிவுக்காகக் காத்திருந்த மூன்று நாட்களையும் நெட்டித் தள்ளுமுன், சுந்தரவதனி, சற்று அதிகமாகவே சிரமப்பட்டுப் போனாள்.

எவ்வளவு நேரம் பத்திரிகை படிப்பது? எவ்வளவு நேரம் டீவி பார்ப்பது? அறியாத ஊரில் தனியாகச் சுற்றவும், அவளுக்குப் பிடிக்கவில்லை.

மாலையிலும், இரவிலும் தனியாக உணவருந்தப் போவது, தப்பானவர்களின் கவனத்தைக் கவருவதாகத் தோன்றவும், மதியத்திலிருந்து அறையிலேயே அடைந்து கிடந்து, இன்னமும் போரடித்தாள்.

இரண்டு நாட்கள் இப்படிக் கழிந்தபின், மூன்றாவது நாள், அவளுக்கு ஒரு சிறு அதிர்ச்சி நேர்ந்தது.

மதிய உணவை முடித்துக்கொண்டு பில் ரசீதுக்காக சுந்தரி காத்திருந்தபோது "ஹலோ, சுந்தரவதனிதானே, பெயர்?" என்று கேட்டபடி சதானந்தன் அவள் எதிரே வந்து நின்றான்.

ஒருகணம் திகைத்தபோதும், உடனே சமாளித்து எழுந்து "வ...வணக்கம் சார்!" என்று கை கூப்பினாள் அவள்.

சுற்றிலும் பார்வை தேட "யாருக்காகவும் காத்திருக்கிறாயா?" என்று வினவினான் அவன்.

குரலிலோ, முகத்திலோ காட்டாமல் கவனத்தோடு இருந்தாலும்,

அந்தக் கவனமே, அவனது கருத்தை, அவளுக்குக் காட்டியது.

எவன் செலவிலோ தின்பதற்கு, இந்த ஹோட்டலுக்கு வந்திருக்கிறாள்!

"ஆமாம் சார்!" என்று ஒப்புதலாகப் பதில் சொல்லி, அவனது உதட்டோரத்தை லேசாக இறுக வைத்துவிட்டு, "பில் பணத்தைக் கொடுத்துவிட்டு மீதியைக் கொண்டு வரும் சர்வருக்காக" என்றாள் அப்பாவியாக.

விழிகள் கூர்மை பெற "உட்காரலாமே!" என்று அவளது இருக்கையைக் காட்டிவிட்டுத் தானும் அமர்ந்தவன், "என்ன இந்த ஹோட்டல்? உணவு வகை நன்றாக இருக்கும் என்று யாராவது சொன்னார்களா?" என்று மேலும் துருவினான்.

உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போய்யா என்று சொல்ல மாட்டாள் என்கிற தைரியம்! வேலை கிடைத்தால், முதலாளி ஆகக் கூடுமே!

"உணவு பற்றி யாரும் சொல்லவில்லை. ஆனால், இங்கே தங்கி இருப்பதால், இங்கேயே சாப்பிடுவது மேல் என்று நினைத்தேன்" எனறாள் பழைய குரலிலேயே.

இப்போது, அவனது புருவங்கள் உயர்ந்தன "இங்கே தங்கியிருக்கிறாயா? நீ தேடி வந்திருக்கும் வேலைக்கு. இந்த ஹோட்டல் செலவு சற்று அதிகமாகத் தோன்றவில்லை?"

"ரொம்பவே அதிகம்தான், சார்!" என்று பெருமூச்சு விட்டாள், சுந்தரவதனி.

"ஆனால், பழகாத புதிய ஊர். இது உயர் தரமான, நல்ல இடம் என்று, சொன்னார்கள். சிக்கனம் பார்த்துப் தப்பான இடத்தில் மாட்டிக்கொண்டு கஷ்டப்படுவதைவிட, கொஞ்சம் செல்வு அதிகம் ஆனாலும் பரவாயில்லை என்று எண்ணினேன், சார். நீங்கள் வேறு, மூன்று நாட்கள் கழித்துதான் முடிவு தெரியும் என்றுவிட்டீர்கள்? எனக்கு, மூன்று நாள் அதீதச் செலவு, சார்!" என்று தெளிவாக விளக்கம் கொடுத்தாள். தொடர்ந்து "ஆனால், ஒன்று சார்! உங்கள் நிறுவனத்தோடு சேர்ந்து நானும் வளர்ந்த பிறகு, இது ஒன்றும் பெரிய செலவாக இராதுதானே சார்?" என்று பிள்ளை போல ஆவல் காட்டி கேட்டாள்.

அவளை ஒருதரம் கூர்ந்து பார்த்துவிட்டு. "அம்மாவுக்குச்



சொன்னதை, நானும் கடைப்பிடிக்க வேண்டும் என்று தெரிகிறது. உன்னிடம் எச்சரிக்கையோடு பேசுவது, ரொம்பவே தேவைதான்" என்றவனின் உதடுகளில் இளநகை மலர, பதிலாக அவளும் புன்னகை செய்தாள்.

மேலும் சற்று நேரம் அங்கேயே அமர்ந்து, அவன் செலவில் ஐஸ்க்ரீம் வரவழைத்து, அவளோடு உரையாடியவாறே உண்டான். ஊர், உலகில் உள்ள எத்தனையோ விஷயங்களைப் பற்றிக் கலகலப்பாகவே பேசியபோதும், அவளது வேலை பற்றி, அவன் எந்த விவரமும் தந்தானில்லை!

வியக்கத்தக்க விதமாக அது, அவளது இதமான மனநிலையைப் பாதிக்கவுமில்லை!

ஏற்றாற்போல, மறுநாள் காலையிலேயே, அடுத்த நாள் பத்து மணிக்கு அலுவலகத்துக்கு வந்து, பயிற்சிப் பணியில் சேருமாறு, அவளுக்குத் தகவல் வந்துவிட்டது.

வேலை கிடைத்துவிட்டது! பயிற்சிக் காலத்தை, அவள் மிகவும் மோசமாக வீணடித்தால் தவிர, அவளுக்கு வேலை நிச்சயம்!

இனி யோசிக்க வேண்டியது, பெற்றவளை, பெற்றவளான அந்த வனிதாவைத் தனியாக எப்போது, எப்படிச் சந்திப்பது என்பதை மட்டுமே!

பயிற்சிக்காலம் நாற்பத்தைந்து நாட்களும், தங்கும் இடம், உணவை நிறுவனமே எல்லோருக்கும் கொடுத்தது.

எல்லோருமே கடுமையாக உழைத்தார்கள் எனலாம்.

'சதா செல்ஃபோன்' நிறுவனத்தார் விற்கும் பலதரப்பட்ட ரகங்களைப் பற்றிய முழு விவரங்களும் எல்லோருக்குமே உருவேற்றப்பட்டன. வயதுக்கும் வருமானத்துக்கும் ஏற்றபடி, என்னென்ன மாதிரியில், என்ன விலையில் உள்ளன., இன்னும் என்னென்ன தேவை என்பனவெல்லாம் மனதில் ஏற்றப்பட்டன.

கோவையிலும், அதைச் சுற்றிலும் அருகில் இருந்த நகரங்களில் இருந்த 'ஷோரூம்'களிலும் வெளியேயும் வேலைப் பயிற்சி தரப்பட்டது. மக்களின் கருத்தறிதல், முதற்கொண்டு செய்தார்கள்.

கடைசி இரு வாரங்களும், அவரவருக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளைப் பயிற்சியாளர்களின் துணை இல்லாமல், அவர்களாகவே செய்தார்கள்.

நாற்பத்தைந்து நாட்கள் பயிற்சிக் காலம் முடிந்து, மறுபடியும் தலைமை அலுவலகத்தில், கூட்டங்கள் நடக்கும் பெரிய ஹாலில் எல்லோரும் கூடினார்கள்.

தலைமைப் பீடத்தில் எம்டி வனிதா அமர்ந்திருக்க, சதானந்தன் பேசினான்.

திருமணம் ஆகப் போகிறது என்று, இரண்டு பெண்களும், குடும்பச் சூழ்நிலை காரணமாக மூவரும் ஆக ஐந்து பேர் வேலைக்கு வராமல், அவர்களாக விலகிப் போயினர். பயிற்சி என்ற பெயரில், கட்டுப்பாடின்றி ஊரைச் சுற்றிக் கொண்டிருந்த எட்டுப் பேருக்கு ஏற்கனவே மறுப்புக் கடிதம் சென்றுவிட, அவர்களும் வரவில்லை.

மற்ற அனைவரையும், நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ப்பதாக, சதானந்தன், தெரிவித்தான்.

எல்லோருமே, பயிற்சிக் காலத்தில் கடுமையாக உழைத்ததாகவும், வேலைதான் கிடைத்துவிட்டதே என்று, அலட்சியமாக இராமல், பயிற்சி காலத்தைப் போலவே அனைவரும் ஊக்கத்தோடு உழைத்து, நிறுவனத்தை இன்னும் மேலே கொண்டு வர வேண்டும் என்றான்.

"இன்னும் ஒரு முக்கியமான விஷயம் இருக்கிறது. இதை, இங்கே பணி புரியும் எல்லோருமே கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும். அதுபற்றி எம்டி, சொல்லுவார்கள்" என்று கூறி, வளர்ப்புத் தாயைப் பார்த்தான்.

சற்றே முன்னே சாய்ந்து, ஒரு தீவிரத்தோடு எம்டி வனிதா பேசினாள்.

"இந்த நிறுவனத்துடைய அலுவலர்களிடம், நிர்வாகம் மிக முக்கியமான தகுதியாகக் கருதுவது ஒழுக்கத்தை! என் வேலையில் குறையிருந்தால் சொல். மற்றபடி என் வாழ்வு முறை என் இஷ்டம் என்று கருதுகிறவர்கள் யாரேனும் உங்களில் இருந்தால், அவர்கள் இப்போதே இங்கிருந்து வெளியேறி விடலாம்! அந்த ஒரு விஷயத்தில் இங்கே, நீக்குப் போக்கே கிடையாது! 'சதா செல்ஃபோன்' அலுவலர் என்றால், எந்த இடத்திலும், அவர்களுக்கு தனி மரியாதை கிடைக்க வேண்டும். அவர்களது நடத்தையில் சிறு கறை கூடப் படியலாகாது. ஒரு தப்பைக் கூடப் போனால் போகிறது என்று மன்னித்து விடலாம். ஆனால், ஒழுக்கத் தவறை, இந்த நிர்வாகம் ஒருபோதும் சகிக்காது.



நினைவிருக்கட்டும்" என்று ஓர் அழுத்தத்தோடு கூறினாள். தொடர்ந்து "இந்த வேலை, உங்கள் வாழ்வில் ஒரு திருப்பம். இது ஒரு வெற்றிகரமான திருப்பமாக அமைய, என் வாழ்த்துக்கள்!" என்று முடித்தாள்.

கேட்க கேட்க, சுந்தரவதனியின் மனம் கொதித்தது.

கம்பீரமும் நிமிர்வுமாக, ஒரு ராணி மாதிரி, எப்படி வீற்றிருந்து பேசுகிறாள்!

ஒழுக்கத் தவறைச் சகிக்க மாட்டாளாமா? பெரிய ஒழுக்கத் திருவுருவம்!

ஒரே ஒரு கல்யாணம் ஆனவனோடு பழகி, ஒரே ஒரு பெண்ணைப் பெற்றெடுத்து, அவளையும் வெறும் ஐந்தே... ஐந்து லட்சத்துக்குத்தானே, விற்றிருக்கிறாள்!

அந்தம்மாவால், ஒழுக்கத் தவறைச் சகிக்க முடியாது என்றால், கட்டாயம், எல்லோரும் ஒத்துக் கொள்ள வேண்டியதுதான்!

கோபத்துடன் முறைத்தவள், சதானந்தனின் பார்வை சுற்றி வருவதைக் கண்டு சட்டென இமைகளைத் தாழ்த்தினாள்.

இவனது பார்வை, சற்று அதிகமாக ஊடுருவி, உள்வாங்குவது. தாயை ஏன் முறைத்தாய் என்று விசாரித்தால், இப்போது அவளால் பதில் சொல்ல முடியாது!

ஆனால், அவள் கேட்கும்போது, தாய் என்ன பதில் சொல்லக்கூடும்? பூசி மெழுகுவாளா? அல்லது மகள் என்பதையே நம்ப மாட்டாளா? முதலில் தான்தான் மகள் என்று எப்படி நம்ப வைப்பது?

மறுபடியும் சதானந்தனின் குரல் கணீரென்று ஒலித்தது.

"பயிற்சியின்போது நீங்கள் வெளிப்படுத்திய திறமையைக் கொண்டு உங்களுக்கான வேலை, வேலையில் சேர வேண்டிய கிளை எல்லாம் முடிவு செய்திருக்கிறோம். அந்த விவரம், கீழே 'நோட்டிஸ் போர்டி'ல் ஒட்டப்பட்டிருக்கும். போய்ப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள். அதில் குறிப்பிட்டவாறு, அவரவருக்கான இடங்களில், நாளை காலை பத்து மணிக்கு போய், வேலையைத் தொடங்குங்கள். அதாவது, நாளையிலிருந்து, இந்த நிறுவனத்தோடு உங்கள் அலுவல் வாழ்க்கை தொடங்குகிறது. அது சிறப்பாக அமைய, என் வாழ்த்துக்கள்!" என்றான் அவன் புன்னகை புரிந்து.

சேர வேண்டிய கிளையா? ஐயோ, அவளை எங்கே தூக்கிப் போடப் போகிறார்கள்?

விழுந்தடித்துக்கொண்டு, முதல் ஆளாய் ஓடிப்போய் நோட்டீஸ் போர்டைப் பார்த்தாள் சுந்தரவதனி.

அங்கே என்ன விரும்பிப் பார்த்தாள் என்று, அவளுக்கே தெளிவு கிடையாது.

ஆனால், அவள் பணி புரிய வேண்டியது, தலைமை அலுவலகத்திலேயே என்பதைப் பார்த்ததும், 'அப்பாடி' என்று மூடிய இமைகளின் வழியே ஒரு சொட்டு நீர் கசிந்து வெளியேறியது!

தன் கண்களில் நீர்க்கசிவை உணர்ந்தபோது, அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது!



## தேடினேன் வந்தது 5

வேலையைப் பொறுத்தவரை, சுந்தரவதனிக்குக் குறைப்பட எதுவுமில்லை.

நிறையப் பேரைச் சந்திக்க முடிந்தது. தலைமை நிலையம் என்பதால், மொத்த சில்லறை விற்பனை இரண்டிலுமே பங்கேற்க நேர்ந்தது.

கோவையில் இருந்த மற்ற ஐந்து கிளைகளின் விற்பனைக் கணக்கும், தேவைப்பட்டியலும், வாடிக்கையாளர்களின் அபிப்பிராயங்களோடு அங்கேதான் வரும்.

தாயும், மகனும், மற்ற நிர்வாக அங்கத்தினரோடு சேர்ந்து, இந்த விவரங்களைப் பற்றிப் பேசுவதைக் கேட்க, மிகவும் சுவாரசியமாக இருக்கும்.

ஆனால், அதை நின்று கேட்பதற்கு, சுந்தரிக்குப் பயமாகவும் இருக்கும்.

ஒட்டுக் கேட்பதாக எண்ணிவிடக்கூடாதே!

ஆனால், சில சமயங்களில், இந்த விவாதத்தைக் கையால் குறிப்பெடுத்து, கம்ப்யூட்டரில் பிரிண்ட் அவுட் எடுத்துத் தருமாறு, சதானந்தன், வனிதா இருவருமே, அவளிடம் கேட்பதுண்டு.



தொழில், நிர்வாகம் பற்றிய அவளது படிப்பு காரணமாக, அவள் புரிந்து செய்வாள் என்று எண்ணியது காரணமாக இருக்கக்கூடும்.

ஆனால், அன்னையிடம் மெல்ல நெருங்கும் ஒரு வாய்ப்பாகவே சுந்தரி கருதினாள். ஆனால், அவள் விரும்பியது போல, வனிதா 'மேடத்'திடம் தனித்துப் பேசும் வாய்ப்பு மட்டும் அவளுக்கு, லேசில் கிடைப்பதாக இல்லை!

வேலை நிச்சயம் ஆன பிறகு, அந்த பெரிய ஹோட்டலில் தங்குவது அனாவசியப் பண விரயம்தானே? எனவே, மற்ற பெண்களைப் போல, வேலை பார்க்கும் மகளிர் விடுதி ஒன்றில் தங்க, சுந்தரவதனியும் ஏற்பாடு செய்து கொண்டாள்.

படிக்கும்போது பள்ளி, கல்லூரி விடுதிகளில் தங்கிப் பழக்கம் இருந்ததால், அது அவளுக்குக் கடினமாகவும் இருக்கவில்லை!

ஆனால் அங்கெல்லாம் ஆண்டுதோறும், புதிது புதிதாக வந்தவர்களோடு சர்வ சாதாரணமாக அறையைப் பகிர்ந்து கொண்டவளுக்கு, இப்போது அது பிடிக்கவில்லை.

பிறரோடு இலகுவாகப் பழக கூடியவளே என்றாலும், புதியதாக இருந்த அலுவலகச் சூழ்நிலை, அவ்வப்போது கண்ணில் படும் தாய் வனிதா 'வனிம்மா, வனிம்மா' என்று, பாசமும் பணிவுமாக அவள் கூடவே அலையும் சதானந்தன்... சிந்திப்பதற்கு அவளுக்கு நிறைய விஷயங்கள் இருந்தன.

இந்தச் சிந்தனைகளில் யாரும் குறுக்கிடக்கூடாது என்பதற்காகவே, எனவே, சற்று அதிகச் செலவானாலும் பரவாயில்லை என்று தனியறையே எடுத்துக் கொண்டாள்.

விடுதி வாழ்க்கையும், அவளுக்கு எளிதாகவே பழகிப் போயிற்று.

காலையில் எழுந்து 'ஜாகிங்' போவதும், திரும்பி வந்து பத்திரிகை படித்து, குளித்துக் கிளம்பி அலுவலகம் போவதும், அவரவர் ஆர்டரின் பேரில், அங்கேயே தரப்படும் மதிய உணவை உண்டுவிட்டுத் தொடர்ந்து வேலையில் ஈடுபடுவதும், மாலையில் திரும்பி வந்து, அன்றைய நிகழ்ச்சிகளை அசைபோடுவதும், மற்ற சிறுசிறு வேலைகளுமாக, அவளது நாட்கள் வேகமாகக் கழிந்தன.

பெரும்பாலும் இதமாகவே.

அதிலும், அவளது வேலைய்ய யாரேனும்... முக்கியமாகப் பெற்ற

தாயோ, சதானந்தனோ பாராட்டிவிட்டால், அவ்வளவுதான், சும்மா ஜிவ்வென்று வானத்தில் பறக்கிற உணர்வு வந்துவிடும்.

பொதுவாக, எந்த வேலையையும் முழுமையான கவனத்துடன் செய்தே பழக்கம் என்பதால், பாராட்டுக்களும் அடிக்கடி கிடைத்தன.

ஆனால், இப்படி மகிழ்வது தப்பு என்ற உறுத்தலும் வரத்தான் செய்தது.

ஏனெனில், அவளது குறிக்கோளே தாயைக் குற்றவாளி கூண்டில் நிறுத்திக் கேள்வி கேட்பது. அவள் இந்த வேலையை நாடி வந்ததே அதற்காகத்தானே? ஆனால், இதைப் பல முறை தனக்குத்தானே சொல்லித்தான், அந்தக் குறிக்கோளையே, அவள் நினைவு படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது.

ஏனெனில், மனதுள், சுந்தரி உருவாக்கி வைத்திருந்த வனிதாவுக்கும், வேலையிடத்தில் பார்த்த வனிதா மேடத்துக்கும் இரு துருவங்களுக்கும் இடையே உள்ள வேற்றுமை இருந்தது.

திருமணமான ஒருவரை வலை போட்டுப் பிடித்து, அந்த உறவின் மூலமாகப் பிறந்த குழந்தையை விலைபேசி விற்றுப் பெருந்தொகையை அடித்த பொல்லாத கல் நெஞ்சக்கார வில்லியாக, அவள் தாய் சற்றும் தோன்றினாளில்லை!

அதேசமயம், அறியாத்தனமும், பேதமையுமாக ஒருவரிடம் ஏமாந்துதான் போனாளோ என்றும் எண்ண முடியாமல், அந்த ஐந்து லட்ச ரூபாய் தடுத்தது என்பதோடு, வனிதா மேடத்தின் அறிவார்ந்த செயல்களும் நிமிர்வும், அந்த அறியாப் பேதமையோடு கொஞ்சமும் ஒத்துப் போகவில்லை!

இந்த முரண்பாடு அவளைக் குழப்பியடித்ததில், தாயைப் பிடித்து உலுக்கிக் கேட்கும் எண்ணமே, பாதி மறந்து போக, கஷ்டப்பட்டுத்தான் அவள், அதை, இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தாள் எனலாம்!

தாயார் பற்றிய சுந்தரியின் குழப்பத்தை இன்னமும் அதிகப்படுத்தியவன் சதானந்தன். மெய் காப்பாளன் போலக் கூடவே அலைவதும், அவளது விருப்பங்களைக் கேள்வியே கேட்காமல் செயல்படுத்துவதும், அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

பெற்ற தாய், தந்தை என்றாலும், காரண காரியத்தோடு சொல்லாவிட்டால், ரமேஷ் அதைச் செய்யவே மாட்டானே!



ஒருவேளை, இப்போது தாயின் சொல்லை, இதுபோல ஏற்பானோ?

வேண்டாம். இந்த நினைவு கூடாது! அது முடிந்துவிட்ட அத்தியாயம்!

அந்த நினைவுகளை ஒதுக்குவது, இப்போதெல்லாம், அப்படி ஒன்றும் கடினமாகவும் இருக்கவில்லை.

ஏனெனில், பெற்ற தாயைப் பற்றிய எண்ணங்கள், அந்த அளவுக்கு சுந்தரியின் மனதில் இடம் பிடித்திருந்தன. அவளது தோற்றம், உடை, உடல் அசைவுகள், குரல், பேச்சு... எல்லாமே, திரும்பத் திரும்பப் படம் போல, அந்த மகளின் மனதில் வந்துகொண்டே இருக்கும்! இவைகள் எதிலுமே, தேடித் தேடிப் பார்த்தும், அவளால் ஒரு குறை கூடக் கண்டுபிடிக்க முடிந்தது இல்லை!

இதன் பொருள், அன்னை கெட்டிக்காரியா? அல்லது நல்லவளா?

பொதுவாக, அலுவலகத்தில் பணிபுரியும் பழைய அலுவர்கள் அத்தனை பேரும், வனிதா மேடத்துக்காக, உயிரை விடு என்றால், விட்டுவிடுவார்கள் என்பதுபோல, சுந்தரவதனி மட்டுமல்ல, புதிதாகச் சேர்ந்த அத்தனை பேரும் பேசிக் கொள்வார்கள். அந்த அளவுக்கு 'மேட'த்தின் பேச்சு அவர்களுக்கு வேதவாக்கு.

அதன் காரணம் என்ன என்று, விரைவிலேயே, சுந்தரிக்கும் தெரிய வந்தது.

சுந்தரியின் செட்டைச் சேர்ந்த மகிமாவுக்கு, அன்று உடம்பு சரியில்லை. வந்த புதிதிலேயே விடுமுறை கேட்கத் துணிவின்றி, ஒரு தலைவலி மாத்திரையைப் போட்டுக்கொண்டு வேலைக்கு வந்துவிட்டாள். ஆனால் ஒரிரு முறை அவளது அசைவுகளைக் கவனித்த, வனிதா, அவளை மருத்துவரிடம் அனுப்பியதோடு, நிறுவன வண்டியிலேயே, விடுதியிலும் கொண்டு விடச் செய்து, குணமாகும்வரை சம்பளத்தோடு லீவும் தரவே, அன்றிலிருந்து 'மேடத்தின்' பயங்கர விசிறி, அவள்!

ஏன், சுந்தரியே ஒரு நாள் கையிலிருந்த வேலையை முடித்துவிட்டுப் போகலாம் என்று செய்து கொண்டிருக்க, மதிய உணவு இடைவேளையே முடிகிற நேரம் ஆகிவிட்டது.

பார்த்தால், ஆஃபீஸ் ப்யூன் ஒரு பாட்டில் தண்ணீரையும், ஓர் உணவுப் பாக்கெட்டையும் அவளது மேஜையில் வைத்துக்

கொண்டிருந்தான்.

என்னவென்று கேட்டால், அவள் சாப்பிடப் போகாமல் வேலை செய்வதைப் பார்த்துவிட்டு, 'மேடம்' வாங்கித் தரச் சொன்னார்களாம்! சாப்பிட்டுவிட்டு வேலையைப் பார்க்கும்படியும், சொல்லச் சொன்னார்களாம்!

லேசாகத் தடுமாறிய கைகளால் பிரித்துப் பார்த்தால், காய்கறி, முட்டை கலந்த நூடுல்ஸ்! இது அவளுக்குப் பிடிக்கும் என்று பெற்றவளுக்கு எப்படித் தெரிந்தது?

பெற்றவள் என்பதாலா?

தன்னை மீறிக் கண் கலங்கிவிட்டது, அவளுக்கு!

அப்படியெல்லாம் ஒன்றுமில்லை, இது 'காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதை' போலத்தான் என்று எவ்வளவோ நினைத்தாலும், ஏதோ ஒன்று கதகதப்பாய் இதயத்தில் அமர்ந்து இதம் பரப்புவதை, அவளால் நிறுத்தவே முடியவில்லை!

இந்த அழகில், சதானந்தன் வேறு, இதை எப்படியோ அறிந்து வந்து, அவளிடம் தாயின் புகழ் பாடலானான்.

"பார்த்தாயா, எங்கள் வனிம்மாவை! நீ உண்ணாமல் வேலை செய்வதைப் பார்த்ததோடு நிற்கவில்லை! உனக்குப் பிடித்தமான உணவு வகைகளுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். 'முட்டை கலந்த நூடுல்ஸ் பாக்கெட் வாங்கிக்கொடு. அதைத்தான் சுந்தரவதனி விரும்பி உண்கிறாள்' என்று ப்யூனிடம் சொல்லி அனுப்பினார்கள். பெற்ற தாய் மாதிரி, எப்படிப் பார்க்கிறார்கள் பார்! ஏ...ய்! சுந்தர...வவதனி, ஏன் அழுகிறாய்?... ஏன் சொல்லு. இதில், அழுவதற்கு ஒன்றுமில்லையே, ஒரு தாயின் அன்போடுதான், வனிம்மா எல்லோரையும் கவனிப்பார்கள். அதைத்தான் சொன்னேன்..." என்றான் அவன்.

மக்கு மாதிரி, அவன் முன் அழுதோமே என்றிருந்தது, அவளுக்கு. அடுத்து, ஏன் அழுதாய் என்று கேட்பான்தானே?

அவனாகக் கேட்கும்முன் கண்ணீரின் காரணத்தை, அவளே ஒருவிதமாகச் சொன்னாள் "வந்து... என்னைப் பெற்ற அம்மாவை, நான் சிறு வயதில் இருந்தே அறிந்தது இல்லை! அதுதான்..." என்று இழுத்தாள்.

"ஓ! தெரியாது. சாரிம்மா!" என்று வருத்தப்பட்டான் அவன்.



அவன் என்ன எண்ணி, இப்படிச் சொல்கிறான் என்று அவளுக்குப் புரியாமல் இல்லை. அதுவும் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால், இந்த ஒன்றை மறுத்தால், தொடரும் பல கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியவே முடியாது! எனவே, தொடர்ந்து சில வினாடி அமைதியை, அவள் கலைக்கவில்லை.

விட்ட இடத்திலிருந்து அவன் தொடர்ந்தான் "ஆனால், அவ்வப்போது அம்மாவை நீ ஒரு மாதிரி சந்தேகமாய், அளவிடுவது போல முறைத்துப் பார்ப்பாயா? அதனால்தான் அவர்களைப் பற்றி, இவ்வளவு எடுத்துச் சொன்னேன். வனிம்மா, ரொம்ப நல்லவர்கள், வதனி. அதில் சந்தேகமே வேண்டாம்!" என்று மறுபடியும் அதிலேயே வந்து நின்றான் சதானந்தன்.

கண் முன்னே காண்பன எல்லாம், அவளுக்கும் அப்படித்தான் காட்டின. ஆனால், அந்த ஐந்து லட்சம்? அதற்கு என்ன விளக்கம்?

இந்தக் கேள்வி உள்ளூரக் குடைய, அந்தக் குடைச்சலுடனேயே சுந்தரி நாட்களைக் கழித்தாள்.

இந்த சமயத்தில் சுந்தரவதனிக்கு வேறு ஒரு தொல்லை ஏற்பட்டது. பெரிய விஷயம் என்று சொல்ல முடியாது. அவளே சமாளித்திருப்பாள்! ஆனால் எப்படியோ விஷயம் வனிதா வரை போய்விட்டது.

சுந்தரவதனி தங்கியிருந்த பெண்கள் விடுதி, ஒரு புதிய குடியிருப்பில் அமைந்திருந்தது. புதிய பகுதி என்பதால், நகர்ப்புறத்து சந்தடியோ, தூசி தும்புகளோ இல்லாதிருந்தது.

கோவையின் இதமான தட்ப வெப்பமும் சேர்ந்துகொள்ள, காலையில் அந்தப் பகுதியிலேயே பலர், நடைப்பயிற்சி, ஜாகிங் செய்வார்கள். சுந்தரியுடையது, வேகநடை.

சுமார் மூன்று வாரங்களாகத் தொடர்ந்த இதில், பிரச்சினை எதும் அவளுக்கு ஏற்பட்டதில்லை.

அன்றும், அது போல வேகமாக நடக்கையில், பக்கத்தில் கூட நடந்த யாரோ "குட் மார்னிங்' என்றார்கள்.

மூன்று வாரங்களாக அவள் நடப்பதைப் பார்த்த பலருள் யாரோ ஒருவர் என்று, தன்னியல்பாகப் பதில் வணக்கம் கூறியவளுக்கு, அவளது வேகத்தைக் குறைக்க முயற்சிப்பது போல, கூட நடந்த நபர் லேசாகக் குறுக்கே வருவதாகத் தோன்றவும் கணமும் தயங்கி நில்லாமல்,

சுற்றிக்கொண்டு நடந்து சென்று விட்டாள்.

அந்த வினாடியில் உள்ளூர சிறு துணுக்கம் ஏற்பட்ட போதும், அவள், அதைப் பெரிதாகக் கருதவில்லை.

அந்தக் குடியிருப்பு ஒன்றும் பாதுகாப்பு அற்ற இடம் அல்ல. ஆணும், பெண்ணுமாகப் பல குடும்பத்து மனிதர்கள் நிறைய பேர், காலையில் இப்படி ஏதாவது பயிற்சி செய்கிறவர்கள்தான். இத்தனை பேர் நடுவில், யாரும் அத்து மீறி விட முடியாது!

எனவே, அதற்குமேல், காலைச் சம்பவம் பற்றிய நினைவு கூட இல்லாமல், அலுவலகத்துக்குச் சென்றால், மாடிப்படிகள் தொடங்கும் இடத்தில் எதிரே வந்து நின்று, "ஹலோ சுந்தரவதனி!" என்றான் ஒருவன்.

குரல் எங்கே கேட்டது போலத் தோன்ற திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தாள் சுந்தரி.

"நான் ஜெயந்தன்... புரியவில்லை? காலையில் சந்தித்தோமே! நானும் அந்தக் குடியிருப்பில்தான் வசிக்கிறேன். உனக்கும் இந்தக் கட்டடத்தில்தான் வேலையா? வெரிகுட்! வெரிவெரிகுட்! இந்தத் தெரு முனையில் நல்ல ஹோட்டல் ஒன்று இருக்கிறது. மதிய உணவுக்கு, இருவரும் அங்கே போவோமா? என் 'ட்ரீட்' என்று வெகு சரளமாக அழைத்தான் அவன்!

என்ன தைரியம்?

திகைப்பு ஆத்திரமாக மாற, "நான் அப்படிப்பட்ட பெண் அல்ல!" என்று அழுத்தம் திருத்தமாக மொழிந்து தலையைத் திருப்பியவள், மறுபடியும் அவனைச் சுற்றிக்கொண்டு, வேகமாகப் படியேறிச் செல்லலானாள்.

உள்ளூர அவளது மனம் படபடத்தது.!

என்ன துணிச்சலாக ஹோட்டலுக்குக் கூப்பிடுகிறான்! பெயர் வேறு தெரிகிறது.

குடியிருப்பில் விசாரித்திருக்கிறான்! தனியாக இருப்பதும் தெரியவர, தைரியமாகக் கூப்பிட்டு விட்டான்!

பாட்டி தயவில் தங்கிப் படித்த பள்ளி, கல்லூரி விடுதிகளும் தந்தை வீடுமாக, அதுவரை எவ்வளவு பாதுகாப்பாக வாழ்ந்திருக்கிறோம் என்று, சுந்தரிக்கு அப்போது புரிந்தது.



இன்றைக்கு, இந்த நிலைமைக்கு காரணம் யார் என்று எண்ணம் ஓட, அவளது நெஞ்சு கொதித்தது!

எல்லோரையும் பெற்ற தாய் மாதிரிப் பார்த்துக் கொள்கிறவளாம்! பத்து மாதம் சுமந்து பெற்ற மகள் மட்டும் எக்கேடும் கெடட்டும் என்று தூக்கி வீசிவிட்டு...

"என்ன சுந்தரி, அவ்வளவு கோபம்? யாரை அடிக்கப் போகிறாய்?" என்று உடன் பணி புரியும் மகிமாவின் குரல் கேள்வி கேட்க, தன்னையறியாமல், "அம்..." என்று பதில் சொல்லத் தொடங்கி, முடியாமல் மூச்சு வாங்கியபோதுதான், பணிபுரியும் அலுவலகத்துக்குள்ளேயே வந்துவிட்டது, சுந்தரிக்குப் புரிந்தது.

அவ்வளவு வேகமாக அத்தனை படிக்கட்டுகளையும் ஏறி வந்திருக்கிறாள்.

மூன்று வரிசைப் படிக்கட்டுகள்! அலுவலகத்துக்குள் நுழையும்போது மூச்சு வாங்கிக்கொண்டு செல்லக்கூடாது என்று, இரண்டாம் தளத்திலிருந்து 'லிஃப்டில்' செல்வது, சுந்தரியின் வழக்கம். இன்று, அந்த நினைப்புக்கூட வரவில்லை!

அவசரமாக முகத்தைச் சீர்ப்படுத்திக்கொண்டு, "கோபமென்ன, மகிமா? மூன்றாவது தளத்துக்கும் படியேறியே வந்து பார்க்கலாம் என்று வந்தேனா? மூச்சு வாங்கிவிட்டது! ஆனால் இதனால் நான் ஒன்றும் தாமதமாகிவிடவில்லையே?" அவள் கேட்க, அதை ஏற்று மகிமாவும் கைக்கடிகாரத்தைப் பார்த்து "சேச்சே, அதெல்லாம் இல்லைப்பா. அலுவலகம் தொடங்க, இன்னும் ஐந்து நிமிஷம் இருக்கிறது!" என்று பதில் சொல்ல, அப்படியே பேச்சு மாறிப் போயிற்று.

ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன், அன்றைய வேலையில், சுந்தரவதனி ஈடுபட்டாள்.

ஆனால், அந்த அரைகுறை நிம்மதியின் ஆயுள்கூட மிகவும் குறைவாக இருந்தது.

சற்று நேரத்திலேயே "திருப்பூர் விற்பனைக் கணக்கை நேற்றுப் பார்க்க நேரமில்லையாம். எடுத்துக்கொண்டு சதா சார் வரச்சொன்னாங்க" என்று ஆஃபீஸ் பையன் வந்து சொல்லிவிட்டுப் போனான்.

மற்றது மறக்க, உற்சாகத்தோடு ஃபைலை எடுத்துக் கொண்டு போய் சதானந்தனின் எதிரில் வைத்தால், அவன், அதைத் தொட்டுக்

கூடப் பார்க்கவில்லை!

மாறாக, அவளை முறைத்துப் பார்த்துவிட்டு "ஒழுக்கம் பற்றி, முதல் நாள் நாங்கள் சொன்னதை காதில் நீ வாங்கவே இல்லையா?" என்று கிலோக் கணக்கில் ஆத்திரத்தை அடக்கிய குரலில் கேட்டான் அவன்.!



# தேடினேன் வந்தது 6

சற்று நேரம், சுந்தரவதனிக்கு எதுவும் புரியவில்லை.

திருப்பூர்க் கணக்கைக் கேட்டது, சும்மா ஒரு சாக்கு என்பது, அவளுக்கு நன்றாகவே புரிந்தது. ஆனால், ஒழுக்கம் பற்றி, இவ்வளவு கோபமாகக் கேட்பதற்கு, அவள் என்னதான் செய்திருக்கக் கூடும்? அதுதான் தெரியாத விஷயமாக இருந்து, அவளைக் குழப்பியது.

ஆயினும் தான் தப்புச்செய்யவில்லை என்கிற உறுதி தைரியத்தைத் தர, நிமிர்ந்து "இந்தக் கேள்வியை ஏன் என்னிடம் கேட்கிறீர்கள் என்று எனக்குக் காரணம் புரியவில்லை, சார்?" என்றாள் தெளிவாக.

உறுத்து விழித்து "காரணம்தானே, இப்போது புரிந்துவிடும். யாரவன், மாடிப்படியில் நின்று பிரியாவிடை பெற்றவன்? உண்மைக் காதலனா? அல்லது, இப்போதுள்ள புது நாகரீகப்படி, முக்கியமான சினேகிதனா? ஒருவேளை, இதற்காகத்தான், எப்போதும் படியேறியே வருவதோ?" என்று ஏளனமாகக் கேட்டான், அவன்.

பார்த்திருக்கிறான்! அந்தக் கிறுக்கன் வழி மறித்துப் பேசியதை, எப்படியோ கண்டிருக்கிறான்.

அந்தச் சமயத்தில் 'லிஃப்டி'ல் சிலர் ஏறினார்களே, அவர்களோடு, இவனும் ஏறியிருப்பானோ?

ஆனால், இப்போது அது முக்கியமல்ல. வெறுமனே ஒரு வினாடி பார்த்ததை வைத்து, அவளைக் குற்றம் சாட்டியிருக்கிறான். என்ன நடந்தது என்றே தெரியாமல், அவளை எப்படி, இவன் தப்பாக நினைக்கலாம்?

அந்த முட்டாள்தான் அவளைத் தப்பாகக் கணித்தான் என்றால், இவன் மட்டும் எப்படியாம்?

நிமிர்வு தளராமலே "என்ன சார், என்னென்னவோ சொல்லுகிறீர்கள்?



அந்த ஆள், சும்மா என்னிடம் மணி என்ன என்றுகூடக் கேட்டிருக்கலாமே! பிரியாவிடை, காதலன் என்று வாய்க்கு வந்தபடி என்ன பேச்சு, சார், இது?" என்று கோபமாகக் கேட்டாள்.

ஆனால், சதானந்தனின் பாவனையோ, குரலோகூடச் சற்றும் மாறவே இல்லை! அதே ஏளனத்துடனேயே, "நிஜமாகவே, அப்படித்தான் கேட்டானா? சும்மா, உன்னிடம் மணி என்ன... என்றுதான் கேட்டானா?" என்று அவளைப் போலவே பேசி இளக்காரம் செய்தான். "இந்தக் கதையை, என்னை நம்பச் சொல்கிறாயா? நான் ஒன்றும், அந்த அளவு முட்டாளில்லை"

என்ன இது? அவள் குற்றவாளி என்று, முடிவே செய்துவிட்டானே! இத்தனைக்கும், தப்பு செய்தது, அவளுக்கே கூட, யாரென்று தெரியாத, எவனோ ஒருவன்!

என்ன அனியாயம்!

சுந்தரவதனியின் அடி வயிற்றில் இருந்து ஒரு கோபம் குமிழியிட்டுப் பெருகியது.

அவளுக்கு எப்போதுமே, இப்படித்தான் அனியாயம் நடக்கிறது! அவள் ஒரு தப்புமே செய்யாதபோதும், தண்டனை மட்டும், எப்போதும் அவளுக்குத்தான்.

நெறி பிசகிக் குற்றம் புரிந்தவர்கள், அவளைப் பெற்றவர்கள்! ஆனால் யாருமற்ற அனாதையாகத் தன்னந்தனியே அகதியாக நிற்பவள் அவள்தான்!

பின்புலம் என்று ஒன்று இருந்திருந்தால், அந்த ராஸ்கல், அவ்வளவு துணிவாக ஹோட்டலுக்குக் கூப்பிட்டிருக்க மாட்டான். அதேபோல, இவனும் இப்படிக் குற்றவாளியாக நிறுத்தி கேள்வி கேட்டிருக்க மாட்டான்!

அவளைப் பொறுத்த வரையில், உலகில் எல்லோரும் அனியாயக்காரர்களே!

கோபம் சீற்றமாக மாற, "இப்போது என்ன, சார்? நடந்தது என்ன என்று உங்களுக்குத் தெரிந்தாக வேண்டும், அவ்வளவுதானே? காலையில் 'வாக்' போனபோது, 'குட்மார்னிங்' என்றான். இங்கே திடுமென வந்து 'ஹோட்டலுக்கு வருகிறாயா' என்கிறான். யாருமற்ற அனாதைகள், அவரவரை, அவரவர்தானே காப்பாற்றிக் கொள்ள

வேண்டும்? 'நான் அந்த மாதிரிப் பெண் அல்ல' என்று, முகத்தில் அறைந்த மாதிரிச் சொல்லிவிட்டு, நில்லாமல் வந்துவிட்டேன். இதைப்போய், என்னவென்று, உங்களிடம் சொல்வது? அப்படிச் சொன்னாலும், என்னவோ, எல்லா ஆண்களும் என் பின்னே சுற்றுவதாக, அளக்கிற மாதிரி இராது? இதை எண்ணித்தான், ஒன்றுமில்லாத மாதிரி, ஒதுக்க முயன்றேன். எதற்காக, என்னை ஒரேடியாகக் குற்றவாளியாக்கி விடுவதா?

"ஆனால் நீங்கள், ஆண்கள் எல்லோரும் இப்படித்தான், ஒன்று, தப்பு எண்ணம் கொண்டவர்கள். அல்லது தவறாக நினைப்பவர்களாகத்தான் இருக்கிறீர்கள்! சும்மாவே, தங்குமிடம், வேலை செய்யுமிடம் இரண்டும் இவனுக்குத் தெரிகிறதே, மேலே தொல்லை செய்தால், தன்னந்தனியாக இவனை எப்படி சமாளிப்பது என்று நானே கவலைப்பட்டுக் கொண்டிருந்தால், நீங்களும் என்னையே என்னையே..." என்று வேகமாகப் பொரிந்து கொட்டியவளுக்குத் திடுமென குரல் உடைந்து கேவ, சுந்தரி உடனே மிரண்டாள்.

இவன் முன் கண்ணீர் வேறு வரவேண்டுமா? அழுது சாகசம் செய்வதாக, அது வேறு குற்றச்சாட்டு வரவேண்டுமா? அவள் என்றால், கெட்டது எண்ணித்தானே, எல்லோருக்கும் பழக்கம்?

சட்டெனத் திரும்பி, முகம் மறைத்து நின்று, "இ...இதோ ஒரு நிமிஷம், உடனே வந்து விடுகிறேன்" என்று அங்கிருந்து பறந்தோடிப் போய், டாய்லெட் அறைக்குள் சென்று கதவைச் சாத்தினாள்.

ஒருசில நிமிஷங்கள்தான் இருக்கும்! ஆனால், மூசுமூசு என்று, சுந்தரி பொங்கிப் பொங்கி அழுதுவிட்டாள்.

இவன்கூட, என்னைத் தப்பாக நினைப்பதா என்ற வேதனை ஒரு பக்கம் என்றால், வேலை செய்யும் இடத்தில், முதலாளியிடம் கண்டபடி கத்திவிட்டு வந்திருக்கிறாளே, இந்த வேலை நிலைக்குமா என்று, மனம் இன்னொரு பக்கம் கலங்கியது.

அப்படி நிலைத்தால், அது உலக அதிசயம்தான்.

இந்த வேலை போனால், அவள் பசியும் பட்டினியுமாகக் கஷ்டப்பட நேரும் என்று ஒன்றும், அவள் பயந்து விடவில்லை.

சொல்லப் போனால், அவளது கல்வித் தகுதிக்கு, இதைவிடப் பெரிய வேலையே, அவளுக்கு இலகுவாகக் கிடைக்கும்!



ஆனால், சுனாமி போல பெரிய துன்பமாக, அங்கெல்லாம், அவளுடைய அன்னை இருக்க மாட்டாள்! இப்படி, அவ்வப்போது கூடத் தாயைப் பார்த்து கொண்டிருக்க முடியாமல் போய்விடுமோ என்று நினைக்கும்போதே, அவளுக்கு நெஞ்சை அடைத்தது.

அத்தோடு, தாயிடம் அந்தக் கேள்வியை, இன்னமும் அவள் கேட்கவில்லை! ஏன் கேட்கவில்லை என்பது கூட, முழுமையாக, அவளுக்கு இப்போதுதான் புரிந்தது. உண்மையான காரணம்!

பெற்றவளைப் பார்க்கப் பார்க்க, அவளது கோபமும் கொதிப்பும் சற்று நீர்த்துப் போனபோதும், மகளை விற்றதற்கான ஏதோ ஒரு விளக்கத்தை, எப்போதேனும், தாய் கொடுத்துதானே, ஆக வேண்டும்? அதை அறிந்துகொள்ளவே இல்லாமல், எப்படி விடுவது என்ற எண்ணம் இருக்கத்தான் செய்தது.

ஆனால் 'பின்னே என்பதும், நாளை என்பதும்,' இல்லை என்பதன் குறி' என்று பாட்டிக் கற்றுக் கொடுத்திருந்தபோதும், பிறகு, பிறகு என்று தள்ளிப் போட்டாளே!

இன்றைக்குத் தலையை வலிக்கிற மா...திரி இருக்கிறது. பாங்க்குக்குப் போன சதானந்தன் வேலை முடிந்து சீக்கிரம் வந்துவிடலாம். வேலை செய்கிற மற்ற யாருக்கேனும், ஏதாவது சந்தேகம் ஏற்பட்டு, மேடத்திடம் விளக்கம் கேட்க வந்தால்...

ஆற, அமர, சுந்தரி ஒவ்வொரு தடையாக யோசித்து, ஒருவாறு கிளம்புமுன் எம்டி மேடத்தைப் பார்க்க யாராவது வந்து விடுவார்கள்!

அடடா, இதனால்தான் கேட்க முடியாமல் போயிற்று என்று, சுந்தரியும் தன்னைத்தானே சமாதானம் செய்து கொள்வாள்.

ஆனால், இவை எல்லாம் வெறும் சாக்குப் போக்குதான்! அத்தனைக்கும் காரணம், ஒன்றே ஒன்றுதான். கேட்பதற்குப் பயம்! கேட்டுவிட்டால், அதன்பின் என்ன ஆகுமோ என்ற அச்சம்!

தன்னுடைய இருண்ட கற்காலத்தை, அன்னை தனக்குள்ளேயே புதைத்து வைத்திருந்தால், அது வெளியாவதை எப்படி விரும்புவாள்? அதைவிட, விஷயத்தை வெளிப்படுத்தக்கூடிய மகளைத்தான் வெளியேற்றுவாள்! ஏற்கனவே, பணம் பெரிதென்று விற்றவள், மறுபடியும் எப்படி ஏற்பாள்?

மகள் என்று நிரூபிக்க, ஒரு சான்றுகூட இல்லாதபோது, ஏதாவது

காரணம் கற்பித்து, அவளை அங்கிருந்து விரட்டுவது, எவ்வளவு எளிது?

அப்படி விரட்டி விடுவாளோ, பெற்றவளைக் கண்ணால் பார்க்கக்கூட முடியாத நிலை ஆகிவிடுமோ என்ற கலக்கத்தில்தான், சும்மாவே இருந்தோம் என்று, சுந்தரிக்கு இப்போது புரிந்தது.

அதாவது, எப்படியும் இங்கிருந்து வெளியேறி, அன்னையைப் பார்க்க முடியாத அதே நிலை ஆகப்போகிறதே என்று அஞ்சி நடுங்குகிற இப்போது!

ஆனால், இங்கேயே ஒளிந்து கொண்டு எவ்வளவு நேரம் நிற்க முடியும்? என்ன நடந்தாலும், மறுப்பின்றி, அவள் ஏற்றுத்தான் தீர வேண்டும். ஏனெனில், அவளுக்காகச் சின்னஞ்சிறு விரலை அசைக்கக்கூட, அவளுக்கு ஒரு நாதியும் கிடையாது!

மீண்டும் பெருகிய கண்ணீரோடு, முகத்தில் நன்றாக நீர் அடித்துக் கழுவி, அழிந்து போன தன் லேசான ஒப்பனையைப் புதுப்பித்துக்கொண்டு, கேபினுக்குச் சென்றால், அங்கே, சதானந்தனுக்குப் பதிலாக தாய் அமர்ந்திருந்தாள்.

ஏதோ கடவுளின் சிறு கருணை! பெற்றவளை, இன்னொரு தரம் பார்க்கக் கொடுத்து வைத்திருக்கிறது.

ஓர் ஆண்மகனுக்குப் புரிந்திருக்குமோ, என்னவோ? ஆனால் வனிதாவின் பார்வை, சுந்தரியை அளவெடுத்தது.

கண் ஏன் சிவந்திருக்கிறது என்று ஏதாவது கேட்டால் என்ன சொல்வது, தூசி என்றால் ஒத்துக் கொள்வாளா என்று ஏதோ நினைத்து, சுந்தரி உள்ளூரத் தடுமாறிக் கொண்டிருந்தபோது, "திருப்பூர் விற்பனை பற்றிப் பேசியாகிவிட்டதா?" என்று வேலையைப் பற்றி மட்டும் கேட்டாள், எம்டி!

ஆக, அது வெறும் பொய்யான சாக்கு அல்ல!

"இ...இன்னும் இல்லை!" என்றாள், அழுகையின் கரகரப்பைக் காட்டாத மெல்லிய குரலில்.

"எடு பார்ப்போம்" என்று பணிந்தவள், தொடர்ந்து "அலுவலகத்தில் இன்னும் கொஞ்சம் உரக்கப் பேசிப் பழகு" என்றோர் அறிவுரை கூறினாள்.

பழகி? அன்று முழுதும் வேலையில் இருப்பதே சந்தேகம்! இதில், உரக்க யாரிடம் போய்ப் பேசுவது?

பெரிதாகத் தலையை மட்டும் ஆட்டிவிட்டு ஃபைலைத் திறந்து,



எம்டி பார்க்க வேண்டிய பக்கத்தைத் திருப்பி, அவள் முன் வைத்தாள், சின்னவள்.

இவ்வளவு அருகில் நின்று பார்க்கும்போது, எப்படி இருக்கிறது!

தாயின் கூந்தல் வாசத்தை சுந்தரி நுகரும்போது, சதானந்தன் வந்துவிட்டான்.

நிமிர்ந்து பார்த்து "இப்போதுதான் வருகிறாயா?" என்று கேட்டாள் வனிதா.

"இல்லையம்மா" என்றபடி அமர்ந்து "ஒரு பெண்ணுக்குப் பிரச்சினை. அதை தீர்ப்பதற்காகப் போனேன். பிரச்சினை தீர்ந்துவிட்டது" என்ற சுருக்கமான விளக்கத்தோடு அவன் முடிக்க, இருவருமாக வேலையில் ஈடுபட்டனர்.

"புதிதாக அறிமுகப்படுத்திய ரகம் எனும்போது, முதல் வாரத்தில், நல்ல விற்பனைதான்! இதை நிலைக்க வைக்க முயற்சி செய், சதா" என்றாள் வனிதா.

"கட்டாயம்!" என்று உறுதியளித்தான் வளர்ப்புப்பிள்ளை "ஆனால் வனிம்மா, அடுத்த இரு வாரங்களும், மாதக் கடைசி என்பதால், மிகவும் சின்னதாக ஒரு பின்னடைவு ஏற்படக்கூடும்... அதை நீங்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளக்கூடாது" என்றும் கூறினான், அவன்.

வளர்ப்புத் தாயார் ஒத்துக் கொள்ளவும் "இன்னும், இந்த வாரச், சென்னைக் கிளை விற்பனையையும் பாருங்கள், வனிம்மா. ரகம் வாரியாகப் பிரித்துக் குறித்து வைத்தேன். அதை எடுத்து வருகிறேன்" என்று அறையை விட்டு வெளியே சென்றான்.

அவன் வெளியே சென்றதுமே "உனக்கு இப்போது என்ன பிரச்சினை?" என்ற வனிதாவின் கேள்வியில், தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு நிமிர்ந்தாள் சுந்தரி.

அவளுக்கு எத்தனையோ பிரச்சினைகள். அவைகளில், எதைக் கேட்கிறாள்? அவைகளில் எதைச் சொல்லி, இந்த அன்னை, அதைத் தீர்த்துவிடப் போகிறாளாம்? அவளது பிரச்சினைகளின் மூலமே, இதே தாயாக இருக்கையில், சொல்வதுதான் எப்படி?

பெரியவள் பேசாமல் பார்த்திருக்க, எம்டிக்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தை உணர்ந்து "எ...எனக்கு என்ன... எனக்கு ஏதும் பிரச்சினை என்று எப்படிச் சொல்லுகிறீர்கள்" என்று பதில் கேள்வி

கேட்டாள், மகள்.

மிக லேசாக முறுவலித்து, "எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்று ஊர்ப்புறத்தில் ஒரு வாசகம் சொல்வார்கள். ஒன்றுமே இல்லை என்று மறுக்காததோடு, சதா அது பற்றிக் கூறியபோது, உன்னிடம் சலனமே இருக்கவில்லையே! சொல்லு. என்ன விஷயம்?" என்று அன்னை மறுபடியும் வினவினாள்.

ஓகோ, இது, இன்றையப் பிரச்சினை பற்றிய கேள்வி!

பெண் என்பதால், இந்தப் பிரச்சினை, அன்னைக்குப் புரியக்கூடுமோ? இப்படி எத்தனையோ தாண்டித்தானே, அன்னையும் இந்த நிலைக்கு வந்திருப்பாள்? அதனால் ஒருவேளை...

காலையில் தொடங்கியதில் இருந்து, சதானந்தனிடம் படபடப்பாகப் பேசியது வரை, வேகமாகச் சொல்லி முடித்துவிட்டு, "சதா சாரிடம், நான் அப்படியெல்லாம் பேசியிருக்கக்கூடாது, மேடம்! ஆனால், அந்த நேரத்தில், யார் யார் செய்த தப்புகளுக்கோ, என்னைக் குற்றம் சொல்வதா என்று வந்த ஆத்திரத்தில், நிலைமை மறந்து, சதா சாரிடம் கத்திவிட்டேன். அதற்காக என்னை வேலையை விட்டுப் போகச்சொல்லி விடுவாரா மேடம்? ப்ளீஸ்... மேடம்..." என்று இறைஞ்சுதலாகப் பேசியவளுக்கு, அதற்குமேல், சதானந்தனுடைய முடிவை மாற்றச் சொல்லிக் கேட்க, வாய் வரவில்லை!

பொறுப்பில் இருக்கும் ஒருவரது முடிவை, அடுத்தவர் தன்னிச்சையாக மாற்றுவது, நல்ல நிர்வாகத்துக்கு அழகல்ல என்று நிர்வாகம் படித்த அவளே எப்படிச் சொல்வாள்?

ஆனால் "ஆத்திரத்தில்தான் சூழ்நிலை பாராமல் பேசுவாயா? சும்மாவும்தான், வார்த்தை வந்து விழுகிறது! முதல்நாளே, அதெப்படி என்று, கேள்வி கேட்டாயே!" என்று அவளது இன்னொரு பிழையைப் பெற்றவள் நினைவூட்டினாள்.

கூடவே சுந்தரியின் முகம் கன்றிச் சிவப்பதைக் கண்டு, சற்று இரக்கமும் வந்தது போலும் "அபூர்வமாக உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவதை, சதா பெரிதாக எடுக்க மாட்டான். ஆனால், நீயும் நாவடக்கம் பயில வேண்டும். நினைவில் வைத்திரு" என்று அன்னை சொல்லவும், சுந்தரியின் மனம் சற்றே லேசாயிற்று.

உடனடியாக வெளியேற்றம் இராது என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது.



தன் குறிப்புகளோடு சதானந்தன் வந்துவிட, தொழில் பற்றிய பேச்சு தொடங்கியது.

அவள் குறிப்பெடுத்தாள். அவன் சொல்லித்தான்!

வேலையைவிட்டுப் போகச் சொல்கிறவன், அலுவலகப் பணி எதையும் தர மாட்டான்தானே?

உற்சாகத்துடன் வேலையைத் தொடங்கினாள் சுந்தரி.

எல்லா விற்பனைகளையும் ஒத்திட்டுப் பார்க்கையில், தென் சென்னை, சிறப்பாகச் செயல்பட்டிருப்பது தெரிந்தது.

இதுவே தொடர்ந்தால், சென்னைக் குழுவுக்கு ஏதேனும் சிறப்புச் செய்ய வேண்டும். அது மற்றவர்களுக்கு ஊக்கம் அளிப்பதாகவும் இருக்கவேண்டும் என்று அவன் சொன்னபோது, சுந்தரவதனிக்குப் பெருமையாக இருந்தது.

திறமைக்கு உரிய மதிப்புக் கொடுப்பதோடு, அதை வளர்க்கவும் முயற்சி செய்கிறானே, இவன் நிச்சமாகப் பெரிய ஆளாக வருவான்!

அவள் முகத்தைப் பார்த்துவிட்டு, "அதைக்கொடு" என்று அவள் எழுதிய குறிப்புப் புத்தகத்தை, எம்டியாகக் கேட்டாள்.

சுந்தரி அருகில் சென்று குறிப்புப் புத்தகத்தை அவன் முன்னே வைக்கும்போது, "அவனை, என்னடா செய்தாய்?" என்று சாதாரணக் குரலில் விசாரித்தாள்.

திடுக்கிட்டு நின்றவளை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, அவன் பதில் சொன்னான் "அப்போதும், அந்தப் பக்கம்தான் சுற்றிக் கொண்டிந்தான். கூப்பிட்டு, அவனது அடையாள அட்டையைப் பார்த்தேன். நம் ரூபன் நிறுவனம். ரூபனைக் கூப்பிட்டு, 'உன் ஆளுக்கு எங்கள் இடத்தில் என்ன வேலை? பெண்களைத் தொல்லை செய்கிறான்' என்றுவிட்டு வந்தேன்."

"அடடா! வேலை போயிருக்குமே! ஏன்மா, இவ்வளவு கடுமை? சும்மா எச்சரித்து விட்டிருக்கலாமே!" என்றாள் அன்னை, சற்று இளகிய குரலில்.

"படட்டும். பட்டால்தான் புத்திவரும்" என்றான் சதா அலட்சியமாக. "உங்கள் மாதிரி இளக்கம், கனிவெல்லாம் இந்தக் காலத்துக்கு ஒத்தே வராதும்மா" என்றான் தொடர்ந்து.

"இளக்கமும் பரிவுமா?" என்று முணுமுணுத்த பெரியவளின்

"அப்படியெல்லாம் இல்லை, சதா.
பார்வையில் வெறுமை தெரிந்தது. நானும் மனதைக் கல்லாக்கிக் கொண்டு, ஒரு சில முடிவுகளை எடுத்துதான் இருக்கிறேன். சில சமயம், அதுவும் தேவையாகத்தான் இருக்கிறது. என்றாலும்..."

தேய்ந்து மறைந்த குரலும், இலக்கற்ற நோக்கும், பெரியவள் ஏதோ பழைய நினைவில் ஆழ்ந்திருப்பதாகக் காட்டின. வலி தரும் நினைவு!

மின்சாரம் பாய்ந்தது போல, சுந்தரிக்குள் ஓர் எண்ணம் ஊடுருவியது. இது, அவளைப் பற்றிய நினைவு. பணத்துக்காக மகளை விற்ற... அல்லது, விட்டுக் கொடுத்திருப்பாளோ? அது வெறும் பணத்துக்காக மட்டும் அல்லவோ, அதையே இப்போது தாய் எண்ணுகிறாளோ?

கல் நெஞ்சுக்காரி என்பது வேறு. அவளே, மனதைக் கல்லாக்கிக் கொண்டு ஒன்று செய்வது என்றால், அது அடியோடு வேறு அல்லவா?



# தேடினேன் வந்தது 7

அந்த வினாடியில், சுந்தரவதனியின் இதயம் சிறகடித்துப் பறந்துபோய், பெற்ற தாயின் காலடியில், அப்படியே விழுந்துவிட்டது.

சின்னஞ்சிறு வயதில் இருந்து, தாயன்புக்கு ஏங்கியிருந்த இதயம், அது. மரகதத்தின் அன்பைப் பெறுவதற்காக, என்னென்னவோ செய்து தோற்று, அவள் தாயே இல்லை என்று அறிந்ததில் இருந்து, தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய பெற்றவளிடம் சுந்தரவதனிக்கு ஒரு வன்மம் இருந்தது.

பணத்துக்காகப் பெற்ற குழந்தையை, இந்த நிலைக்கு ஆளாக்கினாயே என்று, ஆத்திரம் தீரக் கேட்டு குதறத்தான், அவள் பெற்றவளைத் தேடிக் கண்டுபிடித்ததும், அவளிடமே வேலைக்குச் சேர்ந்ததும்.

ஆனால், முடியவில்லை. பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு என்கிற பழமொழிக்கு நேர் விரோதமாக, இங்கே, தாயைப் பார்க்கப் பார்க்கப் பிள்ளை மனம் பித்தாகிக்கொண்டு வந்தது.

அதற்குச் சரியாக, தாயின் மனதில் பழைய வருத்தம் இருப்பத



தெரிய வந்தபோது, அது, தன்னைப் பற்றித்தான் என்று அவளது உள்ளுணர்வு உறுதியாகக் கூறிவிட்டது.

தன் ஊகம் சரியா, தவறா என்கிற சந்தேகம் இல்லாமல், சற்றும் ஐயமற்ற உறுதி!

இப்போது என்ன செய்வது? வருத்தப்பட வேண்டாம் அம்மா, நான்தான் உங்கள் மகள் என்று சொல்லி விடலாமா?

ஆனால், வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் 'எங்கள் வனிம்மா ரொம்ப நல்லவள்' என்று பாடும் சதானந்தனுக்கு, இந்த விவரம் ஏதேனும் தெரிந்திருக்குமோ, என்னவோ?

திடுமென இதை வெளிப்படுத்தினால், ஏதாவது தப்பாக எண்ணிவிட்டால்?

அது கூடாது. பெற்றவளுக்கு இங்கே இருக்கும் மரியாதை, சிறிதுகூட, ஒரு சிறு அணு அளவுகூடக் குறையக் கூடாது.

ஆனால், பெற்றவளைக் கட்டிப் பிடிக்க வேண்டும், மடியில் படுக்க வேண்டும்... குறைந்த பட்சமாக தொட்டேனும் பார்க்க வேண்டும் என்று, சுந்தரியின் உள்ளம் துடியாய்த் துடித்தது.

அன்னை அருகில்தான் இருக்கிறாள், கையை நீட்டி, அவளைத் தொடலாமா?

நிறுவனத்துடைய எம்டியைப் போய், அப்படிச் சாதாரணமாகத் தொட முடியுமா?

அல்லது, நிறையத் திரைப்படங்கள், சீரியல்களில் வருகிற மாதிரி, எதையாவது, தட்டி விட்டுவிட்டு, அதை எடுக்கிற மாதிரி தாயின் காலைத் தொடலாமா?

மற்ற எதையும்விட, அது நல்ல ஐடியா. அன்னையின் காலில் அருகில் விழும்படி, எதைத் தட்டி விடுவது? ரொம்பப் பக்கத்தில் விழுமாறு...

பேப்பர் வெயிட்... ஊகூம், கூடாது! எசகு பிசகாக விழுந்தால், காலைப் பதம் பார்த்துவிடும். பேனா... கல்விக்கடவுள், காலில் படக்கூடாது என்று பாட்டி...

சுந்தரவதனி தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கும்போதே, தலையை லேசாக உலுக்கி விட்டுக்கொண்டு, வனிதா எழுந்துவிட்டாள். "சதா நம் பெரிய கடை வீதிக்கிளைப் பக்கமாக, ஒரு மதுபானக் கடை

திறக்க ஏற்பாடு நடக்கிறதாமே. சின்னப் பெண்கள், வேலை செய்ய சங்கடப்படும்படி ஆகிவிடக்கூடாது. பக்கத்துத் தெருவில் ஒரு பள்ளி கூட இருக்கிறது... அதனால், சம்பந்தப்பட்ட மனிதர்களிடம் பேச வேண்டும், வா! சுந்தரி, நீ இந்தக் குறிப்புகளைத் தெளிவாக எழுதி வைம்மா" என்று பேசியபடியே அவள் நடந்து செல்ல, சின்னவள் சோர்ந்து நின்றாள்.

அம்மாவைத் தொட்டுப் பார்க்கவே இல்லையே!

அந்தக் குறை அப்படியே இருந்தாலும், அடுத்துத் தொடர்ந்து பல நாட்கள், சுந்தரிக்கு மிகவும் மகிழ்ச்சி அளிப்பனவாக இருந்தன.

அன்றாட வேலைகள்தான். ஆனால், அவ்வப்போது தாயையோ, சதானந்தனையோ பார்க்கையில், உள்ளூர மனம் பூரித்தது.

தாயின் மனதில், தனக்கு இடம் இருப்பதாக நிச்சயப்பட்டு விட்டதால், எப்போதும் உறுத்தும் 'யாருமற்ற' உணர்வு தானாக மறைந்து போயிற்று.

அடுத்து சதானந்தன்! அவளிடம் வாலாட்டியதற்காக, ஒருவனை வேலையிலிருந்தே விரட்டி, ஓட்டி விட்டானே!

தன்னால் ஒருவனுக்கு வேலை போனது, கொஞ்சம் பரிதாபமாகவே இருந்தாலும், எடுத்த எடுப்பில், அறியாத ஒரு பெண்ணிடம் அவன் பேசிய விதமும், மிகவும் கண்டனத்துக்கு உரியதுதானே?

எப்படியோ, சதானந்தனின் துணை, அவளுக்கு இருக்கிறது! அங்கே பணி புரியும் எல்லோருக்குமே, சதானந்தன் இதே உதவியைச் செய்யக்கூடும். செய்வான்! செய்யட்டும்!

ஆனால், அவள் துணையற்றவள் அல்ல! அவளுக்கு அது போதும்!

தந்தை வீட்டில், ரமேஷ், அவளது கையைச் சட்டென விட்டதிலிருந்து அவனது நெஞ்சை எரித்துக் கொண்டிருந்த வேதனை. அவளை விட்டு அகன்றது.

எப்போதையும் விட, வனிதாவும் சதானந்தனும், தன்னைப் பார்த்து அடிக்கடி புன்னகை செய்வது போன்ற பிரமை ஒன்றும் தோன்றி, அவளை மேலும் உற்சாகப்படுத்தியது!

அவளும், அவர்களைக் கண்ணாரப் பார்ப்பதிலேயே மகிழ்ச்சி அடையலானாள்.

மொத்தத்தில், சுந்தரவதனி, மிகவும் சந்தோஷமாக இருந்தாள்!



இந்த மகிழ்ச்சி, மற்றவர் கண்ணிலும் படும்தானே?

ஒருநாள் மதிய உணவு இடைவேளையில், சுந்தரவதனியோடு ஒன்றாக வேலைக்குச் சேர்ந்த மகிமா, தக்காளிப் புலவோடு, அவள் அருகே வந்து அமர்ந்து "என்ன சுந்தரி, ரொம்ப ஜாலியாக இருக்கிறாய்? ஏதேனும் 'லவ்'வா?" என்று கேட்டு, அவளைத் திகைக்க வைத்தாள்.

"'ல...லவ்'வா...? யாரிடம்?" என்று திருப்பிக் கேட்டவளை, மனத்திரையில் தோன்றிய வடிவம், மேலும் மிரள வைக்க, "அ...அச்சோ! அப்படியெல்லாம் இல்லைப்பா! விடுதிப்பக்கம் ஒரு பிரச்சினை! அது, தீர்ந்து போனதால், நிம்மதியாக இருக்கிறது" என்று சொல்லி, சமாளிக்க முயன்றாள்.

மேலும் துருவியவளிடம், அந்த ஜெயந்தன் பற்றி விவரித்து "வசிப்பது, வேலை செய்வது இரண்டுமே, அவனுக்குப் பக்கத்தில் என்றதும், பயந்து போயிருந்தேன், மகிமா. எப்படியோ, அவனுக்கு வேலை போய்விட்டதாம்ப்பா! குடியிருப்பிலும் தங்க முடியாமல், காலி பண்ணிக்கொண்டு போய்விட்டானாம். சொல்லு. சந்தோஷப்பட வேண்டுமா, இல்லையா?" என்று பதில் கேள்வி கேட்டு, பேச்சை முடித்தாள்.

பாதிக்குப் பாதி, பொய் அல்லவா என்று கேட்ட மனசாட்சியை, பாதிக்குப் பாதி, மெய்தானே என்று அடக்கினாள்.

தாயைப் பற்றி சொல்ல முடியாது என்பதோடு, அவளுக்கே சந்தேகமாக இருப்பதைப் பற்றி, அவள் எப்படி உறுதியாகச் சொல்ல முடியும்?

மகிமா போன்ற மற்ற தோழியரையும், இப்படியே சமாளித்தால், அந்த வாரத்து விற்பனை பட்டியலை சதானந்தன் மேஜையில் வைக்கப் போனபோது, "எனக்கு ஓர் உண்மை தெரிந்தாக வேண்டும்" என்று மிகவும் எடுப்பாகத் தொடங்கினான் அவன்.

தூக்கிவாரிப் போட்டுவிட்டது, சுந்தரிக்கு!

தன் மனதில் சுந்தரவதனி மறைத்து வைத்திருக்கும் உண்மைகள் பல. இவற்றுள், இவன் எதைக் கேட்கப் போகிறான்?

"எ...என்ன சார்?" என்றாள் கலக்கத்துடன்.

"இதுதான் விஷயம். கொஞ்ச நாட்களாக, இந்தக் கலக்கம், எரிச்சல், வாட்டம், ஒன்றையும் முகத்தில் காணவே காணோமே! அதிலும்

வனிம்மாவைப் பார்க்கும்போது, முன்னைக்கும் நேர்மாறாகப் புன்னகை மகாராணியாகி, முகத்தில் ஆயிரம் வாட் பல்பே எரிகிறது! என்ன இந்தத் தலைகீழ் மாற்றம்?" என்று நேரடியாக விசாரித்தான் அவன்.

தன் மாற்றம், இவன் கண்ணைத் தப்பாது என்று யோசித்திருக்க வேண்டும். ஆனால், அது தலைகீழ் மாற்றமில்லை. இப்போதுதான் தலையை நேராக, மேலே வைத்துப் பார்ப்பதாக, இவனிடம் எப்படிச் சொல்வது? முழு உண்மையை, இவனிடமும்... முக்கியமாக இவனிடம்தான் சொல்லவே முடியாது என்று கண்டு, மறுபடியும் பாதி உண்மையையே, சுந்தரவதனி சொல்லானாள்.

அந்த ஜெயந்தனின் பிரச்சினையில், இருந்து மீண்ட கதையோடு, வேலையே போய்விடுமோ என்று அஞ்சியதையும் இன்னோரன்ன வார்த்தைகளால் திடமூட்டும் விதமாக வனிதா மேடம் பேசியதையும், சதானந்தனிடம் தெரிவித்தாள்.

"அம்... வந்து, எம்டி மேடம் உள்ளூர எவ்வளவு நல்லவர்களாக இருந்தால், என் முன்னிலையில், உங்களிடம் அது பற்றி கேட்டிருப்பார்கள்? என் நிம்மதிக்காகத்தானே? அப்புறம்... வந்து... நீங்களும், இங்கே வேலை செய்கிறவர்கள் பற்றி, எவ்வளவு பொறுப்புணர்ச்சியோடு செயல் பட்டிருக்கிறீர்கள்! அந்த விஷயத்தை நீங்கள் கையாண்ட விதத்தில், அந்த ஆள், ஊரிலேயே இல்லை. அவன் கதை மெல்லக் கசிந்திருக்கும் போல! மற்றவர்களும், யாருமே என்னைத் திரும்பிப் பார்ப்பது கூடக் கிடையாது, தெரியுமா? அதுதான் ஆயிரம் வாட் பல்பின் கதை!" என்று பெரிதாக முறுவலித்தாள் சுந்தரவதனி.

அவளை விசித்திரமாக நோக்கினான் சதானந்தன்.

ஆஹா, சொன்னதில் ஏதோ தப்பு விட்டுவிட்டோம் போல இருக்கிறதே! 'அம்' என்று தொடங்கிவிட்டு, 'மேடம்' என்று மாற்றியதைக் கவனித்திருப்பானோ? அது பற்றிக் கேட்டால் என்ன சொல்வது என்று சுந்தரி அவசரமாக யோசிக்கும்போது, சதானந்தனே, தன் பார்வையின் காரணத்தைச் சொன்னான்.

"யாரும் திரும்பிப் பார்ப்பதே இல்லை என்பதை, மகிழ்ச்சியாகச் சொல்லுகிறாயே? காதில் சரியாகத்தான் விழுந்ததா என்று, எனக்கு ஒரே சந்தேகமாகி போயிற்று! இந்த மாதிரிப் பழங்கால, உத்தமப் பெண் இனமெல்லாம், குறைந்து, அருகி, அடியோடு மறைந்து போயே, வெகு



காலம் ஆகிவிட்டதாகக் கேள்விப்பட்டேனே! இருக்கட்டும், இதுவும் நல்லதுதான்! என் பாட்டி, பழங்காலம் தொடர்பான எதையும், சந்தோஷமாகப் பார்த்து ரசிப்பார்கள். அதனால் வரும் சனியன்று, இந்த மாத விற்பனை, வரவு செலவுக் கணக்கோடு பாட்டியைப் பார்க்கப் போவதற்கு தயாராக இரு!" என்று இலகுவாகச் சொன்னான் சதா.

விற்பனை, வரவு செலவு கணக்கோடு பாட்டியைப் பார்க்கப் போவதா? அப்படி என்றால், இந்த நிறுவனத்தைப் பின்னே இருந்து நடத்துவது, இவனுடைய பாட்டியம்மாவா?

தன் பாட்டி சுந்தரம்மாவின் நினைவு, சுந்தரவதனிக்கு வந்தது.

தாத்தா தொடங்கியதை, அவருக்குப் பிறகும், உறுதியும் பிடிவாதமுமாகத் தொடர்ந்து நடத்தி வளர்த்தது, பாட்டிதான், மன வலிமை மிக்க பெண்மணி!

அதனால்தான், எல்லோரும் பாட்டிக்குப் பணிந்து போனார்களோ? அம்மா கூட... இல்லை, அப்போது என்ன நடந்திருந்தாலும், அது இப்போது மறக்கப்பட வேண்டிய விஷயம். இப்போதைக்கு, அவள் தாயின் அருகில் இருக்கிறாள்! மனதில், கோபமோ, தாபமோ இல்லாமல்! அது போதும்!

பிடிவாதமாக, மனதை வேலையில் தீவிரமாகச் செலுத்தி, மற்றதை மறக்க முயன்றவள், அதில் ஓரளவு வெற்றியும் பெற்றாள்.

பழைய கதையை மனதை விட்டு ஒதுக்கிய பிறகே, சதானந்தன் சொன்ன பாட்டி வீட்டு விஜயம் பற்றி, சக அலுவலர்களிடம் சுந்தரவதனி விசாரித்தாள்.

அதேபோல முந்தைய மாதம் சென்று வந்த பாண்டியனே, அவளிடம் நடந்ததை விவரித்தான்.

இந்தப் பயணம் மாதம் ஒருதரம், கட்டாயமாக நடப்பது. கடந்த மாதம், எம்டி வனிதா மேடமும், நிர்வாக டைரக்டரான சதானந்தனும், அவனும் அந்த மாத லாப நஷ்டக் கணக்கோடு, ஊரை விட்டுத் தள்ளியிருந்த பாட்டி வீட்டுக்குப் போனார்கள்.

முதலில், மூவரும் பாட்டியோடு அமர்ந்து விவரம் சொல்லிக் கணக்குகளைக் காட்டுவார்கள். அது முடிந்து, பெரியம்மாள் கையெழுத்திட, அப்புறம், குடும்பத்தினர் மூவரும் வீட்டுக்குள் இருந்து பேசுவார்கள்.

"குடும்பப் பேச்சை நாம் கேட்டுவிடக் கூடாது. அதேசமயம், நமக்கும் பொழுது போக வேண்டும். எனவே, தோட்டத்தைச் சுற்றிப்பார், என்று நம்மை வெளியே அனுப்பி விடுவார்கள். அவர்களது பேச்சு முடிந்து வரும்வரை, மணிக்கணக்காக அந்தத் தோட்டத்தில் சுற்றிக் கொண்டிருக்க வேண்டும்"

"தோட்டம் சின்னதா, பாண்டியன்?" என்று சுந்தரி கவலையுடன் கேட்டாள்.

பெரிய தோட்டம் என்றால், காற்றில் அசைந்தாடும் செடி, கொடிகளைப் பார்த்துக் கொண்டே, பொழுதைப் போக்கிவிடலாம்.

"சின்னதா? ரொம்பப் பெரியது! முன்னாலோ செடிகொடிகள். பின்னாலே பழ மரங்கள் என்று, பெரிய மலைப் பிரதேசமே! ஆனால், எவ்வளவு நேரம், அந்த இலைகளையும், பூக்களையுமே, மனிதன் பார்த்துக் கொண்டு இருக்க முடியும்? படு போரடித்துவிடும்! ஆனால் ஒன்று, தற்செயலாகக் கூட, அங்கே ஒரே ஒரு சின்ன இலையைக் கூடத் தொட்டு விடாதே! எங்கிருந்து பார்ப்பானோ? செடியையே வேரோடு பிடுங்கிவிட்ட மாதிரி, அந்தக் கிழட்டுத் தோட்டக்காரன், பிலுபிலுவென்று சண்டைக்கு வந்து விடுவான்! நாம் சொல்லும் பதிலைக் காதிலேயே வாங்காமல், கத்திக்கொண்டே இருப்பான்!" என்று எச்சரித்தான் அவன்.

"எம்டியோடு வருகிறவர்களைத் திட்டும் தைரியம், ஒரு தோட்டக்காரனுக்கு இருப்பது, ஆச்சரியமாக இல்லை" என்றார்கள் யாரோ.

"ரொம்ப வயதானவன். இவர்களிடமே, நிறைய ஆண்டுகளாக இருக்கிறான். அந்த உரிமையில், ரொம்பவே விரட்டுவான்! அங்கே வீட்டில் உள்ளவர்களும், அவனை, அதிகம் கண்டுகொள்ளாமலே, விட்டுவிடுவார்கள். கடைசியாக, நம்மைத்தான் 'வேண்டுமானால் காரில் போய் உட்கார்ந்திருங்கள்' என்றான் பாண்டியன். "முக்கியமானதை விட்டுவிட்டேனே. வேளா வேளைக்கு நல்ல சாப்பாடு கிடைக்கும். பக்கத்தில் நின்று, மரியாதையாகப் பரிமாறுவார்கள். அவ்வப்போது குடிப்பதற்கும், ஏதாவது கொண்டு வந்து தருவார்கள். இரண்டு மணிக்கு மேலே பாட்டியம்மா ஓய்வு எடுக்கப் போகிறபோது, நாமும் கிளம்ப வேண்டியதுதான்" என்று பேச்சை முடித்தான்.



பாண்டியன் சொன்னது போலவே, அன்று காலையிலேயே, மூவரும் கிளம்பிப் போனார்கள்.

நீலமலை அடிவாரத்தில் சதானந்தனுடைய பாட்டி வீடு இருந்தது. வேளாண்மைக் கல்லூரிப் பகுதியைத் தாண்டி, செல்லும் வழியெல்லாம் பசேல் என்று கண்ணுக்குக் குளுமையாக இருந்தது.

ரசனையோடு சுந்தரவதனி பார்ப்பதைக் கவனித்து "ஏதாவது வாரக் கடைசியில், உன் குடும்பத்தை வரவழைத்து, ஊட்டி வரை போய் வாயேன். இந்த சமயத்தில், பார்க்கும் இடங்கள் எல்லாமே அழகாக இருக்கும். அப்படியே குடும்பத்தோடு இரண்டு நாட்கள் சந்தோஷமாகக் கழித்த மாதிரியும் இருக்கும்" என்றாள் வனிதா.

உதவும் மனப்பான்மையில் சொல்லப்பட்டதுதான். ஆனால், ஊட்டிக்கு அவள் எந்தக் குடும்பத்தை அழைத்துச் செல்ல முடியும்?

அல்லது, என்னைத் தெரிந்த குடும்பத்துக்கு நான் வேண்டாதவள் ஆகிவிட்டேன், இப்போது நான் அறிந்த குடும்பமான தாய் உனக்கோ, என்னையே தெரியாதே என்று, பதில் சொல்லத்தான் முடியுமா?

தந்தை இருந்தும், தாயிருந்தும், இப்படி ஒரு நிலைமை!

"குடும்பமா? அப்படி ஒன்று இருந்தால்தானே, மேடம்?" என்று சற்றுக் கசந்த குரலில் சுந்தரவதனி பதில் உரைக்கவும், அதற்கு மேல் வனிதா, அந்தப் பேச்சை விட்டுவிட்டாள்.

ஆனால், பேச்சே இல்லாமல் போகவும் விட்டுவிடாமல், தூரத்து மலையில் வெள்ளி ஜரிகை போல நீர் வழிவதை வனிதா கூற, சதானந்தன் காரை நிறுத்தி, அதை நன்கு பார்க்க வழி செய்ய, சுந்தரியின் சோர்வு, வந்த வேகத்தில் மறைந்து போனது.

மெல்லப் பேச்சு, தொழில் பற்றி அலசுவதாக மாறிற்று.

"முதல்நாள் பேட்டியின்போது சுந்தரவதனி சொன்னது போலப் பத்தும் பத்து மடங்காகப் பெருகி, நூறு ஆவதில், கொஞ்சம் பிரச்சினை வருகிறது. சிலதில், எண்ணியதை விடவும் வேகமான வளர்ச்சிதான். ஆனால், சிலது ரொம்பவே விந்தி நடக்கின்றன. விளம்பரம் செய்யலாம் என்றால், பெரிய நிறுவனங்களோடு, அதில் போட்டி போட, இப்போது நம்மால் முடியாது. இப்படியே போனால், நாலு இடங்களை மூட வேண்டி வருமோ என்று..." என்று அவன் முடிக்கும்முன், "வேண்டாம் சார்" என்று சுந்தரி குறுக்கிட்டாள்.

"அதை தொடங்கும்போது, கூடச் சேர்ந்து அதில் வேலையைத் தொடங்கியவர்களுக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும்?" என்று காரணம் சொன்னாள்.

"ஆனால், நஷ்டத்துக்குத் தொழில் நடத்த முடியாதில்லையா, சுந்தரி? நீ, தொழில் நிர்வாகம் படித்தவள்தானே? வேறு என்ன செய்வது? சொல்லு?" என்றாள் வனிதா.

எம்டி சொல்வது, சரியே. ஆனால்....

அவசரமாக யோசித்து "இன்னும் ஒரு முயற்சி செய்து பார்க்கலாமேம்மா? பெரிய மீடியாக்களில் விளம்பரம், அதிகச் செலவுதான். அதிலும் போட்டி நிறுவனங்கள் மிகவும் பெரியவை என்பதால், நம் விளம்பரம், வீண் பண விரயமாகவும் ஆகக்கூடும். ஆனால், இன்னொரு மாதிரி... ஒவ்வொரு வாரமும், நம் செல்ஃபோன்களின் விற்பனை ரசீது எண்களைக் குலுக்கிப்போட்டு, அதில் எடுக்கப்படும் எண்ணுக்குரிய செல்ஃபோன் பணத்தைத் திருப்பிக் கொடுத்தால்? லாட்டரி பரிசு மாதிரி! விற்கும்போதே, இப்படி ஒரு குலுக்கல், இந்தக் குறிப்பிட்ட தேதியில் நடக்கப் போகிறது என்று சொல்லியே விற்போம். தொடர்ந்து இப்படிக் கொடுக்கும்போது, வேற்று நிறுவன செல்லை வாங்கப் போகிறவர்கள் கூட, இங்கே வாங்கினால், ஒருவேளை, பணம் திரும்பக் கிடைக்கக் கூடும் என்று நம்மிடம் வாங்குவார்கள். மொத்த விற்பனை பெருகும்போது, அந்த லாபத்தில் இந்த இலவசப் பரிசுப் பணம், சுண்டைக்காய் ஆகிவிடும்!" என்று விறுவிறுவென்று அவள் சொல்லிக் கொண்டே போக, "வெரிகுட்!" என்று அவளது தோளைத் தட்டினாள் வனிதா.

மின்சாரம் பாய்ந்தது போல, சுந்தரி அதிர்ந்து விட்டாள்.

அன்னை அவளைத் தொட்டுவிட்டாளே! எத்தனை நாள் ஏக்கம்!

பெற்ற தாய் தொடுவது என்றால், என்ன ஒரு பேரின்பம்!

அன்பான பெற்றோரிடம், நல்லபடியாக வளர்கிறவர்கள் எப்பேர்ப்பட்ட அதிருஷ்டசாலிகள்! தினமும் தவித்திருந்த அவளைப் போல, மற்றவர்கள் உணர்ந்திருப்பார்களா?

அதிருஷ்டத்தை, அதிருஷ்டம் என்று அறிந்து கொண்டவன்தான், அதிருஷ்டசாலி என்று பாண்டிச்சேரி அன்னையின் பொன்மொழி ஒன்றை எங்கேயோ படித்த நினைவு, சுந்தரவதனிக்கு நினைவு வந்தது.



இந்த சுகத்தை அறிந்து அனுபவிக்கிறவர்கள் எத்தனை பேரோ?

பெண்ணின் திகைப்பைக் கவனியாமல், "நல்ல யோசனை, சதா. செய்து பார்க்க வேண்டும்" என்றாள் வனிதா.

கூடவே "எவ்வளவு யோசித்துச் சொல்கிறாள் பார்! அதிலும் குறுக்கே புகுந்து, பேச்சை நிறுத்தி விடுவோமோ என்று, என்ன வேகமாகப் பேசினாள்! நிறுவனம் வளர வேண்டும் என்று, சுந்தரிக்கு உண்மையான ஆர்வம் இருக்கிறது!" என்றும் பாராட்டினாள்.

"ஆமாம் வனிம்மா! கட்டாயம் இருக்கத்தானே செய்யும்! நிறுவனம் என்னதாயிற்றே!" என்று பெருமைக் குரலில் சொன்னான் அவன்.

"நிறுவனத்தோடு சேர்ந்து, நானும் வளர்வேன் என்று, அன்றைக்கே சொன்னேனே, மேடம்! நீங்கள், கிளைகளை மூடினால், நான் எப்படி வளர்வது?" என்று விடாமல் பதில் சொன்னாள் சுந்தரி.

இந்தப் பேச்சு வார்த்தையை உள்ளூர, ரசித்துச் சிரித்துவிட்டு "கடவுள் அருளால், இரண்டு வளர்ச்சிகளுமே, நல்லபடியாக நடக்கும்!" என்றாள் எம்.டி!

கலகலப்பான பேச்சினூடே, மேலும் சற்று தூரம் சென்ற பிறகு, ஒரு சிறு கிளைப் பாதை வழியே கார் சென்றது.

இரு புறத்திலும் உயரமான சுற்று மதில் நீண்டு செல்ல, இடையே இருந்த பெரிய கேட்டை 'ரிமோட்' மூலம் திறந்து கொண்டு, காரை உள்ளே செலுத்தினான் சதானந்தன்.

கார் உள்ளே சென்றதும், அந்தக் கதவுகள் தானாக மூடிக் கொண்டன.

சுந்தரவதனி திரும்பிப் பார்ப்பதைக் கவனித்து "காட்டு மிருகங்கள் உள்ளே வந்துவிடாமல் தடுப்பதற்காக, இந்த ஏற்பாடு! எப்போதாவது வந்து போகும் எங்களுக்காக, எப்போதும் வாயிலில் ஆள் நிறுத்துவது இல்லை. ஆனால், பாதுகாப்பு ஏற்பாடுகள் பக்காவாக இருக்கும்" என்றான் சதானந்தன்.

மலை சாரலில் ஓர் எஸ்டேட் வீட்டைப் பார்ப்பதும், சுந்தரிக்கு முதல் அனுபவமே! இனிய அனுபவமாகவும் இருந்தது!

ஆனால், அவள் எண்ணி வந்ததுபோல அல்லாமல், அவளுக்கு ஓர் ஏமாற்றமும் நேர்ந்தது!



# தேடினேன் வந்தது 8

வரவு செலவுக் கணக்கைக் காட்டி, பாட்டியம்மாவிடம் கையெழுத்து வாங்க வேண்டும் என்று சொல்லிக் கிளம்பிய போது, தன்னுடைய தந்தை வழிப் பாட்டி சுந்தரம்மாவைப் போன்ற ஓர் அழுத்தமும் அதிகாரமும் நிறைந்த பெண்மணியையே, சுந்தரவதனி எதிர்பார்த்திருந்தாள்.

பாண்டியன் அது போல எதுவும் சொல்லாதபோதும், பாட்டியம்மாவின் குறுக்கு விசாரணையை எதிர்பார்த்து, தேவைப்பட்ட தகவல்கள் அனைத்தையும், மனப்பாடமாய்த் தயாராக வைத்திருந்தாள்.

ஆனால், சுந்தரம் பாட்டியை விட, சற்று வயதானவளாக, முதியவளாகவும், தோன்றிய காந்திமதியம்மாளுக்குத் தொழில் பற்றிய ஆர்வம், சிறிதும் இருக்கவில்லை.

"இதைப் பாருங்கள் அம்மா..." என்று வனிதா தொடங்கியதுமே குறுக்கிட்டு "நீ சொன்னால் சரியாகத்தானேம்மா இருக்கும். எங்கே என்று இடத்தை மட்டும் காட்டு. கையெழுத்திடுகிறேன்" என்று பெரியவள் கூறவும், ரொம்பவே அதிர்ச்சியாக இருந்தது.

காட்டிய இடத்தில் கையெழுத்திடுவது என்றால், இந்தக் கணக்கு வழக்கெல்லாம் எதற்கு? பேசாமல், மொத்தமாக பெரியவளின் கையெழுத்தை வாங்கி வைத்துக்கொண்டு தேவைப்படும்போது, பயன்படுத்திக் கொள்ள வேண்டியதுதானே?

எதற்காக, அங்கிருந்து கிளம்பி, இங்கே இவ்வளவு தூரம் வந்து... எதற்காக இந்த நாடகம் என்று, அவளது யோசனை ஓடியது!

இதைப் பார்த்து ஏமாறுவதற்குக் கூட, இங்கே வேறு ஒருவரையுமே காணோமே!

அவ்வளவு நம்பிக்கை இந்தப் பெரியம்மாவுக்கு இருக்கும்போது, எதற்காக இந்த வீண் அலைச்சல்?

ஆனால், யோசிக்கலாமே தவிர, இது பற்றிக் கேள்வி கேட்கும் பதவியில் அவள் இல்லை. எனவே காந்திமதியம்மாள் கையெழுத்திடுவதற்கு வசதியாக, ஒவ்வொரு 'ரிப்போர்ட்'டையும், பக்கம் பிரித்து எடுத்துக் கொடுத்தாள்.



அலுவலக வேலை முடிந்ததும் 'மாதனிடம் சொல்லி, சுந்தரியைத் தோட்டத்தில் விட்டுவிட்டு வருகிறேன், பாட்டி" என்ற சதானந்தன் அவளை அழைத்துப் போனான்.

இதுதான் பாண்டியன் சொன்ன தோட்டத்தைச் சுற்றிப் பார்ப்பது போல ஒதுங்குவது என்பது புரிய, பெண்கள் இருவரிடம் ஒரு மரியாதைப் புன்னகையோடு, சுந்தரியும், அவனைப் பின் தொடர்ந்தாள்.

செல்லும்போதே "ரொம்பக் குழப்பம் போல?" என்று கேட்டவன், தானே பதிலையும் கூறினான் "ஓர் இக்கட்டான சூழ்நிலையில், குடும்பச் சொத்துக்களையும், என்னையும் காப்பாற்றியது, வனிம்மாவின் புத்திசாலித்தனம்தான் என்று பாட்டி சொல்வார்கள். சொல்லப் போனால், நான் இன்று உயிரோடு இருப்பதே, அவர்களால்தானாம். என்னையும் சொத்துக்களையும், முழு உரிமை கொடுத்து, அம்மாவிடமே, பாட்டி ஒப்படைத்தார்களாம். ஆனால், வனிம்மாதான் கடைசியாக முடிவு செய்யும் உரிமை பாட்டியிடமே இருக்க வேண்டும் என்று, அவர்கள் கையெழுத்து இல்லாமல் எதுவும் நடக்க முடியாதபடி செய்திருக்கிறார்கள். என்ன நடக்கிறது என்று பாட்டி தெரிந்து கொள்ள வேண்டுமாம். அதற்காகத்தான் இந்தக் கையெழுத்துப் படலம். குழப்பம் தீர்ந்துவிட்டதா? தோட்டத்தின் அழகை, நிம்மதியான மனதோடு ரசிக்கலாம்தானே?"

சரியாகச் சொல்வதானால், அவனது விளக்கத்திலும் கேள்வியிலும்தான், சுந்தரவதனி இன்னமும் குழம்பிப் போனாள் எனலாம்.

அவர்களிடம் பணி புரியும் ஒருத்தி! அவளது சஞ்சலத்தை உணர்ந்து, அதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று, சதானந்தனுக்கு என்ன அவசியம்?

இதுபோல விளக்கம் பாண்டியனுக்கும் கிடைத்திருக்கலாம்.

ஆனாலும், அவள் நிம்மதியாக இருக்க வேண்டும் என்று அவன் எண்ணியதே, சுந்தரியின் மனதுக்கு, மிகவும் இதமாக இருந்தது. சந்தோஷமாக, உற்சாகமாக... இன்னும் என்னென்னவோ நல்ல உணர்வுகளோடு இருக்க முடிந்தது.

சுந்தரவதனி எதிர்பார்த்தது போல, மாதன், தோட்டக்காரன் இல்லை! நாய்களைக் கவனிப்பது, அவனது பொறுப்பு. அவனிடம் சதானந்தன்

ஏதோ சொல்ல, அவன் பெரிதாகத் தலையாட்டினான்.!

சதானந்தன் உள்ளே சென்றதும், மாதன் ஒரு விதமாக விசில் கொடுக்க, ஏழெட்டு நாய்கள் அங்கே ஓடி வந்தன.

“பொதுவாக, இந்த நாளிலே கட்டி வச்சிருப்போம். இன்னிக்குக் கட்ட வேண்டாமின்னு, அய்யா சொன்னாருங்க!” என்றவன், “கொஞ்சம் அசையாமல் நில்லுங்கம்மா” என்று நாய்களை அருகே அழைத்து அறிமுகப்படுத்தி வைத்தான்.

பின்னர் “இனிமே, நீங்க எங்கே வேணுமானாலும் போங்கம்மா. இதுங்க, ஒன்னும் பண்ணாதுங்க. ஆனால் செடிங்களை தொட்டு விடாதீங்க. கிழவன் கத்தியே தீர்த்து விடுவான்” என்று விட்டுப் போனான்.

இன்னும் ஏதோ மனதுள் கிளர்ந்தெழுந்தது.

எப்போதும் கட்டி வைக்கப்படும் நாய்களை, இன்று ஏன் கட்ட வேண்டாம் என்று சொன்னான்? அவளுக்காகவா? அப்படி அவள் என்ன உசத்தி? குறிப்பாக சதானந்தனுக்கு?

‘ஜிவ்’வென்று பறக்கத் தொடங்கிய உள்ளத்தைக் கொஞ்சம் தட்டி அடக்கினாள்.

உசத்தி அல்லடி மக்குப் பெண்ணே! ‘இம்’மென்றால் கொதித்துக் கண்ணீர் விடும் இந்தக் கோழைப்பெண், அப்படியெல்லாம் ஒரு பெரிய திருட்டு கும்பலைக் கூட்டி வந்து, அவனுடைய பாட்டி வீட்டைக் கொள்ளையடித்து விட மாட்டாள் என்கிற தைரியம்! இதற்குப் போய், உச்சிக் குளிரத் தேவையே கிடையாது!

ஆனால், இந்தத் தட்டல்களால் எல்லாம், சுந்தரவதனியின் உற்சாகம் குறைவதாக இல்லை.

இன்றைக்கு, அவளுடைய தாயின் அருகாமை, தொடுகை, பாராட்டு எல்...லாம் கிடைத்திருக்கின்றன. எனவே, இந்த நாள் அவளுக்கு ஒரு மறக்க முடியாத பொன்னாள். பொக்கிஷமாகப் போற்றப்பட வேண்டியது! இந்த நாளின் சந்தோஷத்தை, யாரும் எதுவும் குறைக்க முடியாது!

அத்தோடு செய்யும் வேலை விஷயமாக, சதானந்தனுக்கும், அவளிடம் திருப்திதானே? பிறகு குறைபட என்ன இருக்கிறது?

சக அலுவலர் பாண்டியனைப் போல அல்லாமல், இயற்கை விரும்பியான சுந்தரவதனிக்கு, அந்தப் பெரிய தோட்டம் மிகுந்த



மகிழ்ச்சியை அளித்தது.

நல்ல பரந்து விரிந்த தோட்டத்தில் பல்வேறு விதமான மலர்கள்!

ரோஜாக்களில், நிறைய வகைகள், வாசனைக்கு, மனோரஞ்சிதம் எங்கேயோ ரகசியமாகப் பூத்திருந்தது, மணம் பரப்பியது!

இன்னும் எத்தனையெத்தனை கெட்டகாலங்கள், அவளுக்கு இருக்கின்றனவோ! தப்பில்லாத முறையில் நல்லது கிடைக்கிற நேரத்தில், அந்த மகிழ்ச்சியை முழுதாக அனுபவித்துக் கொள்ள வேண்டும்!

எதைப் பார்ப்பது, எதை விடுவது என்று குழம்பும் வண்ணம், தோட்டம் செம்மைப் படுத்தப்பட்டிருந்தது. பாத்திகளிலும் ஓர் ஒழுங்கு முறையும், அழகும் இருந்தன. ஒரு கலையாக இந்தத் தோட்டத்தை ஆசையாக வளர்க்கிறவனுக்கு, அதை யாரும் தொடுவது பிடிக்காதுதான். அவன் கத்துவது பற்றிக் குறை சொல்ல முடியாது!

கவனத்துடனேயே, இங்கும் அங்குமாக நடந்து, வண்ண மலர்களை கண் குளிரப் பார்த்துக் கொண்டிருந்தவள், கொத்துக் கொத்தாக மலர் மணம் பரப்பிக் கொண்டிருந்த ஒரு ரோஜாப் பாத்தியைக் கண்டதும், அப்படியே நின்றாள்.

எந்தக் கலவனும் இல்லாத இயற்கை ரோஜா. ஒவ்வொரு கொத்திலும் நிறைய மொட்டுக்கள், பூக்கள் பல்வேறு நிலையில் இதழ் விரித்து மலர்ந்து கொண்டிருந்தன.

மற்றவைகளும் அழகுதான். ஆனால், இந்த ரோஜாக்களின் விவரிக்க முடியாத மென்பட்டுத் தோற்றமும், இனிய மணமும் மற்றவைகளை விடவும் சுந்தரியை ரொம்பவே வசீகரித்தன.

சுற்றிச் சுற்றி வந்து பார்த்தவளுக்கு அந்தப் பாத்தியை விட்டு அகலவே மனம் வரவில்லை. சற்று நடப்பதும், திரும்பி வந்து அந்த ரோஜாக்களில் ஒன்றை வாசம் பார்ப்பதுமாக, அங்கேயே சுற்றிச் சுற்றி வந்தாள்.

தொட்டால்தானே, தோட்டக்காரன் திட்டுவான்? வெறுமனே, பார்த்து ரசிக்கிறோம், வாசம் பிடிக்கிறோம், அவ்வளவுதானே என்பது, அவளுக்கு.

ஆனால், பண்ணை வீட்டின் முதல் மாடியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த குடும்பத்தினருக்கு, அவளது ரசனை கண்ணில் பட்டு,

சிறு வியப்பையும், சற்று சங்கடத்தையும் கொடுத்தது.

இவ்வளவு ஆசையாக ஓர் இளம் பெண், மீண்டும் மீண்டும் வந்து பூவைப் பார்ப்பதும், வாசம் பிடிப்பதுமாக பார்க்க வேடிக்கையாகத்தான் இருந்தது. ஆனால் இவ்வளவு ரசிப்பவள், ஒரு பூதானே என்று ஆசையில் பறித்துவிட்டால்?

தோட்டக்கார கோவிந்தன், பாட்டியம்மா மணப் பெண்ணாக வந்த காலத்தில், சின்னப் பையனாகப் பண்ணையில் சுற்று வேலை செய்து கொண்டிருந்தவன், படிப்படியாகப் பண்ணைத் தோட்டம் முழுதும் அவன் பொறுப்பு என்கிற அளவுக்கு, உண்மையான உழைப்பாலேயே உயர்ந்தவன். உரிமையோடு, முதலாளி வீட்டினரையே கடிந்து கொள்வான். மூத்த பணியாளனாக, கத்தத் தொடங்கினான் என்றால், யார் பேச்சும், அவன் காதிலேயே விழாது! அவன் கத்துகிற கத்தலில், இந்தப் பெண்ணின் அழகான பூமுகம் வாடிவிடாது!

சுந்தரவதனி மூன்றாவது தடவையாக ஒரு பூவின் அருகே முகத்தைக் கொண்டு போய், ஆசையாக பெரிதாக மூச்சிழுக்கவும் "என்ன வனிம்மா, இந்த வதனி!" என்று சதானந்தன் எழுந்துவிட்டான்.

"இவ்வளவு ஆசைப்படுகிறாளே! வேண்டுமானால், இந்த கோவிந்தனைக் கூப்பிட்டு, அவனையே ஒரு பூவைப் பறித்துக் கொள்ளச் சொல்லலாமா?" என்று பாட்டியம்மா கேட்டுக் கொண்டிருக்கும்போதே, மடமடவென்று படியிறங்கி, சுந்தரியிடம் வேகமாகச் சென்றான் சதானந்தன்.

தடதடவென்று பேரன் வேகமாகப் படியிறங்குவதை சிறு வியப்புடன், கவனித்துவிட்டு, எட்டிப் பார்த்த காந்திமதிக்கு, அங்கே கண்ணில் பட்ட காட்சியில் ஒரே அதிசயமாகிப் போயிற்று!

"என்ன வனிதா, தோட்டக்காரனிடம் சொல்லச் சொன்னால், இவன் இந்த ஓட்டம் ஓடி, அவனே, அவளுக்குப் பறித்துக் கொடுக்கிறானே!" என்றாள் ஆச்சரியத்துடன்.

"அதுதான் பெரியம்மா, நானும் உங்களிடம் தனியே பேச நினைத்தேன். சதா வருமுன் முடிந்தவரை சொல்கிறேன்..." என்று தொடங்கினாள் வனிதா.

"முதலிலேயே, அவளோடு ஹோட்டலில் ஐஸ்க்ரீம் சாப்பிட்டிருக்கிறான். யாரோ ஒருவன் அவ்விடம் அக்கறை காட்டினான்



என்று அவளைத் திட்டி, அதற்கு அவள் அழுதாள் என்று, பக்கத்து ரூபன் நிறுவனத்தில் பணி புரிந்த அந்தப் பையனின் வேலைக்கே உலை வைத்துவிட்டான். என் கற்பனைதானோ, என்னவோ, அவளை, அவன் பார்க்கிற பார்வையே, சற்று வேறு மாதிரியே, எனக்குத் தெரிகிறது" என்றாள் வனிதா.

"பெண் எப்படி?"

"நல்ல பெண்தான். ஆனால், என்னைப் போலவே, ஓர் அனாதை!" என்றாள் வனிதா, மெல்லிய குரலில்.

கையை நீட்டிச் சின்னவளைத் தொட்டாள் காந்திமதி அம்மாள் "நானும் சதானந்தனும் இருக்கிறவரை, நீ இந்த வார்த்தை சொல்லலாமா வனிதா?" என்று சிறு கோபத்துடன் கேட்டாள்.

உடனேயே முகம் மாறி, "அவளை என்னவோ 'வதனி' என்றானில்லை? வனிதா... வதனி! ஒரே எழுத்துக்களைக் கொண்ட, கிட்டத்தட்ட ஒரே மாதிரியான பெயர்கள். குணத்திலும் அவள் உன்னைப் போலவே இருப்பாளானால், அதற்கு மேல் என்ன வேண்டும்?" என்றாள் பெரியவள்.

சற்று யோசித்துவிட்டு "வரும்போது ஒன்று நடந்தது, பெரியம்மா. போன மாதம் தொடங்கிய கிளைகள் சிலதைப் பற்றி..." என்று தொடங்கி, சுந்தரவதனியின் யோசனையையும், அதை அவள் சொன்ன விதத்தையும் பற்றி பெரியவளிடம் கூறினாள்.

"ஓகோ! பார், உன்னைப் போலத்தான். அவளைப் பார்த்ததுமே, என்னவோ, உன்னோடு ஒத்தாற்போல எனக்குத் தோன்றியது. சாயல், தோற்றம் எதுவும், ஒன்றுபோல இல்லை. ஆனால், பார்வையோ, பார்க்கும் விதமோ... அசைவுகளோ... ஏதோ! அதனாலேயே எனக்கும், அவளைப் பிடித்துப் போயிற்று. இவ்வளவு காலம் கழித்து, சதாவுக்கும் ஈடுபாடு ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறாய். இப்போதே, நேராகச் சம்மதம் கேட்டு விடுவோமா?" என்ற காந்திமதியின் வேகத்தில், வனிதாவுக்குச் சிரிப்பு வந்தது.

"அம்மா... ஜெட் மாதிரி, எடுத்த எடுப்பிலேயே ரொம்ப வேகம் போகிறீர்களே! சதா மனம் பற்றி எனக்கு, லேசாக ஒரு சந்தேகம், அவ்வளவுதான். அதற்குமேல், அவன் மனதில் சுந்தரி இருந்தால், அசட்டுத்தனமாகத் தயங்காமல், அவனே திருமணப் பேச்சை எடுத்து

விடுவான். மற்றபடி அவன் ஈரெட்டாக இருக்கும்போது, நாம் அவசரப்பட்டால், பழைய மாதிரி வக்கரிக்கவும் வாய்ப்பு இருக்கிறதே. இப்போதைக்கு, எதையும் கண்டு கொள்ள வேண்டாம். அவர்கள் இருவரும் அடிக்கடி சந்தித்து, அதிக நேரம் பேச, நான் ஏற்பாடு செய்கிறேன். நல்ல மன நெருக்கம் ஏற்பட்டுவிட்டால், அப்புறம் சதாவை நாம் உந்தத் தேவை இராது. சரியென்று பட்டால், தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளாமல், சதா சும்மா இருக்கிறவன் இல்லை!" என்றாள் வனிதா.

ஆனால், காந்திமதியின் முகம், முதலில் இருந்த ஆர்வம் மாறி, இப்போது யோசனையைக் காட்டியது "ஆனால், இந்தப் பெண்ணும், அந்தத் தப்பைச் செய்துவிட மாட்டாளே? உன்னைப் பற்றி, ஒரு மாதிரியாகக் கேள்வி கேட்டாள் என்று, கிட்டத்தட்ட நிச்சயம் என்கிற அளவுக்கு வந்த திருமணத்தை நிறுத்தியவன் சதா. அந்தக் கேள்வி வரக்கூடும் என்பதற்காகவே இன்றுவரை, திருமணம் பற்றிப் பேச, நம்மையும், அனுமதித்தது இல்லை. இப்போது, இவள் எப்படி வனி? அப்படிப்பட்டவள்தான் என்றால், இப்போதே, வெளியூர்க் கிளை எதற்கேனும்... ஏன் வேலையை விட்டே கூட அனுப்பி விடும்மா. ஏனென்றால், என்னாலும், அதுபோலப் பேச்சைத் தாங்க முடியாது!" என்றாள் அந்த முதியவள்.

கண்களில் நீர்த்திரையிட "அம்மா" என்று எழுந்து வந்து, காந்திமதியின் அருகே தரையில் அமர்ந்து, பெரியவளின் முழங்கால் மீது தலை சாய்த்துக் கொண்டாள் வனிதா.

"என்னடாம்மா" என்று சின்னவளின் தலையைக் காந்திமதி வருட, பழைய நினைவுகளில் ஆழ்ந்து, இருவரும் சற்று நேரம் அப்படியே அமர்ந்திருந்தனர்!

பெரியவர்கள் இருவரும் பழைய நினைவுகளில் ஆழ்ந்திருக்க, இளைய சமுதாயம் உல்லாசமாக உரையாடியபடியே தோட்டத்தைச் சுற்றிப் பவனி வந்தது.

திடுமென சதானந்தன் வந்து, ரோஜாவைப் பறித்து "இந்தா" என்று நீட்டவும், முதலில் சுந்தரி சற்றுத் தடுமாறிப் போனாள். "நா... நான் பறிக்கவில்லை, சார்! தொட்டுக் கூடப் பார்க்கவில்லை!" என்று அவசரமாக சொன்னாள்.



தோட்டக்காரன், இவனிடம் புகார் செய்திருப்பானோ என்ற சந்தேகம்.

ஏதோ நல்லவேளை! தானே கத்தி, எல்லோரும் அறியக் கேவலப்படுத்தாமல், இவனிடம் வந்து புகார் சொன்னதே நல்லதுதான். எதையும் நேரடியாகப் தெளிவாகச் சொல்லி விடலாம்!

"நான் செடியின் ஒரு பாகத்தைக் கூட தொடவில்லை., சதா சார்! சும்மா வாசனைதான் பார்த்தேன். உங்கள் தோட்டக்காரன் எங்கிருந்தோ பார்த்ததில் தவறாகப் புரிந்துகொண்டு உங்களிடம் ஏதோ..."

"ஷ், சுந்தரி. போதும்!" என்று பேச்சை நிறுத்தினான், சதானந்தன். "தோட்டக்காரக் கோவிந்தன் யாரிடமும், எந்தப் புகாரும் சொல்லவில்லை. ஆனால் உன்னை எவ்வளவோ புத்திசாலி என்று நினைத்தேன். ஒரு சின்ன விஷயம் புரியவில்லையே! ஒருவேளை, காரில் வரும்போது, உன் மூளைக்குச் சற்று அதிக வேலை கொடுத்துவிட்டாய் என்று, இப்போது அது, ஓய்வெடுக்கப் போயிருக்குமோ?" என்று பெரிதாக யோசித்தான்.

கண்டிக்க வந்திருக்கிறான் என்று அஞ்சியதற்கு நேர் மாறாக, அவன் கிண்டலாகப் பேசவும், சுந்தரிக்கு மெய்யாகவே, எதுவும் புரியவில்லை! அந்தச் சின்ன விஷயம் என்னவாக இருக்கும்?

"இன்னும் தெரியவில்லையா? யோசி, தோட்டக்காரன் வந்து உன்னைப் பற்றிக் குறை கூறியிருந்தால், இப்படி நானே வந்து பூவைப் பறித்து, உன்னிடம் கொடுப்பேனா? அப்பா! எவ்வளவு நேரம், இந்தப் பூவை தூக்கி வைத்துக் கொண்டிருப்பது? முதலில், இதைப் பிடி" என்று பூவை நீட்டினான் சதானந்தன்.

இப்படிப் பூவை நீட்டினால் எப்படி வாங்கிக் கொள்வது? அவன் ஒன்றும் நினைத்திராவிட்டாலும், இதன் அர்த்தமே வேறாயிற்றே!

"அப்பப்பா! இவ்வளவு பெரிய பளுவைத் தூக்கிக் கொண்டிருப்பது, கஷ்டம்தான்!" என்று கிண்டலாக உரைப்பது போலக் காலம் கடத்தும்போதே சுந்தரவதனியின் மனம் செய்வது அறியாமல், குழம்பித் தவித்தது.

பூவை வாங்கிக் கொள்வது தப்பாகத் தெரியுமா? அல்லது, வாங்காமல் இருப்பதுதான் தப்பா? எது சரி? எது தப்பு? இந்த இருபத்தியிரண்டு வயதில், பொதுவாக, ஆண்களிடம், முக்கியமாக

இளைஞர்களிடம் சட்டென்று எதையும் வாங்கிக் கொள்வது கூடாது என்கிற அளவு அவளுக்கும் தெரியும். அதுவும், அன்னையின் அருகாமையின் அருமையை உணர்ந்திருக்கும் இந்த வேளையில், தவறான எந்த ஒரு செயலாலும், அதை இழக்க, அவள் தயாரில்லையே! இப்போது என்ன செய்வது?

சுந்தரியின் தயக்கம், சதானந்தனையும் யோசிக்க வைத்தது.

அவ்வளவு ஆசைப்படுகிறவளுக்குக் கொடுத்து விட வேண்டும் என்பது மட்டுமே எண்ணமாக வந்தவனுக்கு, பூவை வாங்கிக்கொள்ள அவள் தயங்கிய காரணமும் புரிந்தது.

முதலிலேயே, பாட்டி சொன்னது போலத் தோட்டக்காரனை அழைத்துப் பறித்துக் கொடுக்கச் சொல்லியிருக்க வேண்டும்!

கீழே விழுந்துவிடாமல், ஓர் இலைக் கொத்தின் மேல் பூவை வைத்துவிட்டு, "சாரிம்மா. தப்பாக எடுத்துக் கொள்ளாதே. மேலே இருந்து பார்த்துவிட்டு, பாட்டிதான் பூவைக் கொடுக்கச் சொன்னார்கள்" என்று சதானந்தன் சாதாரணமாக கூறவும், விடை கிடைத்தாற்போல, அதற்கு மேல் தயங்காமல், சுந்தரி அந்த மலரை எடுத்துக் கொண்டாள்.

பூவைப் பறித்துக் கொடுத்தவன், அதற்கு மேல், அது பற்றிப் பேசாமல், "அந்தப் பக்கம் சில அபூர்வமான ஆர்க்கிட் வகைகள் இருக்கின்றன. உனக்குப் பார்க்கப் பிடிக்கும் என்று நினைக்கிறேன்" என்று வழிகாட்டி நடக்க, அழைப்பாக ஏற்று, அவளும் அவனைத் தொடர்ந்து செல்லலானாள்.

செடி கொடிகள் அடர்ந்து, படர்ந்திருந்த நடை பாதை வழியே செல்லும்போதே, சுற்றிலும் பார்வையைச் செலுத்தி அவள் ரசிப்பதைக் கவனித்து, அவனும் மெல்ல நடக்கலானான்.

தலையில் இடிப்பது போலத் தாழ தொங்கிய கிளைகளை ஒதுக்கியும், இப்புறமும், அப்புறமுமாக நகர்ந்தும் செல்கையில் மிகவும் ஒட்டித்தான் செல்ல வேண்டியிருந்தது. ஆனால், என்னவோ அவளுக்கு வேறுபாடாக ஒன்றும் தோன்றவில்லை. கிலோ மீட்டர் கணக்கில், இப்படியே செல்லலாம் போல, சுகமாகவே இருந்தது.

ஒருதரம், அவளது கையைப் பற்றி நிறுத்தி, சின்ன விளையாட்டுப் பந்துகள் போல இருந்த இரு குஞ்சுகளுக்குத் தேன் சிட்டுகள் உணவு கொடுப்பதை அவன் சுட்டிக் காட்ட, அவளுக்கு ஒரே மகிழ்ச்சி!



செல்ஃபோனில் படம் பிடித்துக் கொண்டாள்.

அதேபோல, அணில் குடும்பம் ஒன்று, அவர்களைக் கண்டு விழுந்தடித்து ஓட, இருவருக்கும் சிரிப்பு வந்தது.

"ஐயோ, எல்லாம் என்ன அழகு சார்! உங்களால்தான் இதெல்லாம் பார்க்க எனக்குக் கொடுத்து..." என்று அவள் நன்றி சொல்லத் தொடங்க, அதை நிறுத்தி "பொறு, பொறு. இதே போல, எலி, பெருச்சாளி கூட ஓடுவதுண்டு. இன்னும் பல தினுசுப் பூச்சிகளும், உன் நல்ல நேரம், அப்படி எதுவும் கண்ணில் படவில்லை!" என்று அவன் எச்சரிக்க, அவளது மருண்ட பார்வை இங்குமங்கும் தாவியதை, அவன் பார்த்து ரசித்தான்.

தனி வேலியிட்டு, பாதுகாப்பாக வளர்க்கப் பட்டிருந்த, மிகப் பெரிய ஆர்க்கிட் தோட்டத்தைப் பார்த்ததும், சற்று நேரம், சுந்தரிக்குப் பேச்சே வரவில்லை!

அவளது திகைப்பை ரசித்தபடி, "இந்தப் பண்ணையின் விளைபொருள், பெரும்பாலும், ஏற்றுமதிக்குப் போகிறது" என்றான் அவன்.

பிரமிப்பு சற்றே குறைந்ததும் "ஒரு தரம் 'டிஸ்கவரியில்' இந்தத் தோட்டம் பார்த்தேன், சதாசார். ரொம்ப அழகாகத் தோன்றியது. ஆனால்... நேரில் பார்ப்பதன் கிட்டே கூட, அது வராது! நிச்சயமாய்!" என்றாள்.

"வேண்டுமா?" என்று ஒரு கொத்தைப் பறிப்பதற்காக அவன் நீட்டிய கையைப் பற்றித் தடுத்தாள், சுந்தரி.

"வேண்டாம் சார். செடியிலேயே, அழகாக இருக்கட்டும். பார்க்கப் பிடிக்கிறது என்று எல்லாவற்றையும் பறித்துக் கொண்டே போனால், எப்படி?" என்று அவள் கூறவும், சட்டென திரும்பி, அவளது கைகளையும், அடுத்து கூந்தலையும் பார்த்தான் அவன்.

கைகள் அவனது கரத்தைப் பற்றியிருந்தன, கூந்தலிலும் காணோம்!

"அந்த ரோஜா எங்கே?" என்று எந்த உணர்ச்சியும் காட்டாத ஒரு குரலில் வினவினான், கூர் பார்வை மட்டுமே.

ஆனால், சட்டென முகம் சிவக்க, "அது... அது..." என்று தடுமாற்றத்துடன் அவள் முகத்தை வேறு புறம் திருப்ப முயற்சிக்கவும், கூர்மை, ஆர்வமாக மாறி விட்டது.

சுந்தரியின் தோளைப் பற்றி.. நேராகத் திருத்தி "அது என்ன

ஆயிற்று?" என்று விளக்கம் கேட்டான்.

"அது... சார்..." என்று கைப்பையைத் திறந்து காட்டினாள். 'டிஷ்யூ'வினுள் பொதிந்து உள்ளே பத்திரமாக வைக்கப்பட்டிருந்தது அந்த ரோஜா மலர்.

அவன் ஆச்சரியமாகப் பார்க்கவும் "வ...வந்து சார், கையிலேயே இருந்தால், கைச்சூட்டில் பூ வாடி விடும். இப்போதுதான் பறித்த பூ இல்லையா? இப்படிப் பத்திரப்படுத்தி, விடுதிக்குப் போய் தண்ணீரில் போட்டு வைத்தால், இன்னும் இரண்டு மூன்று நாட்கள் அப்படியே வாடாமல் இருக்கும்... என்று" என்று குனிந்த தலை நிமிராமல், முணுமுணுப்பாய் அவள் பதிலிறுத்த விதத்தில், சதானந்தனுக்குச் சிரிப்பு வந்தது.

ஒற்றையடிப் பாதையில் அவன் பின்னோடு நடந்து வந்தபோது, இதைச் செய்திருக்கிறாள்!

இன்னும், அவள் சொல்லாததும் இருக்கிறது. ஆனால் ஊகிக்க முடியாதது அல்ல.

ஊகம் இன்னமும் மகிழ்ச்சியைத் தர "வதனி?" என்று அவன் வலக் கரத்தை ஏந்த, மறுக்கும் எண்ணமே இல்லாமல், அவனது ஏந்திய கையில், தன் கையை வைத்தாள் சுந்தரவதனி!



## தேடினேன் வந்தது 9

எவ்வளவு நேரம், அப்படியே நின்றார்களோ, "சின்னையா! சின்னையா!" என்று மாதன் அழைக்கும் குரல் கேட்டு, இருவரும் நனவுலகத்துக்குத் திரும்பி வந்தார்கள்.

சதானந்தன் பதில் குரல் கொடுக்கவும், மாதன் அங்கே வந்து, பாட்டியம்மா கூப்பிடுவதாகச் சொல்லிவிட்டுப் போனான்.

சுந்தரவதனியின் கண்களில் கலக்கம் தெரிந்தது.

"என்ன? அதிக நேரம் நின்றுவிட்டோமோ என்று பயமா? அதெல்லாமில்லை. வேறு எதற்கோ கூப்பிடுகிறார்கள். போய் என்னவென்று பார்ப்போம், வா" என்று சதானந்தன் கூற, இருவரும் வீட்டை நோக்கித் திரும்பி நடந்தார்கள்.



"பாட்டியம்மாவுக்கு உடம்புக்கு ஏதும்..." என்று சுந்தரி துரிதமாக நடக்கத் தொடங்க, அவளைத் தடுத்து "ஓடாதே, வதனி. யாருக்கும் உடம்பு சரியில்லை என்றால், மாதன் சொல்லியிருப்பான். அனேகமாக பாட்டி சாப்பிட ஏதாவது செய்யச் சொல்லியிருப்பார்கள். அது தயாராகி வந்திருக்கும்" என்று அவன் கூற, அவளது நடையும் நிதானமாயிற்று.

சின்னவர்கள் இருவருமாக வீட்டை அடைந்தால், பெரியவர்கள் இருவரும், வேறு ஒரு தீவிர யோசனையில் இருந்தார்கள்.

பாட்டி காந்திமதி அம்மாளுக்கு, ஏனோ யாருக்கும் விடை கொடுத்து அனுப்பவே மனமில்லையாம். நாளை ஞாயிற்றுக்கிழமைதானே? எல்லோரும் இருந்துவிட்டு, நாளை மாலை போனால் போதாதா என்று வாதிட்டாள்.

சொந்த உறவுகளுக்காகச் சொல்வது என்று புரிந்து "இங்கே பஸ் நிற்கும் இடத்தில் கொண்டுவிட்டால், நான் அதில் போய்விடுவேன். நீங்கள் இருவரும், இங்கே தங்கிவிட்டுப் பிறகு வரலாம், மேடம்" என்று வனிதாவை நோக்கிச் சொன்னாள், சுந்தரவதனி.

"சேச்சே, சின்னப்பெண். உன்னைத் தனியாக அனுப்புவதா? கூடவே, கூடாது. காலம், கெட்டுக் கிடக்கிறது!" என்றாள் வனிதா.

"இதையேதான், நானும் நினைத்தேன்" என்றான் சதானந்தன்.

அதைவிட நீயும், இங்கேயே தங்கிவிடேன்! அழகான சின்னப் பெண். உன்னையும்தான். பார்த்துக்கொண்டே இருக்கலாம் போல ஆசையாக இருக்கிறது!" என்றாள் பாட்டியம்மாள், விரிந்த புன்னகையோடு.

உச்சி குளிர்ந்தபோதும் சமாளித்துக்கொண்டு, "ஐயோ, கூடாது, பெரியமேடம்! அங்கே நான் தங்கியிருக்கும் விடுதி, பள்ளி ஹாஸ்டலை விட, ரொம்பக் கட்டுப்பாடு! இரவில், வெளியே தங்க வேண்டும் என்றால், அப்பா, அம்மா அனுமதி பெற்றிருக்க வேண்டும். அதெல்லாம் நடக்கக்கூடிய காரியமா? அதனால்... சாரி மேடம், நான் கட்டாயம் போயாக வேண்டும்" என்றாள் சுந்தரி.

"அப்படியா?" என்று மகளைப் பார்த்தாள் காந்திமதி.

"ஆமாம்மா. நான் கூடக் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போதெல்லாம் தங்கள் விடுதிப் பெயர் கெட்டுவிடக் கூடாது என்று, பெண்கள் தங்கும் விடுதிகளில், ஏகப்பட்ட நிபந்தனைகள்

விதிக்கிறார்களாம். மீறினால், தயவு தாட்சணியமே இல்லாமல், வெளியே
போகச்சொல்லி விடுகிறார்களாம். அதனால், சுந்தரவதனி, திரும்பிப்
போக வேண்டியது, அவசியம். பெரியம்மா. அதேபோல, அவளைத்
தனியே பஸ்சில் அனுப்புவதும், ஆபத்தாக முடியக்கூடும்? ம்ம்ம்... ஏன்
பெரியம்மா, இப்படிச் செய்தால் என்ன? இப்போது சுந்தரியை, சதா
கூட்டிப் போய் விட்டுவிடட்டும். நாளைக் காலையில் திரும்பி வந்து,
நாள் முழுதும் இங்கே இருக்கட்டும். நாளை மாலை, என்னைக் கூட்டிச்
செல்லட்டும். என்ன சொல்லுகிறீர்கள்?" என்று, வனிதா கேட்டாள்.

"ஆ...மாம்! இது நல்ல யோசனையாக இருக்கிறதே!" என்று, பெண்ணை மகிழ்ச்சியோடு பார்த்து, புன்னகை மேலும் விரியக் கூறினாள் காந்திமதி.

கூடச் சேர்ந்து முறுவலித்தபோதும், "அனியாயத்தைப் பார் வதனி. நேரம் என்னது, அதை எப்படிச் செலவு செய்வது என்று இவர்கள் இருவருமாக என்ன வேகமாகத் திட்டம் போடுகிறார்கள், பார்!" என்று சுந்தரியிடம் போலியாகக் குறைப்பட்டான் சதானந்தன்.

அவளை ஒதுக்கி விடவில்லை என்பதற்காகக் கூறியது, எனவே, ஒரு புன்னகையோடு பேசாமல் நின்றாள் அவள். உள்ளூர வேறு யோசனை ஓடியது.

பெரியவர்கள் முன்னிலையிலும் வதனி என்கிறானே! இவனுக்கு துணிச்சல் அதிகம்தான் என்று எண்ணினாள். ஆனால், அவர்களுக்கு ஒளித்து மறைத்து, அவளைத் திரும்பிக் கூட பாராதவனாக சதா உத்தம வேஷம் போடவில்லை என்பதே, அவனை உயர்த்திக் காட்டுவதாகவும், சுந்தரி உணர்ந்தாள்.

அலுவலகத்திலும் அவனுக்கு நல்ல பெயரே. மகிமா. அவனைப் புத்தர் என்று கூடச் சொல்லியிருக்கிறாள்.

தன்னை மீறி, தாய் தந்தையரின் உறவு பற்றி. அவள் மனம் யோசித்தது.

தந்தை இப்படி இருந்திருப்பாரா? ஏற்கனவே ஒரு குடும்பம் இருக்கையில், அது முடியாது.

முதலில் தாயைப் பற்றித் தவறாக நினைத்தது, அவளைப் பார்க்க
பார்க்க மாறி, தப்பு தந்தையிடம்தான் என்ற தீர்மானத்துக்கு கிட்டத்தட்ட
அவளது மனம் வந்திருந்தது.



ஆனால், அவளுக்கு விலையாகப் பெற்ற ஐந்து லட்சம்?

அதை எண்ணிப் பார்த்தால், அவர்களில், யார், யாரை ஏய்த்தார்கள்?

இந்த விளக்கமெல்லாம், அவளுக்கு எப்போது கிடைக்கப் போகிறது?

திடுமென, யாரோ... யாரோ அல்ல, சதானந்தன்தான், தாயை நோக்கியிருந்த அவளது பார்வையை மறைத்தாற்போல வந்து நின்றான்.

அவள் புரியாது பார்க்க, "இன்னும் அரைமணி நேரத்தில் கிளம்ப வேண்டுமே! வேறு பூக்கள் வேண்டுமானால், கோவிந்தனிடம் சொன்னால், பக்குவமாகப் பறித்து, பெட்டியில் வைத்துத் தருவான்... வா சொல்லலாம்..." என்று அழைத்துப் போனான்.

செல்லும்போதே, "என்ன வதனி, வனிதாம்மாவை ஒரு மாதிரி வெறித்துப் பார்த்தாயே? அதனால்தான், அவர்கள் இருவரும் கவனிக்குமுன் உன்னை இப்படி அழைத்து வந்தேன். ஒரு விஷயம் மனதில் வை, வதனி. அம்மாவை ஒரு சிறு குறை சொன்னால்கூட, என்னாலோ, பாட்டியாலோ தாங்க முடியாது. அந்த அளவுக்கு, அவர்கள் நல்லவர்கள். அது... அது, அந்தக் கடவுள் இருப்பது போல நிச்சயம்!" என்று அழுத்திச் சொன்னான்.

பெருமையாகவும், கலக்கமாகவும் ஒரே சமயத்தில், சுந்தரி உணர்ந்தாள்.

"அம்மாவை என்று இல்லை, சதா சார். என்னவோ என் பெற்றோர் பற்றி யோசனை வந்தது. அவர்கள் இருவருக்கும் என்ன பிரச்சினை? இரண்டு பேருக்கும் நான் ஏன் வேண்டாதவளாக ஆனேன்? ஒரு கட்டத்தில், அ...மேடம் உங்களுக்கும் பாட்டிக்கும் பெரிய உதவி செய்ததாகச் சொன்னீர்களே! அந்த... அந்த வாய்ப்பு இல்லாமல் போயிருந்தால், அவர்களும் எ... என்னைப் போலத் தனியாக இருந்திருப்பார்களோ என்று... இப்படி ஏதோ யோசித்ததில், அப்படியே அவர்களைப் ப..பார்த்துக்கொண்டு நி..நின்றுவிட்டேன்" என்று ஏதோ ஒரு பதிலைச் சொல்லி முடித்தாள் அவள்.

"பழைய வாழ்வு பற்றிப் பேசினால் வனிம்மாவுக்குப் பிடிப்பதில்லை. அது, தெரிந்து ஆகப் போவதும் ஒன்றுமில்லை என்று, அம்மாவின் உணர்வுகளுக்கு மரியாதை கொடுத்து, அதுபற்றி நாங்கள் பேசுவதில்லை. நீயும் அப்படியே இருக்கப் பழகிக்கொள்" என்றான்

அவன்.

தோட்டக்காரனிடம் பூவைக் கேட்டால் எரிச்சல் காட்டுவானோ என்று அவள் தயங்கினால், நேர் மாறாக, "பூவைப் பறிக்கிறேன்னு என்று கண்டபடி பிடுங்கி, கிளையை ஒடித்து விடுவாங்க. அதுங்களை இந்த மாதிரிக் கவனமாக எடுக்கணும்" என்று ஒரு சிறு கத்தரிப்பானைக் கொண்டு, நீளக் காம்புடன், பூக்களை அழகாக வெட்டிக் கொடுத்தான் அவன்.

சுந்தரவதனி நன்றி சொல்லவும், அவனுக்கு ஒரே சந்தோஷம்.

முதல்லேயே பார்த்தேம்மா, செடியைத் தொடாமல் ஆசையா, நீங்க பார்க்கிறதைக் கொஞ்ச நேரம் கவனிச்சுப் பார்த்த பிறகு, சரி இந்தம்மாவாலே நம்ப செடிக்குக் கஷ்டம் கிடையாதுன்னு, வேறே வேலையைப் பார்க்கப் போயிட்டேன்" என்று அவளைத் திகைக்க வைத்தான் தோட்டக்காரன்.

"கோவிந்தன் எங்கிருந்தாவது பார்த்துக் கொண்டிருப்பான் என்று, எங்களுக்குத் தெரியும். அதனால்தான், எங்கே நீயே பூவைத் தொட்டு, அவனிடம் மாட்டிக் கொள்வாயோ என்று, நான் ஓடி வந்தேன்!" என்றான் சதானந்தன். கூடவே, "வந்தது, நல்லதாகிப் போயிற்று இல்லையா?" என்று அவளது காதருகில் கிசுகிசுத்து, அவளைக் கன்னம் சிவக்கவும் வைத்தான்.

"அலுவலகம் பற்றி நினைத்து ஒதுங்காமல், அடிக்கடி வர வேண்டும்" என்ற காந்திமதியின் பிரியமான கட்டளையுடன், சுந்தரவதனி, பண்ணை வீட்டிலிருந்து கிளம்பினாள்.

பின் சீட்டில், ஏதேதோ சாமான்கள் இருக்கவே, முன்புறம், சதானந்தனின் அருகிலேதான் சுந்தரி அமர வேண்டியிருந்தது.

ஆனால், அது பற்றி, அங்கே யாரும் எண்ணிப் பார்த்தது போலவே தோன்றாததால், சுந்தரியும், மாதன் திறந்து விட்டிருந்த கதவின் வழியே ஏறி, முன்புறமே அமர்ந்தாள்.

ஆனாலும், சதானந்தனுடைய பாட்டி உட்பட, வர்க்க வேறுபாடு பார்க்கவில்லை என்பது, அவளுக்கு ஆனந்தமாக இருந்தது!

கார் கிளம்பிய பிறகும், திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே இருந்தாள். தாயும் வெளியே வந்து வழியனுப்பினாளே!

ஒரு கட்டத்தில், சதானந்தனே அவளிடம் கேட்டுவிட்டான் "ஏன் வதனி, உன் விடுதிப் பிரச்சினை மட்டும் இல்லை என்றால், இந்தப் பண்ணையை விட்டு வெளியே வரவே மாட்டேன் என்று உட்கார்ந்து விடுவாய் போலத் தோன்றுகிறதே!" என்று.



அவளுக்கும் அப்படியே தோன்ற, "எப்படி சார், இவ்வளவு அழகான வீட்டை விட்டுவிட்டு, நகரத்துக்குள் அந்த நெரிசலுக்குள் உங்களால் இருக்க முடிகிறது? இங்கே பாருங்கள், வெறும் காற்றே எவ்வளவு சுத்தமாக, மூச்சு விடவே சுகமாக இருக்கிறது!" என்று கேட்டு, ஓர் ஆழ்ந்த மூச்சை உள்ளிழுத்து, வெளிவிட்டாள்.

லேசாகத் திரும்பி, அவளைப் பார்த்துப் புன்னகை செய்தான் சதானந்தன்.

"என்ன சார்?"

"ஒன்றுமில்லை. வெறும் காற்றைக் கூட, ரசிக்கிறாயே என்று நினைத்தேன். ஆனால், உன்னைப் போலவே நினைத்து, எல்லோருமே இங்கே வந்துவிட்டால், இந்த இடமும், நகர்ப்புறம் போல ஆகிவிடாததா?" என்று கேட்டான் அவன்.

"அதெப்படி முடியும்? அவரவர் வயிற்றுப் பாட்டைப் பார்க்க வேண்டாமா?"

"ரொம்ப முக்கியமான ஒரு விஷயம் தெரியுமா? எனக்கும் வயிறு இருக்கிறது!"

அவனது குரலிலேயே சிரிப்பை உணர்ந்து, அவள் முகத்திலும் புன்னகை அரும்பியது "ஆஹா! எவ்வளவு அரிய, பெரிய விஷயம் கூறினீர்கள்! நீங்கள் சொல்லாவிட்டால் இந்த உண்மை எனக்குத் தெரியாமலே போயிருக்குமே, சார்!" என்றாள் கேலியாக.

அவன் உரக்கச் சிரிக்கவும், இணைந்து நகைத்துவிட்டு, "என்ன சார், எங்கள் வயிற்றுப்பாடு போலவா, உங்களது? நீங்கள் நினைத்தால், தினமும் இங்கிருந்து அலுவலுக்கு வந்து போக முடியாது என்றா, சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டாள் அவள்.

"இதுதான் நீ நிர்வாகம் படித்த அழகா? முதலாளியின் வேலை, ஒன்பதில் தொடங்கி, ஐந்து மணிக்கு முடிகிற ஒன்றா? மேலே ஒன்றிரண்டு மணி நேரம், நம் பொருட்கள் தொடர்பாகவே ஆகும். போட்டிப் பொருட்கள் பற்றிய விவரங்கள், விற்பனையை கவனிக்க வேண்டும். எல்லாம் கணக்கிட்டால், காலை ஆறு மணிக்குக் கிளம்பி

திரும்பிச் செல்ல நேரும். பாட்டி வேறு, வந்து. இரவு பத்து மணிக்குத் திரும்பிச் செல்ல நேரும். பாட்டி வேறு, இன்னும் வரவில்லையே என்று, தூக்கத்தைக் கெடுத்துக்கொண்டு, உட்கார்ந்திருப்பார்கள்! இதெல்லாம் யோசித்துதான், வனிம்மாவும் நானும் கோவையில் வீடு வாங்க முடிவு செய்ததே! போதுமா விவரம்? ஹா, எங்கே சோடா?" என்று தொண்டை காய்ந்து போனது போல, நடித்தான் சதானந்தன்.

அவனது பாவனையில் சிரித்தாலும், அவன் சொன்னதும், சரியாகவே தோன்றவே, "சாரி சதா சார். நான், இதுபோல எண்ணிப் பார்க்கவில்லை சாரி. யோசியாமல் பேசிவிட்டேன்" என்று வருத்தம் தெரிவித்தாள்.

சட்டென, சதானந்தன் நகைத்தான்.

அவள் கேள்வியாக நோக்கவும், "இது ஒன்றும் முதல் முறை அல்லவே! முதல் நாளே 'அதெப்படி' என்றாயே!" என்று சன்னச் சிரிப்புடன் அவன் நினைவூட்ட, திரும்பி, அவனை வியப்புடன் பார்த்தாள் அவள்.

"என்ன ஆயிற்று?"

"அம்மா மாதிரியே பேசுகிறீர்களே, சார்!"

"நீதான் அம்மா மாதிரி இருப்பதாக எனக்கு எண்ணம்" என்று அவன் கூறவும், சுந்தரி சட்டெனத் திகைத்தாள்.

ரமேஷ், சுந்தரி இருவருமே தந்தை வழிப் பாட்டி சாயல் என்று எல்லோரும் கூறுவார்கள். எனவே, அவர்கள் அண்ணன், தங்கை என்பதில் யாருக்குமே சந்தேகமே வந்தது இல்லை!

ஆனால், நூலைப் போலச் சேலை, தாயைப் போலப் பெண் என்றும் சொல்வார்களே! அவளுக்கே தெரியாமல், பெற்ற தாயின் சாயல் எதுவும், அவளுக்கும் வந்திருக்குமோ?

மற்றபடி, அம்மா போல இருப்பதாக, இவன் எப்படிச் சொல்லுவான்?

சுந்தரியின் யோசனை வேகமாக ஓட "ஏய், என்னதிது? அம்மா போல என்றால், சந்தோஷப்படுவாய் என்று நினைத்தால், இப்படி ஒன்றுமே பேசாமல் உம்மணா மூஞ்சியாய் உட்கார்ந்திருக்கிறாய்!" என்றான் சதானந்தன்.

சற்றே குறை கூறும் குரல்.

"நான் யோசித்துக் கொண்டிருந்தேன் சதாசார்.. மேடம் மாதிரி... எனக்கு என்ன... எதுவும் இருக்கிறதா என்று.. மூக்கா? கண்ணா..." என்று



அவள் இழுக்கும்போதே, அவன் குறுக்கிட்டான்.

"மூக்குமில்லை, கண்ணுமில்லை! நான், இருவரின் குணத்தைச் சொன்னேன். அடுத்தவர்களுக்காகவே எண்ணிப் பார்க்கிற குணம் வனிம்மாவுக்கு. நீயும், எங்களுக்காக தனியே பஸ்சில் போய்க் கொள்வேன் என்றாயே! அதைச் சொன்னேன். அப்புறம், அந்த ஜெயந்தன். அவனைக் கூட நீ முதலிலேயே நேரடியாகக் குற்றம் சாட்டவில்லையே!"என்றான் அவன்.

சதானந்தன் சொன்னது போல ஒரேடியாகத் தியாக மனப்பான்மையோடு அவள் இப்படியெல்லாம் நடக்கவில்லை என்றாலும், ஓரளவு அடுத்தவர்களுக்காகப் பார்க்கிற குணம் தனக்கு இருக்கிறதோ என்று, சுந்தரிக்கும் அப்போது யோசனை வந்தது.

அப்பா வீட்டில்... முக்கியமாக அண்ணன், அந்த அம்மா வாழ்வில் முள்ளாக இருக்க மனமின்றியும்தானே, அவள் அடியோடு அந்தத் தொடர்பை விட்டு வந்தது?

முக்கியமான காரணம், பெற்றவளைக் குற்றவாளியாக நிறுத்திக் கேள்வி கேட்பது என்றாலும்...

பெரிய சாலைப் போக்குவரத்தினுள் காரைச் செலுத்தி முடித்த சதானந்தன், "இப்போது எனக்கு ஓர் உண்மை தெரிந்தாக வேண்டும்!" என்று கேட்க, சுந்தரி மறுபடியும் திகைத்துத் திடுக்கிட்டாள்.

முன்பொரு சமயம், இதேபோல அவன் கேட்டபோது, மெய்யும், பொய்யுமாக ஏதோ சொல்லி சமாளித்தாள். இப்போது, அது முடியுமா? மனதளவில், இவ்வளவு நெருங்கிய பிறகு, ஒளிவு மறைவுகள் சரியாகுமா?

"எ...என்ன, சதா சார்?" என்று தயக்கத்துடன் வினவினாள் அவள்.

"என்னமோ, கொலைக் குற்றத்தை ஒப்புக்கொள்ளச் சொல்லிவிடுவேனோ என்கிற மாதிரி, தயங்குகிறாயே! அப்படிப் பெரிதாக ஒன்றும் இல்லைம்மா. இந்த ஜெயந்தன் பேச்சு வந்ததல்லவா? அது தொடர்பான விஷயம். அன்று ஜெயந்தன் உன்னிடம் பேசியதைப் பார்த்ததுமே, நான் சட்டெனச் சந்தேகப்பட்டது ஏன், தெரியுமா? அன்று முதல் நாள், நீ வேலை செய்ய வேண்டிய கிளை பற்றி போர்டில் பார்த்ததும், சட்டெனக் கண் கலங்கினாயே, அதனால்தான். அவன் அருகிலேயே வேலை கிடைத்திருப்பதை எண்ணித்தானோ என்று

தோன்றிவிட்டது. அதனால்தான் அவ்வளவு கோபம் எனக்கு. கூடவே, அப்போதே உன்னைப் பற்றி என் மனதில் பாதிப்பும் இருந்திருக்கும் போல. ரொம்பவே கடுகடுத்துவிட்டேன். சொல்லும்மா, அன்று ஏன் அப்படி உணர்ச்சி வசப்பட்டாய்?" என்று கேட்டான் அவன்.

கொலைக் குற்றத்தை ஒப்புக்கொள்ளச் சொன்னால் கூட, கிடையவே கிடையாது என்று, பொய்மையற்று அடித்துப் பேசி மறுக்க முடியுமே! இதற்கு என்ன பதில் சொல்வது?

உண்மை சொல்லவும் முடியாமல், அவனிடம் போய் சொல்லவும் பிடிக்காமல், என்ன நிலைமை இது என்று சலிக்கும்போதே, உள்ளே எங்கோ அபாய மணி அடித்தது.

சிறி...ய கண நேரச் சலனங்கள்கூட, இவன் கண்ணில் பட்டு விடுகின்றனவே! அல்லது, சதாவுக்குத்தான் கவனிக்கும் சக்தி அதிகமா? எதுவானாலும், அவளுக்குப் பிரச்சினைதானோ? அவளுக்கு மட்டுமல்ல...

விளக்கை அடித்துக் காட்டிய பேய் வேகத்தில் முந்திச் சென்ற கார் இடித்துவிடாமல், தங்கள் காரை ஒதுக்கிச் செலுத்திவிட்டு, அவன் மறுபடியும் கேட்டான் "என்ன பதிலையே காணோம்? என்ன தயக்கம்?"

"ஒன்றுமில்லை... இது போலச் சில்லறை விஷயங்களையெல்லாம் நுணுக்கி நுணுக்கிக் கேள்வி கேட்கக்கூடாது என்று, முதலாளியான பெரிய மனிதரிடம் எப்படிச் சொல்லுவது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றாள் அவள், மெதுவாக.

சட்டென சிரித்துவிட்டு "உனக்கு, நான் முதலாளிப் பெரிய மனிதனா?" என்று குரலில் உரிமை காட்டிக் கேட்டான் அவன். "ஆனால், கேட்கக்கூடாது என்கிறாய். போகட்டும், உன் விருப்பம். இப்போது இதைச் சொல். நேராக விடுதிக்குச் செல்ல வேண்டுமா? அல்லது, எங்காவது போய்ச் சாப்பிட்டுவிட்டு, அப்புறமாகக் கொண்டு விடவா?"

"ஒன்பது மணிக்குள்ளாக அங்கே இருக்க வேண்டும்..."

ஏதோ கதை பேசியபடி, சின்ன சிற்றுண்டி சென்டர் ஒன்றில் ஊத்தப்பம் வடைகறி சாப்பிட்டுவிட்டு விடுதியில் போய் இறங்கியபோது, மிகப்பல நாட்களுக்குப் பிறகு, சுந்தரவதனியின் மனம் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது!

வரப்போகும் ஆனந்த வாழ்க்கைக்கு, இது முன்னோடி என்றால்,



வேறென்ன வேண்டும்?

உற்சாகத்தில் உள்ளம் துள்ளிக் கொண்டிருந்தாலோ, என்னவோ, சுந்தரவதனிக்குத் தூக்கம் வர மறுத்தது. தூங்கும் முயற்சியைக் கைவிட்டுவிட்டு, படுக்கையில் உருண்டு புரண்டபடி, அன்றையச் சம்பவங்களை அசை போடலானாள்.

அன்னையின் தொடுகை, பாராட்டு, தோட்டத்தில் சதானந்தன் பூ தந்தது, ஆர்க்கிட் தோட்டத்தில் ஆசையாகக் கையேந்தியது, அவனுடைய குடும்ப பெரியவர்களின் அன்பான பேச்சு, முதல் தடவையாகச் சந்திக்கும் பாட்டிக்குகூட, எவ்வளவு பிரியம்... ஒன்று மாற்றி ஒன்றாக, அன்றைய அவளது அதிருஷ்டங்கள், திரும்பத் திரும்ப மனத்திரையில் ஓடிக் கொண்டே இருந்தன.

இவை அனைத்தையும், சதானந்தனிடம் சொல்லி மகிழும்போது, அது இன்னமும் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்... என்று எண்ணிய சுந்தரி, சட்டென எழுந்து அமர்ந்தாள்.

அனைத்தையுமா? அன்றைய சந்தோஷங்களின் முதல் தொடக்கத்தையே, அவளால் சதாவிடம் சொல்ல முடியாதே!

தாயைப் பற்றிய எதையுமே, ஒரு சின்ன துகளைக் கூட! ஊகூம்!

இடிப்பது, இது மட்டும் அல்ல.

காந்திமதி அம்மாவும், கிட்டத்தட்ட அவனுடைய அன்னையின் இடத்தில் இருக்கும் வனிதாவும், வர்க்க வேறுபாடு பார்க்காதவர்களாக இருக்கலாம். ஆனால், குடும்ப வாரிசுக்கு உரிய துணையாக அவளை ஏற்குமுன், அவள் யார், என்ன என்று அறிய விரும்புவார்கள்தானே? அதுதான் இயல்பு.

பிள்ளை விரும்புகிறான் என்பதற்காகக் கண்ணை மூடிக்கொண்டு, அவளை வீட்டு மருமகளாக்கிக் கொள்ள மாட்டார்கள்.

கட்டாயம் விசாரிப்பார்கள். ஒரு நல்ல குடும்பத்துடைய பெரியவர்கள் அப்படித்தான் செய்வார்கள். கண்ணதாசன் கூட எழுதவில்லையா? ஓர் இளைஞனின் கண்கள், பெண்ணின் அழகைத்தான் பார்க்கும். ஆனால், வீட்டுப் பெரியவர்களின் கண்கள், அவளது மற்ற நலன்களையும் கவனிக்கும் என்று. அவரது 'துன்பங்களில் இருந்து விடுதலை'யில் கூட கூறியிருக்கிறாரே!

சதானந்தனுமே, அப்படி ஒன்றும் ஒரேடியாகக் கண்ணை

மூடிக்கொண்டு, அவள் கழுத்தில் தாலி கட்ட மாட்டான், மற்றவர்களும் கட்டாயம் கேட்பார்கள்.

உண்மைகள் தெரியும்போது, அவளது நிலைமை என்ன ஆகும் என்பது ஒரு புறமிருக்க, அவளைப் பெற்றவளின் நிலையும் தலைகீழாகி விடலாம்!

விடலாம் என்ன? கட்டாயம், ஆகிவிடும்! அன்னை இவ்வளவு நாள் சேர்த்து வைத்திருக்கும் மதிப்பு, மரியாதை, அன்பு, பாசம் எல்லாம் பஞ்சாகப் பறந்துவிடும்!

இன்னமும், தாயிடம் கேள்வி கேட்கும்... குறைந்தபட்சமாக விவரம் அறியும் எண்ணத்தை, சுந்தரி அடியோடு விட்டு விடவில்லைதான். ஆனால், நடந்தது என்னவாக இருந்தாலும், தாயின் தவறாகவே இருந்தாலும், அடுத்தவர் முன் பெற்றவள் தலை குனிந்து நிற்பதை, அவளால் தாங்க முடியாது.

ஒத்துக் கொள்ள முடியாத உறவில் பிள்ளை பெற்று, அந்தப் பிள்ளையையும் பணத்துக்காக விற்றவள் என்ற உண்மை வெளி வரும்போது, அதுதானே நடக்கும்?

அப்படிப் பிறந்து, விற்கப்பட்ட பெண் எனும்போது, அவளுக்கு மட்டும் என்ன மரியாதை கிடைக்கும்?

அன்னையும் அவளும், ஒருவரை ஒருவரே வெறுத்தபடி, தனித்துத் தெருவீதியில் நிற்பது போல எழுந்த ஒரு தோற்றத்தில், அவளுக்கு உடம்பு முழுதும் உதறியது!

எதிர்காலமே இல்லாததோடு, இருக்கும் வெகு சிலவற்றையும் அழிக்கும் இந்தக் காதல் அவளுக்குத் தேவைதானா?



## தேடினேன் வந்தது 10

அன்றைய இரவு முழுதும், மறுநாளும் கூட, எத்தனையோ விதமாக யோசித்துப் பார்த்தும், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான எந்த வழியையும் சுந்தரியால் கண்டுபிடிக்க முடியவில்லை.

கண்டுபிடிக்கும் நம்பிக்கையும், அவளுக்கு அதிகம் இருக்கவில்லை.

இதென்ன மகாபாரதத்துத் துவாபர யுகமா, என்னை எந்தக்



கேள்வியும் கேட்கக் கூடாது என்று நிபந்தனை இட்ட கங்கையை மணந்து மகாராணியாக்கி, அவள் ஏழு குழந்தைகளைப் பெற்று நீரில் போட்டபோதும், பொறுமை காத்த சாந்தனு ராஜா போல, சதானந்தனும் இருப்பான் என்று எதிர்பார்ப்பதற்கு?

ஆனால், அந்த சாந்தனு மன்னன் கூட, எட்டாவது மகவான பீஷ்மரை, அந்த மனைவி கொல்ல முயன்றபோது தடுத்து, நிறுத்திக் கேள்வி கேட்டதாக, பாரதக் கதையில் சுந்தரி படித்திருக்கிறாள்.

ஆனால், சதானந்தன் இப்போதே, எத்தனை கேள்விகள் கேட்கிறான்!

எப்படி கண்காணிக்கிறான், என்னென்ன ஊகிக்கிறான்!

அன்றைய அந்த ஒருதுளிக் கண்ணீர், அவளுக்கே அதிசயம்தான். அதையே கவனித்துக் கேட்கிறானே! இன்னமும் நெருக்கமான உறவு ஏற்பட்டுவிட்டால், சதாவிடம் எதை மறைக்கவும் அவளால் முடியாது.

விளைவை அனுபவித்து அப்புறமாக, இரு மடங்காக வேதனைப்படுவதற்கு, எதுவும் நேருமுன், இப்போதே விலகிக் கொள்வது மேல்!

இது ஒன்றும், லாப நஷ்டக் கணக்குப் பார்த்து, அறிவுப்பூர்வமாக மட்டுமாக, அவள் எடுத்த முடிவல்ல. விண்டு விடும்போல, நெஞ்சு வலிக்க வலிக்க, வேறு வழி காணாமல் செய்த முடிவு.

இதில் மாற்றத்துக்கும் இடமில்லை.

தன்னந்தனியே, தனக்குள் தானே மறுகி உருகிக்கொண்டு இருக்க முடியாமல், இந்த முடிவு பற்றி, சுந்தரவதனிக்கு, இன்னும் ஒரு பெரிய பொறுப்பு இருந்தது. சதானந்தனிடம், இதைத் தெரிவிப்பது, தெரிவித்து ஒத்துக்கொள்ள வைப்பது!

ஒத்துக்கொள்ள வைத்துதான் ஆக வேண்டும். ஏனெனில், அந்த வேலை அவளுக்கு வேண்டும். நேசத்துக்குத்தான் அவள் கொடுத்து வைக்கவில்லை என்றாலும், தாயின் அருகாமையாவது நிலைக்க வேண்டும். எனவே, அவனைப் பார்க்க நேராத தூரத்துக்கு, அவளால் ஓடிவிட முடியாது.

வழக்கம்போல, அவளது இடத்தில் கம்ப்யூட்டரின் முன் அமர்ந்து, சதானந்தனின் காலடிச் சத்தத்துக்காக காத்திருக்கும்போதுதான், பல நாட்களாகவே, இதுதான் அவளது வழக்கம் என்பதை, அவளே

உணர்ந்தாள்.

தொழில் தொடர்பாக யாருடனாவது பேசிக் கொண்டு வருவதானால், 'லிஃப்டி'ல் வருவான். அல்லது அவளைப் போலவே, படியேறி வருவான். இரண்டு வகைகளில் அவன் எப்படி வந்தாலும், அவளது காதுகளுக்கு, உடனே தெரிந்துவிடும். அவன் வருவதை அறிந்த பின்னரே, சுந்தரியின் கவனம் முழுமையாக வேலையில் பதியும்.

வழக்கம்போல, சதானந்தனின் வரவை உணர்ந்தவளுக்கு வழக்கத்துக்கு மாறாகக் கவனம் வேலையில் பதிய மறுத்தது.

அவனை எப்போது சந்தித்து, எப்படிச் சொல்வது என்று கலக்கத்துடன் யோசித்தவளுக்கு, அந்தச் சிரமம் வையாமல், அலுவலகத்துக்குள் காலடி எடுத்து வைத்ததும், சதானந்தன் நேரே, சுந்தரியிடம்தான் வந்தான்.

"ஹலோ, வதனி!" என்று குரலில் ஒரு துள்ளலுடன் அழைத்தவன், குனிந்து வலக்கரத்தை நீட்டினான்.

ஆர்க்கிட் தோட்டத்தில் போலவே!

மறுப்பது, இவ்வளவு வேதனையைத் தரும் என்று, அவளுக்குத் தெரியாதே! எந்த நிலையிலும், அவன் முன்னிலையில் உடைந்துவிடக் கூடாது என்று அவள் உருவேற்றி வைத்திருக்கும் மனக் கட்டுப்பாடு, எவ்வளவு நேரம் தாங்கும்?

கீ போர்டில் வைத்திருந்த விரல்களையோ, மானிட்டரில் பதித்திருந்த பார்வையையோ அகற்றாமலே, "குட்மார்னிங்" என்றாள் பிரயாசையுடன்.

"வதனி?" என்று சிறு திகைப்புடன் வினவியவாறு முன்புறம் தலையை நீட்டி, அவள் முகத்தைப் பார்த்தான் அவன். "என்னம்மா, உடம்பு சரியாக இல்லையா? குரல் மெல்லினம் பாடுகிறதே!" என்றான் கரிசனத்தோடு.

இரண்டு இரவுகள் தொடர்ந்து அழுதால், குரல் 'ஞஙனநமன' என்றுதான் சொல்லும், அதற்கு என்ன செய்வது?

"இ...இல்லையே. உடம்புக்கு ஒன்றும் இல்லை சார்" என்றாள் அவள் நிமிராமலே.

"அப்படியானால், மனதில்தான் பிரச்சினை. ஆனால், அதற்கு காரணமே... ஏன் வதனி, என்னைப் பற்றி யாரேனும் தப்பாக எதுவும்



சொன்னார்களா?"

வினாடிக்குள் எங்கே போய்விட்டான்! ஆனால், அவனைப் போய் யார் குறை சொல்லுவார்கள்?

"இல்லை சார். உங்களுக்கு எல்லோரிடமுமே நல்ல பெயர்தான்" என்று உண்மையைச் சொன்னாள்.

"ம்ம்ம், அப்படியில்லை போலிருக்கிறதே! ஒரு முக்கியமான என் வாழ்வின் அதிக முக்கியமான பெண், ஏதோ தப்பாக எண்ணுவது போலத் தெரிகிறதே!"

வாழ்வின் அதி முக்கியமான பெண்! அவளுக்குக் கொடுத்து வைக்கவில்லையே!

வார்த்தைக்கு வார்த்தை இந்த வேதனை தாங்க முடியாது என்று தோன்றிவிட, ஒரு பெரிய மூச்செடுத்து "வந்து, இ...இது வேண்டாம் சார்!" என்று பெரும் பிரயாசையுடன் கூறினாள்.

லேசாகப் புருவம் சுளித்து "எது வேண்டாம்?" என்று வினவினான் சதானந்தன்.

"எதுவுமே வேண்டாம்" என்றாள் வறண்ட குரலில்.

தலையசைத்து "புரியவில்லையே!" என்றான் அவன். அவளை யோசனையோடு பார்த்து "நேற்று முன் தினம் வேறு மாதிரி..." என்று அவன் தொடங்கவும் "வேண்டாம், சார்!" என்று சுந்தரவதனி, அவசரமாக அவன் பேச்சில் குறுக்கிட்டாள்.

பண்ணை இடத்துப் பேச்சு, மிகவும் கஷ்டப்பட்டு அவள் உருவாக்கி வைத்திருக்கும் கட்டுப்பாட்டை, நிச்சயமாக உடைத்துவிடும்.

எனவே, அவன் மறுபடியும் பேசுமுன், அவளே முந்திக்கொண்டு "நேற்று அ...அந்த சூ...சூழலில் எப்படியோ மனம் நெகிழ்ந்து... ஏதோ மாதிரி நடந்துவிட்டேன், சார். அதைப் பெரிதுபடுத்த வேண்டாம்" என்றாள்.

"அதாவது..." என்று யோசிப்பது போலப் பாவனை செய்தான் சதா, பிறகு, "இந்த தொழில் முறைப் பேச்சுகளின்போது, டிரிங்க்ஸ் எடுத்து, கொஞ்சம் இறுக்கம் தளர வைப்பது போலவா? அப்படியானால் பண்ணை வீட்டுக்கு இன்னொரு தரம் போவோமா? இந்த இறுக்கமும் தளர்ந்து இயல்பாகிவிடும்" என்று புன்னகையில் முடித்தான்.

அதிக நேரம் தாக்குப் பிடிக்க முடியாது என்று தோன்றிவிட, பேச்சை

வேறு விதமாக முடிக்க முயன்றாள் சுந்தரி.

குரலிலும் முகத்திலும் கடுமையைக் காட்டி "பாருங்கள் சார், நான் ஒன்றும் முட்டாள் இல்லை. அவசரத்தில் முடிவெடுத்து, உங்களிடம் இது போலப் பேசவும் இல்லை. நேற்று முன்தினம், அந்த அழகான சூழலில், என் தலை கொஞ்சம் சுற்றிப் போனது, உண்மையே. ஆனால் அறைக்குச் சென்று சிறிது நேரத்திலேயே, அது சரிப்படாது. கல்யாணம், குடும்பம் போன்ற கட்டுப்பாடுகள் எல்லாம், எனக்கு ஒத்தே வராது என்று தெளிவாகப் புரிந்துபோயிற்று! அப்புறமும், நேற்றுக் கூட வெகு நேரம் தீவிரமாகச் சிந்தித்து, அதன்பிறகுதான் இந்த இறுதி முடிவுக்கு வந்தேன். இந்த என் முடிவு, மாறவே, மாறாது. எனவே, இதைப் பற்றிப் பேசித்தான் ஆக வேண்டும் என்றால், நீங்கள் என்னிடம் பேசாதிருப்பதே, இருவருக்கும் நல்லது!" என்று சீறலாகக் கூறி முடித்தாள்.

அவனுக்கு கோபம் வந்து கத்துவானோ, என்று அவள் மனம் கலங்கியது.

கத்தினால், அது நியாயம்தான். ஆனால் விஷயம் எல்லோருக்கும் தெரிந்து போகும். அப்புறமாக, இங்கிருந்து வேலை செய்வது, எப்படி?

ஆனால், இதே கவலை, சதானந்தனுக்கும் இருக்கும்தானே?

முதல் முறையாக, சுந்தரி விழிகளை உயர்த்தி, அவனைப் பார்த்தாள்.

கோபம், எரிச்சல் எதையும் காணோம். அதுவே பரவாயில்லை போல, சதாவின் முகத்தில் இருந்த புரியாத பாவம். அவளது மனதை, இன்னமும் கசக்கியது.

"போங்கள் சார். இங்கேயே நின்று, என்னை யாரும் தப்பாக எண்ணும்படிப் பண்ணாதீர்கள்" என்று கடுப்பேற்றி, அங்கிருந்து அவனை விரட்ட முயன்றாள்.

அவள் எதிர்பார்த்ததற்கு மாறாக, அவனது முகம் இப்போது தெளிந்தது.

"என்னமோ கோபம் உனக்கு. அதனால்தான் எரிச்சல் மூட்டி என்னை விரட்ட முயற்சிக்கிறாய். போகட்டும். உன் கோபம் குறைய அவகாசம் தந்து, இப்போது போகிறேன். ஆனால், அவ்வளவு எளிதில் நான் எதையும் விட்டுவிடுகிறவன் அல்ல. பிறகு பார்ப்போம்" என்று சென்றான் சதானந்தன்.



அவன் சொன்ன அவகாசத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்கிறவளாக, இயன்றவரை அவனிடம் இருந்து, சுந்தரி ஒதுங்கிப் போனாள். ஓர் அலுவலகத்தில், இது சற்று கடினமே என்றாலும், முடிந்தவரை, தனியே இராமல் பார்த்துக் கொண்டாள். காலையில் அவன் வரும் சமயம் கூட, வேலையில் ஏதோ கேட்கிறவள் போல, வேறு யாருடனாவது பேசிக் கொண்டிருந்தாள்.

ஆனால், அவன் முதலாளி ஆயிற்றே. அவள் மட்டுமே பார்க்கிற ஃபைலை எடுத்துக் கொண்டு வரச் சொன்னபோது, ஃபைலோடு அவன் முன்னே போய் நிற்கத்தான் வேண்டியிருந்தது.

"என்ன ஓட்டம்? உனக்கே, இது அசட்டுத்தனமாகத் தெரியவில்லை?" என்று அவன் கேட்டபோது, அவளுக்குமே அப்படித்தான் தோன்றியது.

ஆனாலும் சமாளித்து "என் மனதை, உங்களுக்கு முழுதாகப் புரிய வைக்கும் என்று நினைத்தேன்" என்றாள் அவள், மெதுவாக.

"திட்டம் பிரமா...தம்! ஆனால், மூளை வேலைதான் மைனசாகத் தெரிகிறது!" என்றான் அவன் ஏளனமாக.

பார்வை தாழ, அவள் பேசாமல் நிற்கவும், அவன் முகம் மாறியது.

"பிரச்சினை என்ன என்று சொல்லு, வதனி. எதுவானாலும் அதை, நான் தீர்த்து வைக்கிறேன்" என்று இரங்கிய குரலில் அவன் கேட்டபோது, பதில் சொல்ல முடியாமல், அவளுக்குத் தொண்டை அடைத்தது.

"என்னம்மா?" என்று கனிவாகக் கேட்டவாறு, அவன் நெருங்கவும், அவள் சட்டெனப் பின்னடைந்தாள். இவனிடம் தளர்ச்சி காட்டுவது, பெரும் தவறு. அவளது பலவீனமாகக் கருதி, மேலும் முயற்சிப்பான்!

லேசாகச் செருமி, தொண்டையைச் சீர்ப்படுத்திக்கொண்டு "என் முடிவை, அப்படியே ஒத்துக் கொள்ளுங்கள் சார். அல்லாமல், இப்படியெல்லாம் திரும்பத் திரும்ப என்னை ஏதாவது கேள்வி கேட்டீர்கள் என்றால், அப்புறம் நான் வேலையை விட்டே போய்விட வேண்டியிருக்கும்" என்று சற்று மிரட்டலாக மொழிந்தாள்.

ஆனால், அவள் எதிர்பார்த்ததற்கு மாறாகத்தான் அவன் இப்போதும் பேசினான்.

"என்ன? என்னை மிரட்டிப் பார்க்கிறாயா? அப்படி, இந்த வேலையை விட்டு எங்கே போய்விடப் பேசுகிறாய்? இந்த உலகத்தின் அடுத்த

மூலைக்கு? அதுகூட, இன்றைக்கு எட்ட முடியாத தூரமில்லை, தெரியுமா? நீ எங்கே போனாலும், அங்கேயும் இதே கேள்வியுடன் வந்து நிற்பேன் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு, இதுபோல உளறு!" என்று அவன் அதட்டியபோது, அவள்தான் வாயடைத்து நிற்க நேர்ந்தது!

சிறு அமைதியின் பின், "ஏதோ உன் மனதைக் குடைகிறது என்பது, எனக்குப் புரிகிறது. ஆனால், அது எவ்வளவு பெரிய பிரச்சனை என்றாலும், ஒருவருக்கு இருவராக, அதைத் தீர்க்க முயல்வது மேல் அல்லவா? பிரச்சினையை என்னிடம் சொல்லித்தான் பாரேன், என்னால் முடிகிறதா, இல்லையா என்று பார்த்துவிடலாம்!" என்று நயந்த குரலில் நம்பிக்கையோடு இயம்பினான்.

ரொம்பவே கெட்டிக்காரன்தான். செய்யக் கூடியவன்தான். ஆனால் பிரச்சினையே, அவனுக்கு விஷயம் தெரிந்துவிடக் கூடாது என்பதாக இருக்கும்போது, அந்தத் திறமைகளால் என்ன பிரயோசனம்?

இவன் ஒவ்வொரு தரம் வந்து பேசும்போதும், எப்படிப்பட்ட சொர்க்க வாழ்வை இழக்கிறோம் என்ற தவிப்பு வேறு! இதை எப்படியும் தவிர்த்தாக வேண்டும். ஆனால் எப்படி?

அம்மாவைப் பார்க்க முடியாவிட்டாலும், அவளாவது நன்றாக இருக்கட்டும் என்று வெளியேறி விடலாம் என்றால், அதற்கும் முடியாமல், பின்னோடு வருவேன் என்கிறானே!

சொல்வது அறியாமல் அவள் கலங்கி நிற்கையில், சதானந்தனே மறுபடியும் பேசினான். "என்னம்மா, இருந்திருந்து, நம்மைப் போய் நேசிக்கிறானே, இவன் என்ன கெட்டிக்காரன் என்று சந்தேகமாக இருக்கிறதா? சந்தேகத்துக்கு வேண்டுமானால், வனிம்மாவிடம் கேட்டுப்பார். அய்யாவின் வீரதீர பராக்கிரமம் பற்றி, அருமையாக எடுத்துச் சொல்வார்கள்" என்று பெரிய மீசையை முறுக்கிக் காட்டுவது போலப் பாவனை செய்தான்.

அவளும் தன்னை மீறி முறுவலித்து "அம்மாதானே? அப்படித்தான் சொல்லுவார்கள். 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' அல்லவா?" என்றாள் பதிலுக்கு.

"ம்ம்ம், இது சரி!" என்று அவன் திருப்தியோடு கூறவும் 'ஐயோ' என்று தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது, அவளுக்கு.

இல்லை. இதெல்லாம் தப்பு இவனிடம் இப்படியெல்லாம் பேசவே



கூடாது.

வேகமாக யோசித்து, "பாருங்கள் சார். ஒரு மாத காலத்துக்கும் மேலாக, நாம்... நான் இங்கே வேலை பார்க்கிறேன். வேலையில் கெட்டிக்காரி என்று, அம்மா, நீங்கள் இருவருமே பாராட்டியிருக்கிறீர்கள். நான், முட்டாள்தனமாக, எதையும் செய்வேனா? அதிலும், உங்களை போல ஒருவரை மணப்பது, எவ்வளவு பெரிய பேறு? அதையே மறுக்க வேண்டுமானால், சரியான காரணம் இருக்க வேண்டும் என்று விட்டுவிடுங்களேன், சார். ப்ளீஸ்!" என்று உணர்ச்சி விலக்கிய குரலில், தெளிவாக, நிதானமாக கூறினாள்.

சிறு மௌனத்தின் பின், சதானந்தனும், கிட்டத்தட்ட அதே மாதிரிக் குரலில் பேசினான் "நீ பேசியபோது, அது சரிதானோ என்று கூடத் தோன்றத்தான் செய்தது, சுந்தரவதனி. ஆனால், இது வெறும் வேலை விஷயம் அல்ல. வாழ்க்கை. நம் இருவரின் வாழ்க்கை. இதில் நீ ஒருதலைப் பட்சமாக முடிவெடுக்க முடியாது. முதலில், பிரச்சினையைக் கலந்து ஆலோசிக்கவே முடியாது என்றால், எப்படி ஒத்துக்கொள்வது? எனவே, இது பற்றி யோசிக்க வேண்டியவள் நீதான். அத்தோடு, இன்னொரு சின்ன விஷயம். என்னதான் நிறுவனத்தோடு சேர்ந்து வளர்வேன் அப்படி இப்படி என்று நீ எதை அளந்தாலும், உன் கல்வித் தகுதிக்கு, நீ இந்த வேலையில் சேர்ந்தது, புத்திசாலித்தனம் அல்லதான். அதை வைத்துப் பார்க்கும்போது... நீதானே நன்கு யோசி. இப்போது நீ போகலாம்!"

சதானந்தனின் அறையை விட்டு வெளியே வந்த பிறகுதான், சுந்தரிக்கு சரியாக மூச்சு விடவே முடிந்தது எனலாம்.

இவன் எங்கெல்லாம் போய் நிற்கிறான்!

தகுதிக்கு குறைவான வேலையில் சேர்ந்து, முதல் நாளில கண்ணீர், முதலில் தாயை முறைத்தது... வரிசையாக யோசித்துக் காரணம் கேட்டால், என்ன பதில் சொல்வது?

வெளியேறிப் போனாலும், பின்னோடு வந்து நிற்பேன் என்கிறானே!

எப்படியும், அம்மாவை விட்டு, எப்படிப் போவது?

இந்தக் குழப்பத்திலும் வேதனையிலுமாக, சுந்தரவதனி மெலியலானாள்.

உணவும், உறக்கமும் சரியில்லை என்றால், விளைவு

மெலிவுதானே?

உற்சாகமற்று அவள் இருப்பதைக் கவனித்துவிட்டு, வனிதா, சதானந்தனை அழைத்துப் பேசினாள் "உங்கள் இருவருக்கும் இடையே என்னடா? சுந்தரி மெலிந்துகொண்டே போகிறாள், உன் முகத்திலும் சிரிப்பையே காணோம்?" என்று கேட்டாள்.

இந்தக் கேள்விக்காகவே காத்திருந்தது போல, சதானந்தன் கொட்டித் தீர்த்துவிட்டான். "என்ன காரணம் என்றே, தெரியவில்லையம்மா. சொல்லவே மாட்டேன் என்கிறாள். மெலிவதைப் பார்த்த பிறகு, ஏதேனும் பெரிதாக நோய் வந்திருக்குமோ, அதை மறைக்கவோ என்றுகூட ஒரு பயம்தான். ஆனால் சாப்பிட்டிருக்க மாட்டாள் என்பதுதான் ரொம்பவும். மதியச் சாப்பாட்டை அப்படியே 'ஸ்வீப்பருக்கு' கொடுப்பதை, நானே பார்த்தேன். விடுதி நடத்தும் பெண்மணி, நம் பிரதீபன் அம்மாவுடைய சினேகிதியாம். வீட்டுக்கு கூப்பிட்டு, மெதுவாக விசாரிக்கச் சொன்னேன். நினைத்தது போல, நம்மாள்தான் சரியாகச் சாப்பிடுவதே இல்லையாம். இரவில் உணவறைக்கு வருவதே கிடையாதாம். எப்படியாவது சாப்பிட வையுங்கள். அல்லது, விடுதிப் பெயர்தான் கெட்டுவிடும் என்று, ஏதோ சொல்லியனுப்பி இருக்கிறான். என்னம்மா, இவள்? பழைய கதை ஏதும் இருக்குமா? முகத்தைப் பார்த்தால், அப்படித் தோன்றவே இல்லை. இருந்தாலும் கூட, அதை நான் பொருட்படுத்துவதாக இல்லை என்று குறிப்புக்கூடக் காட்டிவிட்டேன். எப்படி அணுக முயன்றாலும் பாறையில் முட்டுவது போல இருக்கிறது. உங்களுக்கு ஏதாவது தோன்றுகிறதாம்மா?"

"இல்லையேப்பா!" என்றாள் பெரியவள் "பாட்டி கூடக் கேட்டார்கள். அன்று பார்த்தபோது, அவர்களுக்கும் சுந்தரியை மிகவும் பிடித்து போயிற்றாம். உனக்குப் பொருத்தமாக இருப்பதாக..."

"ச்சு!" என்றான் அவன் அலுப்பாக "வேண்டியவர்கள் எல்லோருக்கும் தெரிகிறது, பொருத்தம் என்று. இவளும்... திடும் என்றுதானே, முரண்டு பிடிக்கிறாள்! வனிம்மா, ஓர் ஐடியா. ஏதாவது துப்பறியும் நிறுவனத்தை அணுகலாமா? அவளைப் பற்றிய விவரம் தெரிந்தால்...."

"வேண்டாம்ப்பா!" என்று வனிதா குறுக்கிட்டுச் சொன்னாள். "யோசித்துப் பார், சுந்தரவதனி தலைமைக் கிளையில் வேலை செய்யத் தொடங்கி, இந்த இரு மாதங்களுக்குள், அவளை மணந்து வாழும் ஆசை, உனக்கு வந்துவிட்டது. அதாவது, வாழ்நாள் முழுவதையும் அவளோடு பகிர்ந்து கொள்ளும் ஆசை! எத்தனை காலமோ, அவளோடு வாழப் போகிறவன், இப்படி ஆள் வைத்து, அவளைப் பற்றித் துப்புத் துலக்கினாய் என்று அவளுக்குத் தெரியவரும்போது, நன்றாக இராது. இருக்கட்டும். அவள் மனதிலும் பாதிப்பு இருப்பது, நன்றாகவே தெரிகிறது. கட்டாயமாக, அவளாகவே ஒருநாள் உன்னிடம் சொல்லுவாள். அதுவரை பொறுத்திருப்பதே நல்லது என்று, எனக்குத் தோன்றுகிறதுப்பா" என்றாள் தொடர்ந்து.

"உங்களது கணிப்பு எப்போதும் சரியாகத்தான் இருக்கும், வனிம்மா. அதனால், எவ்வளவு முடியுமோ, அவ்வளவு தூரத்துக்குப் பொறுமையை இழுத்துப் பிடித்து வைத்துக் கொள்கிறேன்" என்று ஒப்பினான் சதானந்தன்.

ஆனால், இதை வைத்து, காதலியை மிரட்ட அவன் தயங்கவில்லை!

மறுமுறை சுந்தரியிடம் பேசும்போது "உன் ரகசியத்தை, என்னால் கண்டுபிடிக்க முடியாது என்று நினைக்காதே! ஒரு துப்பறியும் நிறுவனத்திடம் ஒப்படைத்தேன் என்றால், நாலே நாட்களில் உன் கதை என்ன, உன் அம்மா, பாட்டி கதைகூட, என் கைக்கு வந்துவிடும்! அப்புறம், உன் பிரச்சினையைத் தீர்ப்பது, எனக்கு மிக எளிது!" என்றான் அவன்.

'அம்மா, பாட்டி கதை கூட'

அவள் அதிர்ந்துபோய் நிற்கையில், ஓரக்கண்ணால் பார்த்தபடி அவன் தொடர்ந்து பேசினான் "ஆனால், வனிம்மாதான், எத்தனையோ காலம் உன்னோடு சேர்ந்து வாழப் போகிறவளைப் பற்றி, அடுத்தவரை வைத்து, துப்பறிவது கூடாது என்று தடுத்தார்கள். அதனால்தான் அந்த யோசனையை விட்டுவிட்டேன். உன் மனதிலும் அன்பு இருப்பதால், ஒருநாள் நீயே கட்டாயமாய்ச் சொல்லுவாயாம்" என்று எதிர்காலம் பற்றிக் கோடி காட்டி, அதற்காக அவள் என்ன செய்ய வேண்டும் என்று மறைமுகமாக யோசனை சொன்னான்.

ஆனால் "அம்மாவுக்குத் தெரியுமா?" என்று கேட்டவள் மனதில் வேறு எண்ணம் ஓடியது.

"அம்மாதானே, சிஐடி வேண்டாம் என்றது. பாட்டிக்குக் கூடத்

தெரியும். அவர்களுக்கும் ரொம்ப ஆசைதான். உன்னால்தான், ஓர் எட்டு கூட முன்னே வைக்க முடியாமல், எல்லாம் அப்படியே நிற்கிறது. இப்போது கூடப் பார், ஒரு வார்த்தை பதில் சொல்லாமல், கற்சிலை மாதிரி அப்படியே நிற்கிறாயே!" என்று குறைப்பட்டான் சதானந்தன்.

அந்த வினாடியில் சுந்தரியின் இதயம் திம் திம்மென்று ஓங்கி அடித்துக் கொண்டுதான் இருந்தது.

துப்பறியும் நிறுவனம் என்று சதானந்தன் குறிப்பிட்டதுமே தொடங்கியதுதான். ஆனால், அவன் முன்னிலையில் எந்த உணர்ச்சியையும் காட்டிவிடக்கூடாது என்று, சுந்தரி கவனமாக இருந்ததால், முதல் அதிர்வு தவிர. வேறு எதையும் அவள் முகம் வெளியிட்டு விடவில்லை.

அடுத்து வந்த அன்னையின் பெயரும் அதிர்ச்சிதான் என்றாலும், அவளை வேறு மாதிரி யோசிக்கவும் வைத்தது.

சதானந்தனிடம், பெற்ற தாய்க்கு நிகரான அன்பு கொண்டவள் வனிதா என்பது, எல்லோரும் அறிந்த விஷயம். இப்போது, பெறாத அந்த மகனுக்காக, அவள் அறிந்திராத பெற்ற மகளை அழைத்துப் பேசக்கூடுமோ?

அப்படித் தனியே பேச வாய்ப்புக் கிடைக்கும்போது... அப்போது என்ன செய்யலாம்? அதற்கு மேல் யோசிக்க முடியாமல், மூளைச் சண்டித்தனம் செய்தது.

வெடித்துவிடும் போல அடித்துக் கொண்டிருந்த இதயத்தைச் சமனப்படுத்தும் வேலைதான், அதற்குச் சரியாக இருந்ததே!

எதிரில் நின்றவள் கல்லாக இறுகி நின்ற காரணம் தெரியாமல், சதானந்தன் எரிச்சல்பட்டான்.

"இதே பார் சுந்தரவதனி, வனிம்மா சொன்னார்கள் என்பதற்காகத்தான், நான் இன்னமும் பொறுமையாக இருக்கிறேன், ஆனால், என் பொறுமைக்கு ஓர் எல்லை உண்டு. அப்புறமாக என்னிடம் வருத்தப்பட்டு பயனில்லை! ஜாக்கிரதை!" என்று ஒரு மிரட்டலோடு முடித்தான்.

ஆனால், அவனது கொஞ்சல், கெஞ்சலைப் போலவே, இந்த மிரட்டலும் பயனற்றுத்தான் போனது.

ஆனால், நண்பன் பிரதீபன் மூலமாக, சதானந்தன் செய்த



முயற்சியின் விளைவாக, தங்கும் விடுதியை நடத்தும் பெண்மணியே வந்து பேசவே, சுந்தரி சற்று ஒழுங்காக உண்ணத் தொடங்கினாள்.

பட்டினி கிடப்பதால், எந்தப் பிரச்சினை தீரப் போகிறது என்று, அந்தப் பெண்மணி கேட்டதும் சரிதானே? உடலோடு, மனமும் பலவீனப்படுவதுதான் மிச்சம்.

ஆனால், உடல் பலம் பெறுவதால் மட்டும், பிரச்சினைகள் தீர்வது கிடையாது என்பதும் உண்மையே.

ஏனெனில், அவளது பிரச்சினைகளைப் பொறுத்த வரையில், ஒரு சென்டிமீட்டர் கூட முன்னேறாமல் அவை அப்படியே இருந்தன.

அன்னை தனியே அழைத்துப் பேசினால், அந்த நிலையை எப்படிக் கையாள்வது என்று ஒரு முடிவுக்கும் வர முடியாமல், இன்னமும் அவள் திணறிக் கொண்டுதான் இருந்தாள்.

உண்மை தெரிந்தால், தாயும் சேர்ந்து தவிக்கும்படி ஆகிவிடுமா?

அல்லது ஒருவேளை... என்று ஆசையும் அடித்துக் கொள்ளத்தான் செய்தது.

ஆனால், சின்னவர்கள் விஷயத்தில் அழைப்பின்றி மூக்கை நீட்டக் கூடாது என்ற எண்ணமோ, அல்லது அவர்களே எப்படியாவது சரிப்படுத்திக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையோ காரணமாக, வனிதா, மகளிடம் தனிப்படப் பேசவே இல்லை.

கூடவே, அதற்குள்ளாக அலுவலக விழா ஒன்றும் வந்து சேர்ந்தது.

அந்த விழாவைச் சென்னையில் நடத்த வேண்டும் என்பதில், எம்டியும், முதலாளியும் வெகு பிடிவாதமாக இருந்தார்கள்.

ஆனால் 'சென்னையிலா' என்று கலங்கினாள் சுந்தரி!



## தேடினேன் வந்தது | 11

ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை விற்பனையைக் கணக்கிட்டு, விழா எடுத்து, அதிக விற்பனை செய்த குழுவுக்கு ஊக்கப் பரிசாக, உருப்படியாக எதையாவது கொடுப்பது 'சதா செல்' நிறுவனத்தின் வழக்கம்.

இப்போது விரிவாக்கம் செய்த பிறகு, அதை இன்னமும் சிறப்பாகச்

செய்ய வேண்டும் என்று, நிர்வாகம் திட்டமிட்டது.

அதுவும், சுந்தரியின் இலவசத் திட்ட அமுலுக்குப் பிறகு, எல்லாக் கிளைகளிலுமே, விற்பனை பெருகி இருந்தது. சும்மாவே சிறப்பாகச் செய்து வந்த சென்னைக் கிளையிலோ, அமோகம் என்கிற அளவு!

பொதுவாகத் தலைமை அலுவலகத்துக்கு, முக்கியமான சில்ரை வரவழைத்து, விழாக் கொண்டாடுவார்கள்.

இந்த முறை, சிறப்பாக பணி புரிந்த சென்னைக் கிளையினரைக் கௌரவிக்கும் கருத்தோடு, சென்னையிலேயே விழா நடத்த முடிவு செய்தார்கள்.

முக்கியமானவர்கள் எல்லோரும் கோவையில் இருந்து சென்னை செல்வதாக ஏற்பாடு. விழா ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக, சுந்தரவதனியும்!

அவளுடைய தந்தையும், ரமேஷும் அவனுடைய தாயாரும் இருக்கும் இடம்!

அங்கே செல்லக் கொஞ்சமும் பிடிக்கவில்லை என்றாலும், என்ன காரணம் சொல்லி மறுப்பது?

"பாண்டியனுடைய உறவினர் அங்கே இருக்கிறார்களாம், மேடம். அதனால் எனக்குப் பதிலாக உங்களோடு அவர் வந்தால், எத்தனையோ விதத்தில் உதவியாக இருக்கக்கூடும்" என்று சுந்தரி மெல்லச் சொல்லிப் பார்த்தாள்.

ஆனால் வியப்பாக புருவங்களை உயர்த்தி "நீ பேசுவதைப் பார்த்தால், உனக்கு எங்களோடு வர விருப்பம் இல்லையோ என்றல்லவா, தோன்றுகிறது!" என்றாள் வனிதா.

"ஐயோ, அப்படியெல்லாம் இல்லை மேடம். பாண்டியனுக்குத் தெரிந்த நகரமாக இருக்கிறதே என்றுதான், மற்றபடி ஒன்றும் இல்லை" என்று சமாளித்துவிட்டு, நகர்ந்தாள்.

பின்னோடு வந்து "பண்ணையில் போலச் சென்னையில் கடற்கரைக்கு அழைத்துப் போனால், இன்னொரு தரம் இறுக்கம் தளர்ந்து விடுமோ என்று பயமாக இருக்கிறதா?" என்றான் சதானந்தன்.

"எனக்கு ஒரு பயமும் இல்லை" என்றாள் அவள் சுருக்கமாக.

"பின்னே, பெரிதாக பிகு பண்ணுகிறாய். ஒருவேளை, அம்மா சொன்னதுதான் நிஜமா? நிஜமோ, பொய்யோ? எப்படி இருந்தாலும், நீதான் எங்களோடு வரப் போகிறாய். அதனால், கிளம்பத் தயாராகு" என்று முதலாளியாக உத்தரவிட்டு விட்டுப்போனான் அவன்.



அவளுக்கு உள்ளூர மனம் குமுறியது.

அவளுக்கா விருப்பம் இல்லை? அந்த அம்மாவோடும், இந்த அன்பனோடும் வாழ்நாள் முழுவதையுமே கழிக்கத்தானே, அவளுக்குப் பேராசையாக இருந்தது! ஆனால் இருக்கும் சிக்கல்களையே தீர்க்க முடியாமல் திணறும்போது, இன்னும் ஒரு பெரிதாக எதுவும் நேர்ந்து விடுமோ என்ற பயம்தானே அவளுக்கு!

அவளது தலைவிதிக்கு, அப்படி நேரவும் செய்யும், மற்றபடி, அவளுடைய தாயையே, தாய்க்கும் மேலாக எண்ணும் ஒருவனிடம், அவளுக்கு நேசம் தோன்றுமா?

இன்னும் ஒரு கவலையாக, அம்மாகூட, அப்பாவைத் தற்செயலாக சந்திக்க நேரலாமே, அம்மா அதை யோசித்துப் பார்த்திருப்பார்களா என்று ஒரு கலக்கமும் தோன்றியது.

நிறுவனத்துடைய எம்டியாக அவளது நிர்வாகத் திறனையும், திடத்தையும் வைத்துப் பார்க்கையில், மகளைத் தந்த மனிதரோடனான எந்தச் சந்திப்பும் அவளை ஒன்றும் செய்து விடாதுதான், என்றாலும்...

சுந்தரிக்குமே, அவர்களைப் பார்க்கவே பயம் என்று சொல்ல முடியாது. பார்த்தாலுமே, மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டு யாரோ போலப் போய்விட, அவளால் முடியும். ஆனால், அந்தத் தரப்புமே, அப்படிச் செய்ய வேண்டுமே!

அப்படியின்றி, யார் என்ன என்று வெளிப்படையாக ஏதாவது பேசுவதுதான் ஆபத்து. அதிலும், இவர்கள் இருவரின் முன்னிலையில் அந்தக் குடும்பத்தைச் சந்திக்க நேராமல் இருந்தால், அவளுக்கு அது போதும்!

சென்னையில் தங்கி, விழா நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும் ஹோட்டலின் பெயரைக் கேட்டதுமே, கவலை அகன்று, சுந்தரவதனியின் மனம் லேசாகிவிட்டது.

அது ஓர் ஐந்து நட்சத்திர ஹோட்டல்.

சிவஞானத்தின் தொழில் நன்றாகவே நடந்தாலும், இது போலெல்லாம் செலவு பண்ண, அவருக்குப் பிடிக்காது. அந்த மனைவிக்கும் அப்படியே. பந்தாவாக இருக்க வேண்டும். ஆனால், பணம் செலவாகக் கூடாது என்று பார்ப்பார்கள். எனவே, இந்த ஹோட்டல் பக்கம் கூட வரமாட்டார்கள் என்ற நிம்மதியோடு, விழா வேலைகளைப் பார்த்தாள் அவள்.

சதானந்தன் கூட, அவளைக் கேலி செய்தான். "என்னவோ

வரமாட்டேன், வர மாட்டேன் என்றாய். இங்கானால், வரிந்து கட்டிக்கொண்டு முழுமூச்சோடு வேலை செய்கிறாயே! ஒருவேளை, பண்ணை வீடு போல, சென்னைக் காற்றிலேயே, இறுக்கம் தளர்ந்து விட்டதா?" என்று கிண்டலாகக் கேட்டான்.

நிஜமாகவே அப்போது அவள் வரிந்து கட்டிக்கொண்டுதான் அங்கிருந்த ஒரு சிறு ஏணியில் ஏறி, விழாவுக்கான அலங்கார வேலையில் இருந்த சிறு தவறைச் சீர்ப்படுத்திக் கொண்டிருந்தாள்.

கவனித்துக்கொண்டே இருக்கிறானே என்று அலுப்பாக நினைத்தபோதும், உள்ளூர சுந்தரிக்கு சந்தோஷமாகவும் இருந்தது. அவளிடம் வைத்திருக்கும் அன்பால்தானே?

ஆனால், இரு நிலைகளில் எதையும் காட்டிக் கொள்ளாமல், "எந்த வேலையையும், முழு ஈடுபாட்டோடு செய்வதுதான் என் வழக்கம், சார். அது பற்றி, உங்களுக்கே தெரியும்" என்று மிடுக்குடன் மொழிந்துவிட்டு, ஏணியில் இருந்து இறங்கலானாள் அவள்.

"ஒன்றே ஒன்று தவிர!" என்று இயல்பாகக் கைகொடுத்து இறக்கிவிட்டான் அவன்.

அவன் பிடியிலிருந்து விலகியவாறே, "அது வேலையில் சேர்ந்ததில்லையே, சதா சார்" என்றாள் அவள்.

"சதாசார் சதா சார் என்று என்னை வெறும் சாதா ஆக்க எண்ணுகிறாயில்லையா? அதெல்லாம் நடக்காது என்று, ஒரு நாள் நீயே உணரப் போகிறாய், பார்"

இதற்கு என்ன பதில் சொல்வது?

சிறு அமைதியின் பின், "வருவதாக ஒப்புக் கொண்டிருக்கும் விருந்தினர் கணக்குக்கு, பரிசுகள் எண்ணிக்கை சற்று குறைவாக இருக்கிறது... ச... சார்... கூடுதலாக ஐந்தாறு வாங்கி வைத்துக் கொள்வது நல்லது" என்றாள்.

"ஓஹோ! பேச்சை மாற்றுகிறீர்களாக்கும், சரி, நீ சொல்வதும் சரிதான். மீந்தாலும் பரவாயில்லை. யாருக்கும் இல்லை என்று ஆகிவிடக்கூடாது. இங்கே, எங்கே போய் வாங்குவது?" என்று விட்டுக்கொடுத்துக் கேட்டான் அவன்.

நிம்மதியோடு "இங்கேதான், ஸ்பென்சர்ஸ், சிட்டிசென்டர், எக்ஸ்பிரஸ்அவென்யூ, என்று பெரிய 'மால்'கள் நிறைய இருக்கின்றனவே சார். ஏதாவது ஒன்றில் கிடைக்காமல் போகாது" என்றவளை, விசித்திரமாகப் பார்த்தான் அவன்.



"எ...என்ன?"

"பாண்டியனுக்குத்தான் சென்னை தெரியும் என்றாய். ஆனால், இங்குள்ள 'மால்'கள் பற்றி உனக்கு நிறையத் தெரிகிறதே!" என்று அதிசயப்பட்டான் அவன்.

இவன் விட்டுக்கொடுத்துக் கேட்டானா? வேண்டும் என்று, இப்படிக் குறைவாக வாங்க ஏற்பாடு செய்தானா?

ஒருகணம் திகைத்துவிட்டு "அது... வரவேற்பில் சொன்னார்கள், சார்!" என்று சமாளித்தாள் அவள்.

"இருக்கும்!" என்றான் அவன்.

அவள் அப்படிப் பெரிய 'ஷாப்பிங்' இடங்களின் பெயர்களை மட்டும் சொன்னது கூட, அந்த மாதிரி இடங்களில் விலை அதிகமாக இருக்கும். உள்ளே எட்டிக்கூடப் பார்க்கக்கூடாது எனும் மரகதத்தின் பிடிவாதம் நினைவு இருந்ததால்தான். அந்தக் குடும்பத்தைச் சந்திக்கும் வாய்ப்பு, அங்கே இராதல்லவா? சொன்னால், அதையே சந்தேகப்படுவான் போல இருக்கிறதே!

இப்படிச் சிறு சிறு வாக்குவாதங்கள் தவிர, விழா மிக நல்லபடியாகவே நடந்து முடிந்தது.

நீண்ட காலமாகக் கோவையிலும் சுற்று வட்டாரத்திலும் பழகியவர்கள், பழைய நண்பர்கள் என்று விழாவுக்கு வந்திருந்த விருந்தினர் கிளம்பக் கிளம்ப, விழா ஹால் வாயில் அருகிலேயே நின்று, அவரவருக்கு ஏற்றவாறு, மேலும் ஓரிரு வார்த்தைகள் பேசி, அவர்களுக்காக வாங்கி வைத்திருந்த பரிசையும் கொடுத்து வழியனுப்பி வைத்தார்கள்.

நேரடிப் பேச்சுவார்த்தைகளை வனிதாவும், சதானந்தனும் கையாள, பின் புலத்தில் இருந்து, தேவைப்படும் வேலைகளை சுந்தரவதனி செய்து கொடுத்தாள்.

கடைசியாகக் கிளம்பியவர், எப்போதும் அவர்களது சட்டப் பிரச்சினைகளைக் கவனிப்பவரும், அந்தக் குடும்பத்துடைய நீண்ட கால நண்பருமான வக்கீல் அன்பரசு.

சதானந்தனும் வனிதாவும், ஹோட்டலில் வரவேற்பு ஹால் வரை வந்து, அவரை வழியனுப்பி வைத்தனர்.

அவருக்கான பரிசுப்பொருளோடு கூடவே வந்த சுந்தரி, அவர்கள் மூவருமாக சற்று நேரம் மனம் விட்டுப் பேசுவார்கள் போலத் தோன்றவும், அந்த உரையாடலில் நெருடலாக இருக்க விரும்பாமல், பரிசை

வனிதாவின் கையில் கொடுத்துவிட்டு, சத்தமின்றி, உள்ளே நகரலானாள்.

பாராட்டும் சிறு முறுவலோடு அவளைப் பார்த்துவிட்டு "இந்தப் பெண்ணைப் பார்க்கும்போது அந்த வயதில் உன்னைப் பார்த்தது போலவே இருக்கிறதும்மா!" என்றார் அந்த முதிய வக்கீல்.

உடல் முழுவதும் ஒரு சந்தோஷம் பரவ, சுந்தரியின் மெதுவான நடை, இன்னமும் வேகம் குறைந்து போயிற்று.

அன்னைக்கு எப்படி இருக்கக்கூடும் என்று அவள் யோசிக்குமுன், அதை, வியந்த குரலில் வனிதாவே தெரிவித்தாள் "ஆச்சரியமாக இருக்கிறது, அங்கிள். சுந்தரியைப் பண்ணையில் பார்த்துவிட்டுப் பெரியம்மாவும், இதேதான் சொன்னார்கள். ஆனால், சாயல் என்று பார்த்தால்...."

"ஊகூம். முக அமைப்பைச் சொல்லவில்லையம்மா. ஆனால், சில விதமான அசைவுகள், நேராகப் பார்க்கும் விதம்... நீயும், இதேபோல உன்னைக் காட்டிக் கொள்ளாமலே உதவி செய்வாய்"

முழுசும் நின்று கேட்காவிட்டாலும், சுந்தரிக்குத் துள்ளிக் குதிக்க வேண்டும் போல இருந்தது. தாயைப் போலப் பெண் என்பது, இதுதான் போலும், செயல்கள், தன்மைகள்!

விழா வெற்றிகரமாக நடந்துவிட்டது. தாயைப் போல இருப்பதாக ஒரு பெரியவர், சொல்லப் போனால், இரு முதியவர்கள் சொல்லி விட்டார்கள்.

அவளது வாழ்வின் பிரச்சினைகளுக்கு, இதில் எந்த பதிலும் இல்லைதான். ஆனால், அவை பற்றி இன்று எண்ணிப் பார்க்கக்கூட, அவளுக்குப் பிடிக்கவில்லை.

இன்றைக்கு இப்போது, அவள் மிகவும் சந்தோஷமாக இருக்கிறாள். அது போதும்.

மிகுந்த மனத் திருப்தியோடு பக்கவாட்டில் திரும்பி, விழா ஹாலை நோக்கி சுந்தரவதனி நடந்தபோது, அது நிகழ்ந்தது.

அந்த அகன்ற பாதையின் இன்னொரு புறமாக, ஹோட்டலின் உணவருந்தும் ஹால் இருந்தது. அதன் கதவு திறந்து, அங்கிருந்து மூன்று பேர் வெளியே வந்தார்கள். அவர்கள் சுந்தரியுடைய தந்தை சிவஞானம், அண்ணன் ரமேஷ், அவனுடைய தாயார் மரகதம்!

அவள் பார்த்த அதே வினாடியில், அவர்களும் சுந்தரியைப் பார்த்துவிட, நால்வருமே பிரமித்து நின்று விட்டனர்.



பிரமிப்பில் இருந்து முதலில் விடுபட்ட மரகதம் "அடிப்பாவி!" என்று வீறிட்டாள் "பாதகி! உன் கண்ணாலேயே, பாருடா! என்னமோ, அவள் சொல் மாற மாட்டாள், திரும்பி வர மாட்டாள், சொத்துக் கேட்க மாட்டாள் என்றெல்லாம் பெரிதாக அளந்தாயே! அதுவும்! ஜிலுஜிலுவென்று, என்ன அலங்காரம் பாரு! இந்த அலங்காரத்திலேயே, இருந்த பணம் எல்லாம் செலவாகியிருக்கும். அப்பனைப் பிடித்து உலுக்கிப் பணம் பொறுக்க, வந்துவிட்டாள். வீட்டுக்குப் போய்ப் பார்த்திருப்பாள். அங்கே இல்லை என்றதும், பின்னோடே, இங்கேயே வந்துவிட்டாள். இப்போதுதான் வந்தாளோ, இதற்கு முன்னே எத்தனை தரம் வந்து, பணம் பறித்தாளோ!" என்று நிறுத்தாமல், உரத்த குரலில் பொரிந்து கொட்டினாள் மரகதம்.

பக்கவாட்டில் இருந்த 'லிஃப்டு'க்குப் போவோரும், அதிலிருந்து வருவோரும் திரும்பிப் பார்த்துவிட்டுப் போவதைக் காண, சுந்தரிக்கு அவமானமாக இருந்தது.

அத்தோடு வக்கீல் அன்பரசுடன் உரையாடலை முடித்துக்கொண்டு, விரைவிலேயே, வனிதா, சதானந்தனும் திரும்பி வந்துவிடலாம். அதற்குள், இவர்களுக்குப் புரிய வைத்து, அனுப்பியாக வேண்டும்!

பலமுறை, பெரியதாயின் கூக்குரலில் குறுக்கிட முயன்று, முடியாமல் போகவே, சுந்தரி, ரமேஷிடம் திரும்பினாள் "அண்ணா, நீயாவது நான் சொல்வதைக் காது கொடுத்துக் கேள். இங்கே நான் அப்பாவைப் பார்க்க வரவில்லை, இதுவரை அவரைப் பார்க்க வந்ததும் இல்லை" என்று, உண்மையைக் கூறினாள்.

நல்லவேளையாக்க, அவள் கூறியதை ரமேஷ் கேட்டதோடு, பதிலும் சொன்னான்.

ஆனால், மகன் பேசத் தொடங்கவும், மரகதத்தின் அலறல் சற்று நின்று அவனது பேச்சைக் கவனித்தது மட்டுமே நல்லவேளையாக இருந்தது.

ஏனெனில், "நானும் அப்படித்தான் இதுவரை நினைத்திருந்தேன். ஆனால், அம்மா சொன்னதற்கு நிரூபணமாகக் கண் முன்னே வந்து நின்று, இப்படிச் சொன்னால் எப்படி நம்புவது? உனக்குப் பணம் வேண்டுமானால், அன்றைக்கு கேட்டு வாங்கியிருக்கலாமே! ஓரளவு தரத் தயாராகத்தானே இருந்தேன். அதைவிட்டு, அப்பாவை ரகசியமாகச் சந்தித்து, இது என்ன மோசடி?" என்றான் அவனும், தாயையே ஒட்டி.

"ஐயையோ, என்னண்ணா நீயும் இப்படிப் பெரியம்மா

சொன்னதையே..." என்றவளின் பேச்சில் ஆங்காரமாகக் குறுக்கிட்டு "யாருடா, உனக்குப் பெரியம்மா? இன்னொரு தடவை, இப்படிச் சொன்னால், நாக்கை இழுத்து வைத்து அறுத்துவிடுவேன். இந்த ஆள் கண்ட கண்ட சாக்கடையில் உருண்டுவிட்டு வருவார். அந்தச் சாக்கடைகள் பெற்றுப் போடுகிற நாய்களுக்கெல்லாம், நான் பெரியம்மாவா? வாந்தி வருகிறது, எனக்கு! ஏண்டா, எனக்கெல்லாம் கல்யாண நாள் ஒரு கேடா? கொண்டாடுவதற்கு, நல்ல ஓட்டல் பார்த்துக் கூட்டி வந்தாய்!" என்றாள் மரகதம் வெறுப்பும் குமுறலுமாக.

தந்தை, அவருடைய முதல் மனைவிக்கு இன்று திருமணநாள் என்பது, சுந்தரிக்கு நினைவு வந்தது! அதைக் கொண்டாட, இந்த ஹோட்டலுக்கு வந்திருக்கிறார்கள்!

விஷயம் புரிந்ததும், ஒரு கணம், பெரியன்னையை நினைத்துப் பாவமாகக் கூட இருந்தது, சுந்தரிக்கு.

அவளைப் பெற்றவளைப் பற்றி, இவ்வளவு கேவலமாகப் பேசாதிருந்தால், ரொம்பவே பரிதாபப்பட்டிருப்பாள்.

ஆனாலும், இந்த நாளில், தன்னைப் பற்றிய ஒரு பொய்யான சுமையையும் ஏற்றிக்கொண்டு செல்ல வேண்டாம் என்று கருதி, தந்தையிடம் திரும்பினாள் "ஏனப்பா சும்மா நிற்கிறீர்கள்? அவர்களிடம் சொல்லுங்களேன்! அன்று வீட்டை விட்டுக் கிளம்பிய பிறகு, நான் ஒருதரம் கூட உங்களைப் பார்க்க வந்ததே கிடையாது என்று, உண்மையைச் சொல்லுங்களேன்! டெலிஃபோனில் கூட, உங்களுடன் நான் பேசியதுண்டா, அப்பா? வாயைத் திறந்து சொல்லுங்களேன்ப்பா!" என்று கொதிப்பும் வருத்தமும் பெருகக் குமுறினாள்.

ஆனால், சிவஞானம் தலையைத் தடவிக்கொண்டு, மென்று விழுங்கி வாயைத் திறக்குமுன், இன்னொரு குரல் கேட்டது!

"இந்த மனிதரை, அப்பா என்கிறாயே! அப்படியானால், நீ என் மகளா?" என்று மிக அருகில், திகைப்புடன் கேட்ட குரல், அவளுடைய அன்னை வனிதாவுடையது!

அச்சத்தினால் உடல் விறைக்க, சுந்தரி திரும்பிப் பார்த்தாள்.

அவள் அஞ்சியது போல, அவளுடைய அன்னையின் அருகே சதானந்தனும் நின்றுகொண்டிருந்தான்!

கண் முன் பூச்சி பறந்தது, அவளுக்கு!





## தேடினேன் வந்தது 12

தாயைப் பற்றித் தவறாக கருதுவானே என்று, எந்த உண்மை, யாருக்குத் தெரியக் கூடாது என்று, தன் எதிர்காலத்தையே இழந்துவிட சுந்தரவதனி தயாராக இருந்தாளோ, அந்த உண்மை, அந்த சதானந்தன் முன்னிலையிலேயே, அவளுடைய தாயின் வாயாலேயே உடைப்பட்டு விட்டது!

இனி, அவளுடைய அன்னையின் நிலை என்ன ஆகும்?

அச்சமும் கவலையுமாக அவள் பார்க்க, வனிதா வேறு பேசினாள்.

"ராஜகுமாரியாக வளர்த்து, ராணியாக வாழ வைப்பேன் என்று சொன்னார்களே! நீ நன்றாக இருக்க வேண்டும் என்று அல்லவா, உன்னை விட்டுக்கொடுத்தேன். நீ அனாதை போல விடுதியில்... தன்னந்தனியாக... என் கண்ணே..." என்று சிலையாக நின்ற மகளை நோக்கிக் கைகளை நீட்டிக்கொண்டு ஓர் எட்டு எடுத்து வைத்த வனிதா, கால் மடிந்து, கண் மயங்கிக் கீழே சரியலானாள்.

சட்டெனக் கை கொடுத்து, சதானந்தன் அவளைத் தாங்க "அம்மா!" என்று கதறி, சுந்தரி, தாயிடம் ஓடினாள்.

"ஹஹோ! இவள்தான் அந்த அதிரூபசுந்தரியா? ஊரான் புருஷனுக்கு வலை போட்டவள்! ஏண்டா, நீ என்ன, சும்மாவா பெண்ணைக் கொடுத்தாய்? லட்சக் கணக்கில் பணத்தை வாங்கிக்கொண்டு, பெற்ற பெண்ணை விற்ற தே..."

நாராசமாகக் கொட்டிய வார்த்தைகள் "ஷட் அப்! இதற்கு மேல் ஒரு வார்த்தை சொன்னால், இங்கே ஒரு கொலை விழும்!" என்ற சதானந்தனின் சீறலில், இடையிலேயே தடைப்பட்டு நின்றன.

மரகதத்தை ஒரு புழுவைப் போலப் பார்வையாலேயே ஒதுக்கிவிட்டு, ரமேஷிடம் திரும்பி "நீங்கள்தான் மகன் என்று தெரிகிறது. எங்கள் வனிம்மாவைப் பற்றி, எங்களுக்குத் தெரியும். ஆனால், ஒரு கௌரவமான பொது இடத்தில் எப்படி நடந்து கொள்வது, என்று அந்தம்மாவை வீட்டுக்கு அழைத்துப் போய்க் கற்றுக் கொடுத்துவிட்டு, அதன்பிறகு, இந்த மாதிரி இடங்களுக்குக் கூட்டி வாருங்கள்" என்றதோடு, அவளையும் ஒதுக்கினான்.

குடும்பத் தலைவரை, ஒரு மனிதனாகவே அவன் கருதவில்லை போலும்!

உதவிக்கு ஓடி வந்த ஹோட்டல் பணியாளர்களைத் தலையசைத்து மறுத்துவிட்டு "அம்மா கைப்பை கீழே கிடக்கிறது பார். எடுத்து வா! சீக்கிரம்!" என்று சுந்தரியை விரட்டினான்.

அவள் பையை எடுத்துக்கொண்டு வரவும், "முன்னே போய், அறைக் கதவைத் திற" என்று, வனிதாவைத் தூக்கிக்கொண்டு 'லிஃப்டை' நோக்கி விரைந்தான்.

அதற்குள் ஹோட்டல் பணியாள் ஒருவன் ஓடிப்போய் 'லிஃப்டை' திறந்து வைத்து, அவர்கள் மூவரும் ஏறியதும் மூடிவிட்டுப் போனான்.

"மருத்துவ உதவி தேவை என்றால், வரவேற்பில் சொல்லுங்கள் சார்" என்றபடி,

முன்னே ஓடி அறைக் கதவைத் திறந்துவிட்டு, சதானந்தன், வனிதாவைப் படுக்கையில் கிடத்தும் நேரத்தில், ஓடிப்போய் தண்ணீர் ஜக்கை எடுத்து வந்து நீட்டினாள் சுந்தரி.

கொஞ்சம் நீரைக் கையில் எடுத்து, ஏற்கனவே தெளியத் தொடங்கியிருந்த வனிதாவின் முகத்தில் லேசாகத் தடவினான் அவன்.

கண் விழித்த வனிதாவின் பார்வை, மகளின் மீது படிய, ஒரு கையசைவால் அவளை அருகே அழைத்தாள்.

சட்டென மண்டியிட்டு, தாயின் அந்தக் கையில் முகம் புதைத்து "அம்மா" என்று அழுதாள் பெண்.

அவர்களைப் பார்த்தபடியே, ஜக்கைப் பழையபடி மேஜை மேல் கொண்டுபோய் வைத்தவன், ஃபோனை எடுத்துப் பேசிவிட்டு, திரும்பி வந்து, ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுப் படுக்கையின் அருகே அமர்ந்தான்.

கையோடு எடுத்துவந்த டிஷ்யூவால் பெரியவளின் கண்களைத் துடைத்து விட்டபடியே, "என்ன, வனிம்மா, நீங்கள்! இவ்வளவு பலவீனமானவர்களாக இருப்பீர்கள் என்று கனவுகூட கண்டதில்லை! எல்லோரிடமும் கனிவும் கருணையும் காட்டினாலும், உள்ளூர இரும்பு மாதிரி உறுதியான மனம் என்று நான் பெருமையாக நினைத்தால், இப்படிக் கலங்கிவிட்டீர்களே!" என்று லேசாகக் கண்டிப்பது போலக் கூறினான்.

அடுத்த கையால், அவன் கரத்தைப் பற்றினாள் வனிதா. "அதில்லை, சதா. நம் பக்கத்திலேயே இருந்திருக்கிறாள். நாமெல்லாம் சேர்ந்து இருக்கும்போது, இவளைத் தன்னந்தனியாக கிடந்து, தவிக்க விட்டுவிட்டேனே என்று..." என்றவளின் கண்களில் மறுபடியும் நீர்



வடிந்தது.

தாயின் கை மீது கவிழ்ந்து கிடந்தவளின் மீது, சதானந்தனின் பார்வை படிந்தது.

"தப்பு உங்கள் மீது இல்லையம்மா. உங்கள் அருமை பெண்தான் ஏதோ நினைத்து, என்னமோ செய்து வைத்திருக்கிறாள். உங்களை கண்டுகொண்டால், அம்மா என்று நேராக வரவேண்டியதுதானே? அதைவிட்டு பெரிய கடலில் சின்னமீன் என்று கதை சொல்லி, வேலையில் சேர்வதில் இருந்தே ஒரே தகிடுதத்தம்! தலைமைக் கிளையில் வேலை என்றதும் ஒரு கண்ணீர், பண்ணைக்குச் செல்லும்போது, பாராட்டி ஒரு தட்டுத் தட்டினால், அதில், மின்சாரத்தைத் தொட்ட மாதிரி அதிர்வு! என்ன திகைப்பு? பின்புறம் பார்க்கும் கண்ணாடி வழியே, உன்னைப் பார்த்துக் கொண்டேதான் வந்தேன். ஒரு பாராட்டுக்கு, இப்படி உணர்ச்சி வசப்படுகிறாளே என்று, அப்போது நினைத்தேன். காரணம் இப்போது புரிகிறது. ஆனால்..." என்று சதானந்தன் சொல்லிக் கொண்டிருக்கும்போது, அழைப்பு மணி அடித்தது.

"தெம்பு வரும் என்று, பழச்சாறு கொண்டு வரச் சொன்னேன். மெல்ல எழுந்து உட்காருங்கள்" என்றுவிட்டுப் போய்க் கதவைத் திறந்தான்.

மூவருக்குமே பழச்சாறு வந்திருந்தது.

"குடித்துவிட்டு, அப்புறம் பேசலாம்" என்று சதானந்தன் சொன்னதைக் கேட்டுச் சாறை எடுத்துப் பருகும்போதுதான், தொண்டை காய்ந்திருந்ததை, சுந்தரி உணர்ந்தாள்.

சாறைக் குடித்து முடித்ததும், அழகான டம்ளர்கள் மூன்றையும், மேஜைமேல் கொண்டு வைத்துவிட்டு, மறுபடியும் பழைய இடத்திலேயே அமர்ந்தான்.

படுக்கையில், தாயின் அருகில் இருந்த சுந்தரியைப் பார்த்து "சொல்லு. ஏன் இந்த ஒளிவு மறைவு? இனியேனும் அது பற்றிச் சொல்லலாமில்லையா?" என்று கேட்டான்.

"எ...எனக்கு அப்பாவும் ரமேஷ் அம்மாவும் சொன்னதுதானே தெரியும்? அது... அம்மாவை நல்ல விதமாகக் காட்டுவது அல்ல. அந்த மாதிரியான அம்மா, என்னை மகள் என்று ஒத்துக் கொள்வார்களோ, மாட்டார்களோ என்ற சந்தேகம்..."

"அப்புறம்? அந்த அழுகை? மெலிவு?"

"அம்மா மேல் வந்துவிட்ட அன்பு! திருமணம் என்று வரும்போது, என்னைப் பற்றிய விசாரணை வரும். அம்மா பற்றிய விவரம் தெரியும்போது, நீங்கள் எல்லோரும் அம்மாவைத் தப்பாக நினைத்து, அவர்களையும் சேர்த்து ஒதுக்கி விடுவீர்களோ என்ற பயம்!" என்றாள் சுந்தரவதனி குரல் கரகரக்க.

"என்னது? எங்கள் வனிம்மாவை, நாங்கள் ஒதுக்குவதா?"

என்ன பைத்தியக்காரத்தனம் என்பது போலப் பார்த்தான் சதானந்தன். "இதோ பார், சுந்தரவதனி. அம்மாவுக்குப் பழைய வாழ்வு ஒன்று இருந்திருக்கும் என்று, எனக்கும் தெரியும். ஆனால், அந்த வாழ்வில் என்ன நடந்திருந்தாலும், வனிம்மா எங்கள் வாழ்வின் பிரிக்க முடியாத ஓர் அங்கம். அதை மட்டும் தெளிவாகத் தெரிந்துகொள்!" என்றான் உறுதியான குரலில்.

'அப்பாடி' என்று ஆறுதலாக இருந்தது சுந்தரிக்கு.

ஒரு சிறு அமைதியின் பின் "பாட்டி இல்லையா?" என்று மெல்லக் கேட்டாள் வனிதா.

பாட்டி! பாட்டிதானே, சிறு குழந்தையாக சுந்தரியைப் பெற்றவளிடம் இருந்து வாங்கி வந்து, தன் தலையில் சுமத்தியதாக, ரமேஷ் அம்மா கூறினாள்!

"இ...இல்லை. ஆறு மாதங்கள் ஆகின்றன" என்றாள் சுந்தரியும் மெல்லிய குரலிலேயே.

மகளின் கையை வருடி "இப்போது புரிகிறது" என்றாள் வனிதா.

ஒரு பெருமூச்சின் பின், சிறு குரலில், மெதுவாகப் பேசத் தொடங்கினாள்.

"இந்த விஷயம் முழுவதும், பெரியம்மாவுக்கும், வக்கீல் அன்பரசுக்கும் முன்பே தெரியும். இந்த ஒரு முறை, உங்களிடம் சொல்லப் போகிறேன். உங்கள் இருவருக்கும் நடந்தது தெரிய வேண்டும் என்று, ஒரே ஒரு முறை" என்று மறுபடியும் பெருமூச்செறிந்தாள்.

"என் வாழ்வின் இருண்ட காலம் அது. ஐந்து வயதிலேயே தந்தையை இழந்திருந்த நான், பதினேழு முடியும்போது, அப்போதுதான், தாயையும் பறிகொடுத்திருந்தேன்... அண்ணனின் வருமானமும் குறைவு. எனவே, அண்ணியைக் குற்றம் சொல்ல முடியாது... தொடர்ந்து படிக்க முடியாமல், ஒரு கடையில் பில் போடும் வேலை செய்தேன். இந்த நாளில்தான், சுந்தரியுடைய தந்தையை, நான் சந்தித்தேன்..."



தந்தை சொன்னதும் இதைத்தான். ஆனால், எவ்வளவு இளப்பமாகச் சொன்னார் என்று சுந்தரிக்கு நினைவு வந்தது.

"....அண்ணனின் ஏற்பாட்டில், ஒரு சிறு கோயிலில்... பெயருக்குத்தான் அந்தத் தாலி என்று, பிறகுதான்... ரொம்ப பிறகு, யோசித்துக் கண்டுபிடித்தேன்... அது ஏன் என்று, அவர் வருவது நின்று, நீ பிறந்து, உன் பாட்டி வந்தபோதுதான் தெரிந்தது. அவர் ஏற்கனவே திருமணமானவர்!"

ஐயோ! அம்மாவுக்கு எவ்வளவு பெரிய அதிர்ச்சியாக இருந்திருக்கும் என்று, சுந்தரியின் மனம் தவித்தது.

"உன் அப்பா எப்படியோ சுந்தரி. ஆனால், உன் பாட்டிக்குப் பெரிய மனது. உன் பிறப்புக்கு ஒரு கௌரவம் கொடுக்க, அவர்கள் விரும்பினார்கள். அத்தோடு, தன் மகனால் கெட்ட என் வாழ்வு தழைக்க வேண்டும் என்று, நிறைய பணம்... ஐந்து லட்சம் என்பது, அந்த சமயத்தில் அற்ப சொற்பமான தொகை அல்ல, அவ்வளவு பணம் தந்து, மேலே படித்து, வாழ்வை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். உன்னையும் ராஜகுமாரியாக வளர்த்து, ராணியாக வாழ வைக்கப் போவதாகச் சொன்னார்கள். என்னோடு இருந்தால், உன் வாழ்வு கேள்விக் குறியாகிவிடும் என்று, அன்றைய எனக்குமே புரிந்தது. உன்னைத் தூக்கி, அவர்கள் கையில் கொடுத்துவிட்டேன். என் வாழ்வைச் செம்மைப்படுத்தும் பொறுப்பை என் அண்ணன் ஏற்றுக் கொண்டார். அவரை நம்பியது, அடுத்த பெரும் தவறு.

"மலையடிவாரத்தில் ஏதோ பண்ணை மிகவும் குறைந்த விலைக்கு வருகிறது என்று, மேட்டுப்பாளையத்துக்குக் கூட்டி வந்தார். சில பல கையெழுத்துக்கள் போடச் சொன்னார். மறுநாளிலிருந்து, அவரை நான் பார்க்கவில்லை. உடுமாற்றுத் துணியும், ஒரே ஒரு பத்து ரூபாயும்தான். எனக்கென்று அவர் விட்டுப்போன சொத்துக்கள்... அதற்கு மேல், எந்த விதமாயும், அவர்களைத் தொடர்பு கொள்ள முடியவில்லை! இருபது ஆண்டுகளுக்கு முன், அண்ணனின் வீட்டில் ஃபோன் கூடக் கிடையாது. அண்ணனின் அலுவலகத்தில் கேட்டபோது, வேலையை விட்டுவிட்டு, எங்கோ போய்விட்டதாகச் சொன்னார்கள்" என்று கண் மூடித் திறந்தாள் வனிதா.

எதையும் விலாவாரியாக விவரிக்காவிட்டாலும், அன்று தாய் என்ன தவிப்பு தவித்திருப்பாள் என்று, சுந்தரியால் உணர முடிந்தது.

இப்போது மறுபடியும் மனதால் அனுபவித்துக் கொண்டிருக்கிறாள்

என்பதும்!

இன்னமும் சதானந்தனைப் பற்றிய விளக்கம் வரவே இல்லை! ஆனாலும் தாயின் துன்பம் தாளாமல், இதற்குமேல் எனக்கு ஒன்றும் வேண்டாம்மா, விட்டுவிடுங்கள் என்று சொல்லலாம் என்று அவள் வாய் திறக்குமுன், வனிதாவே தொடர்ந்தாள்.

"சும்மா என்றால் அந்த வயதில் முன் பின் தெரியாத இடத்தில் நாதியற்ற நிலையில், எனக்கு என்ன ஆகியிருக்குமோ? ஆனால் வெகு சாதாரணமான, படிப்பறிவு இல்லாத ஒரு பெண்ணின் வடிவில், கடவுள் எனக்குத் துணை வந்தார்.

"வீடு, குடும்பங்களில் நடக்கும் நல்லது, கெட்டதுகளுக்கு, கடை நிலை வேலைகளுக்கு ஆள் சேர்த்து அனுப்புகிறவள்... மேஸ்திரி என்றார்கள். அவள், என்னையும் தன் குழுவில் சேர்த்துக் கொண்டாள். எச்சிலை எடுத்து, சுத்தம் செய்தால், சாப்பாடும், பத்தோ, இருபதோ பணமும் கிடைக்கும். வேலை இருக்கிற நாளில், கிடைக்கிற ஊதியத்தில், அவளுக்குக் கொஞ்சம் கொடுக்க வேண்டும். அப்படி ஒருநாள், ஒரு பெரிய வீட்டுக்கு, வேலைக்குச் சென்றபோதுதான்..." என்று அன்பால் மலர்ந்த கண்களால் சதானந்தனை நோக்கி, அவனது கையைப் பற்றி அழுத்தினாள் "உன்னை நான் சந்தித்தேன். அதுவரை, வாழ்ந்த சூனிய வாழ்வு மாறி, என் வாழ்வுக்கு ஓர் அர்த்தமும், பிடிப்பும் ஏற்பட்டன!" என்றாள்.

சின்னவர்கள் இருவரின் கண்களும் கலங்கியிருந்தபோதும், இருவருமே எதுவும் பேசவில்லை. அன்னை எவ்வளவு கஷ்டப்பட்டிருந்தாலும், அது முடிந்த கதை. அதையே திரும்பத் திரும்ப பேசி லாபமில்லை. அதைவிட, தாய் சொன்ன அந்த 'ஒரே ஒரு முறை'யாக அதைக் கேட்டு முடித்துவிடுவது மேல்.

"மேலே சொல்லுங்கம்மா" என்றான் சதானந்தன் "இவளுக்கு இருபத்தியிரண்டு என்றால், அப்போது எனக்கு ஐந்து வயதாவது, இருக்க வேண்டுமே?"

"ஐந்துதான்" என்ற வனிதா, அவனது நெற்றியில் விழுந்த சிகையைப் பரிவுடன் விலக்கிவிட்டாள். "அன்றைய சாப்பாடு, இறுதிச் சடங்கு முடித்து, உற்றார் உறவினருக்குப் போடப்படுகிற விருந்து. சில நாட்களுக்கு முன்பாக, உன் பெற்றோர் இருவருமே, ஒரு விபத்தில், ஒன்றாக உலகை நீத்திருந்தனர். அதற்கானதுதான், எல்லோரும் சலசலவென்று பேசியவாறே, சாப்பிட்டார்கள். ஒரே ஒரு மாறுபட்ட



ஒலியாக, உன் அழுகுரல் கேட்டது. ஒரு செட் இலைகளை எடுத்துப் போய்க் குப்பைக் குழியில் போட்டுவிட்டு வந்தபோதும், உன் அழுகை நிற்கவில்லை.

"ஐயோ, யாருக்குமேயா, இந்த அழுகை கேட்கவில்லை. அழுது, அழுது தொண்டை கட்டிக் குரல் கம்மிப் போய்விட்டதே என்று அழுகைக் குரல் வந்த பக்கமாக மெல்லப் போனபோது 'கிட்டே கூடப் போகாதே'!' என்று தணிந்த குரலில் யாரோ சீறினார்கள். திடுக்கிட்டு நின்றால், அவர் என்னைச் சொல்லவில்லை.

"பேரன் அழுது, அழுது தொண்டையே, போய் விட்டதுங்க. ஆண் குழந்தை வேறே. நம்ம அஞ்சு கேட்டிருந்தால், தாங்குவாளா?" என்று கேட்ட பெண் குரலிலும் கலக்கம் தெரிந்தது.

"கேட்பதற்கு அவள்தான் இல்லையேடி. இதோபார், எனக்கு மட்டும் பேரன் அழுது ஏங்குவது ஆசையா? ஏகப்பட்ட சொத்து! மகன், மருமகள் திடுதிப்பென்று போன துக்கத்திலே, சம்பந்தியம்மா, அரைப் பிணமாகி விட்டாள். சதாப் பையன் இன்னும் கொஞ்சம் சத்துக் கெட்டுப் போனான் என்று வை! அவர்களாலே, பிள்ளையைப் பார்த்துக் கொள்ள முடியலை, நாங்க வளர்க்கிறோம் என்று, அப்படியே முழுச் சொத்தையும் அடித்து விடலாம். இந்தக் கத்தல் தாங்காமல், இப்போது கூடப் பிள்ளைப் பொறுப்பையும், அந்த சாக்கில், சொத்துப் பொறுப்பையும் தருவதாக எழுதி வாங்கிக்கொண்டு, அந்தம்மாவைக் காசிக்கு ஓட்டி விடலாம் என்றும் ஐடியா வைத்திருக்கிறேன். அதனாலே, உன் பேரன் பாசத்தை கொஞ்சம் ஒதுக்கி வைத்து, நீயும் ஒதுங்கியே இரு!" என்றார்... அது, உன் தாய் வழித் தாத்தா என்று பிறகு தெரிந்தது.

"எனக்குத் தாங்க முடியவில்லை. பெற்ற குழந்தையைப் பிரிவது எப்படி என்று, எனக்குத் தெரியும். இங்கே பெற்றவர்களைப் பிரிந்து ஒரு பிள்ளை அழுவதா?

"அழுகுரல் வந்த திசையை நோக்கிப்போனால், இன்னும் சிலரும் இப்படித்தான் பேசிக்கொண்டிருந்தனர். கிட்டத்தட்ட எல்லாமே, சொத்துக்களை எழுதி வாங்குவது பற்றிய பேச்சு. ஒன்றுவிட்ட உறவுகளாம். சோகத்தில் மூழ்கி, சோர்ந்து கிடக்கும் பெரியம்மா மீளுமுன், இயன்றவரை, வாங்கி முடிக்க வேண்டும். அந்த வக்கீல் வில்லன் கிளம்பியதும், அந்த வேலை தொடங்க வேண்டும் என்றார்கள்.

"பரட்டைத் தலையும், கிழிசல் ஆடையுமாக, எச்சிலை எடுக்கும் பெண்ணை ஒரு பொருட்டாக கருதவில்லை போலும்! அவரவர்

விருப்பத்துக்குப் பேசினார்கள்!

"எனக்கு ஒரே கவலையாகிப் போயிற்று. உன்னையும், உன் பாட்டியையும், எப்படிக் காப்பாற்றுவது? அதுவும் நீங்கள் இருவரும் யார் என்றே தெரியாத நிலையில்!

"அன்றும் இதே பண்ணைவீடுதான். முன்னும் பின்னும் கொட்டாய் போட்டிருந்தது. தேடிக் கொண்டே போனவள், முதலில் உன்னைக் கண்டுபிடித்தேன். அது, உனக்கான அறை போலும். பசியில் சுருண்டு, தனியாக கிடந்து, எக்கி முக்கி அழுது கொண்டிருந்தாய்.

"உனக்குப் பசி என்று புரிந்தது. உன்னைத் தூக்கி கொண்டு சமையல் அறைக்கே போய், சாப்பாடு வாங்கி, அள்ளிக் கொடுத்தேன். பசி தீர்ந்ததும், தோளிலேயே அயர்ந்து தூங்கிவிட்டாய். கண்டுக் கொள்வாரே கிடையாது. பிறகு, உன் பாட்டியைத் தேடிச் சென்றேன்.

"பூஜையறை வாசலில் இலக்கற்று வெறித்த கண்களுடன் ஓய்ந்து கிடந்தார்கள். தனியாகத்தான். அருகில் சென்று, மெல்ல அவர்களை எழுப்பினேன்.

"ஆனால், அங்கங்கே வந்து போய்க் கொண்டு இருந்தவர்களில், யார் நல்லவர், யார் கெட்டவர் என்று, என்ன தெரியும்?

"எனவே, அருகில் அமர்ந்து, மிகவும்தணிந்த குரலில், அவசரமாகச் சொன்னேன். ரொம்பத் துக்கத்தில் இருக்கிறீர்கள் என்று, தெரியும் அம்மா. எதையும் யோசிக்கக் கூட முடியாது. ஆனால், தயவு பண்ணி, யாரையும் நம்பி, எதிலும் கையெழுத்துப்போட்டு விடாதீர்கள், அம்மா... எவ்வளவு வேண்டியவர்கள் வந்து எப்படிச் சொல்லிக் கேட்டாலும், எதிலும் கையெழுத்து மட்டும் போட்டுக் கொடுத்து விடாதீர்கள் என்று திரும்பத் திரும்பச் சொன்னேன். வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர, எதையும் புரிந்துகொண்ட மாதிரியே தெரியவில்லை. ஆனால், அதற்குமேல், அப்போது நான் என்ன செய்யட்டும்?

"யாரோ, பெரியம்மா எங்கே என்று விசாரிப்பது கேட்கவும், கொஞ்சம் பயமாகிவிட்டது. எண்ணைக் காணாது பறந்த கூந்தலோடு, கந்தல் ஆடையில் என்னை அங்கே பார்த்தால், என்ன குற்றம் சொல்வார்களோ? தோளில் நீ வேறு! எழுந்து விலகிப் போய்விட்டேன்.

"உன்னை, உன் அறையில் கிடத்திவிட்டுப் போக வேண்டியதுதான். உன்னைத் தூக்கியதில் இருந்து, மனதில் ஒரு திடம், ஏதோ எனக்கு ஒரு துணை இருப்பது போன்ற பாதுகாப்பு உணர்வு இருந்தது. இனி,



உன்னை விட்டுப் பழைய சூனிய வாழ்வுக்குத் திரும்பிப் போக வேண்டும்! மனம் வராமல், சற்று நேரம் தயங்கி நின்றேன்.

"கூடவே, இனி உன் பாட்டியும், நீயும் என்ன ஆவீர்கள் என்ற கலக்கம் வேறு.

"நான் தயங்கி நின்ற நேரத்தில் "நீதானா அந்தப் பெண்' என்று அங்கே வந்தார், ஒருவர், நம் வக்கீல் அன்பரசு அங்கிள்!

"ஓஹோ! கையெழுத்துப் போடவேண்டாம் என்று, பாட்டியிடம் நீங்கள் சொல்லிக் கொண்டிருந்தபோது, பாட்டியைத் தேடி வந்தது, அவராகத்தான் இருக்க வேண்டும். 'அப்படியாம்மா?' என்று ஆவலாகக் கேட்டான் சதானந்தன்.

அவனது கன்னத்தை வருடி, "ஆமாம்ப்பா" என்று லேசாக முறுவலித்துவிட்டு, பழைய கதைக்குப் போனாள் வனிதா.

"பாட்டியைத் தேடிப்போனவர் வக்கீல்தான். அன்றைய இரவுச் சாப்பாடு உறவினருக்கு மட்டும் என்பது மரபு. மற்ற வெளி மனிதர்களோடு, அவரும் கிளம்பியாக வேண்டும். அவருக்கும், உங்கள் இருவர் கதியைப் பற்றிய கவலை இருந்தது. இன்னும் கொஞ்சம் குடும்ப விவரம் தெரிந்தவர் என்பதால், மிக அதிகமாகவே.

"எனவே, எதிலும் கையெழுத்துப் போட்டு விடாதீர்கள் என்றே, பாட்டியிடம் அவரும் சொல்லியிருக்கிறார். சற்று முன் கேட்ட அதே வார்த்தைகள், இன்னொருவர் வாயிலாக மீண்டும் காதில் விழவே, பெரியம்மாவுக்கு என்னவோ தோன்றியிருக்கிறது.

"இப்போதுதான் ஒரு பெண், இதையே சொன்னாள். நீங்களும் அப்படியே சொல்லுகிறீர்களே, என்றிருக்கிறார்கள்.

"ஒத்த மனமாக, அக்கறையாகச் சொல்லியிருக்கிறாளே, யார் என்று, அவரும் என்னைத் தேடி வந்துவிட்டார்.

"என்தோற்றம், அவருக்கு ஏமாற்றம்தான். என்றாலும், ஏன் அப்படிச் சொன்னேன் என்று விசாரித்தார். நானும் சில கையெழுத்துக்களால், பிச்சைக்காரி நிலைக்கு இறங்கியவள் ஆயிற்றே! நீ அழுதபோதும், அடுத்துக் காதில் விழுந்ததையும் கூறினேன்.

"அங்கிள், அப்போதே முடிவெடுத்து, பெரியம்மாவிடமும் என்னிடமும் சொல்லி, சில நடவடிக்கைகள் எடுத்தார். எனக்கு வேறே வேலை கொடுக்கப் போவதாகச் சொல்லி, 'மேஸ்திரி'யை அனுப்பி வைத்தார். குளித்து, தலை முழுகி, ஒழுங்காக துணிமணி அணியச் சொல்லி, உன்னைப் பார்த்துக் கொள்ளும் வேலைக்காக அவர், கூட்டி

வந்த பெண், அங்கேயே பெரியம்மாவோடு, கூடவே இருப்பாள் என்று உறவினரிடம் அறிமுகப்படுத்தி வைத்தார். அம்மாவும், ஒத்துப்பேசி, அப்படித்தான் என்று சொல்லவும், அப்போதைக்கு, யாராலும் எதுவும் சொல்ல முடியவில்லை.

"அத்தோடு, எல்லோரும் சும்மா இருந்துவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால், நீயும் என்னிடம் ஒட்டிக் கொண்டாய். பாட்டிக்கும் என்னிடம் பெற்ற பெண் போலப் பிரியம் வந்துவிட்டது. வக்கீல் சாரிடம் சொல்லி, மேலே படிப்பு, பயிற்சிக்கு ஏற்பாடு செய்தார்கள். அப்புறம், தொழிலைப் பார்க்கத் தொடங்கினேன். பிறகு... பிறகுதான், உனக்குத் தெரியுமே!" என்று முடித்தாள் பெரியவள்.

தாய் நடுவில் பட்ட துன்பங்களை எண்ணி, அடி மனதில் ஒரு வலி இருந்தபோதும், சுந்தரிக்கு, உள்ளூர மிகவும் பெருமையாகவும் இருந்தது. 'எங்கள் வனிம்மா, வனிம்மா' என்று சதானந்தன் உருகுவது, சும்மா அல்ல! அத்தனை உருக்கத்துக்கும் பெருமைக்கும், அன்னை தகுதியானவளே.

தாலி கட்டிய மனிதனின் வஞ்சகம், கூடப் பிறந்தவனின் துரோகம், அதனால் பட்ட துன்பம், எல்லாவற்றையும் எவ்வளவு சுருக்கமாகச் சொல்லித் தாண்டிப் போனாள்.!

இவ்வளவு சொன்னபோதே, தொண்டை அடைத்ததே! இன்னும் கொஞ்சம் விவரித்திருந்தாலும், அருவியாகக் கண்ணீர் கொட்டியிராதா? ஆனால், அதற்கு அன்னையின் அன்புள்ளம், அதற்கு இடம் கொடுக்கவில்லையே!

தாயைப் பற்றி சுந்தரி பெருமையாக எண்ணியபோது, சதானந்தன் வாய் விட்டுப் பெருமை பேசினான்.

"தொழிலைப் பார்த்தது பற்றி அம்மா சாதாரணமாகச் சொன்னார்கள் என்று. நீயும் அப்படியே மதிப்பிட்டு விடாதே, வதனி. ஆர்க்கிட் பண்ணையில் ஒரு தரம் நல்ல லாபம் வந்தது. உடனே அந்தப் பணத்தையும், கொஞ்சம் பாங்க் கடனும், போட்டு, ஒரு மில்லை வாங்கினார்கள். அப்புறம், திருப்பூரில் ஒரு பனியன் தொழிற்சாலை, சில ஆண்டுகளுக்கு முன், இது கைபேசி யுகம் என்று, நம் 'சதாசெல்ஃபோன்' நிறுவனத்தைத் தொடங்கினார்கள். அந்தக் கணக்குத்தான், உனக்கே தெரியுமே!" என்று அவன் கூற, பிரமிப்புடன் தாயைப் பார்த்தாள் பெண்.

பதினேழு, பதினெட்டு வயதில், ஒரு சாதாரணக் கடையில் பில் போட்டுக் கொண்டிருந்த பெண்! என்ன ஒரு சக்தி உள்ளே



இருந்திருக்கிறது!

சின்னதொரு புன்னகை செய்தாள் வனிதா.

பிறகு "கொஞ்சம் வயதாகிவிட்டதில்லையா? இன்றைய விழா, பிறகு இந்தக் கதை எல்லாமாகச் சற்று அதிகப்படியாகி விட்டது போல இருக்கிறது. நான் ஓய்வாக, டீவி பார்க்கப் போகிறேன். நீங்கள் இருவரும் காரில் ஒரு சுற்று, சுற்றிவிட்டு வாருங்களேன். இரண்டு தெரு தள்ளி, ஒரு பெரிய ஐஸ்க்ரீம் பார்லர் கூட இருக்கிறது, வரும்போது பார்த்தேன்" என்று எழுந்து போய், சோஃபாவில் அமர்ந்து, டீவி ரிமோட்டை எடுத்தாள்.

"இதற்குமேல், இங்கே நின்றால், கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிடப் போகிறார்கள். வா, வதனி. நாமாகவே போய்விடுவோம்!" என்று சதானந்தன் அழைக்க, இருவருமாக அங்கிருந்து வெளியேறினார்கள்.

காரில் ஏறி அமர்ந்து "இங்கிதம் தெரிந்த மாமியார்!" என்றவன், திடுமென கடகட வென்று நகைக்கலானான்.

"எ...என்னப்பா? எதற்குச் சிரிக்கிறீர்கள்? ப்ளீஸ், சொல்லிவிட்டுச் சிரித்தால், நானும் கூடச் சேர்ந்து சிரிப்பேனில்லையா? ப்ளீஸ்யா..." என்று சுந்தரி கெஞ்சுதலாகக் கேட்கவும், சிரிப்பை அடக்கிக் கொண்டு, அவன் சொன்னான்.

"வீட்டில் திருமணம் என்று பேச்சு வரும்போதெல்லாம் என் மனைவி, வனிம்மாவிடம் எப்படி நடந்து கொள்வாள் என்று ரொம்பவே யோசிப்பேன். அதேபோல, நமக்கும் மாமியார் என்று ஓர் அம்மா வருவார்களே, அவர்களிடம் எப்படித்தான் பழகப் போகிறோமோ என்று கொஞ்சம் கவலை கூடப் பட்டிருக்கிறேன்! கடைசியாகப் பார்த்தால், பிரச்சினை எப்படித் தீர்ந்திருக்கிறது, பார்! நான் ரொம்ப 'லக்கி'யில்லை?" என்று மீண்டும் நகைத்தான் அவன்.

"நீங்கள் மட்டும்தான் 'லக்கி'யாக்கும்? உங்களைப் போல, நான் திருமணம் பற்றி நினைத்துப் பார்த்தது இல்லைதான். என்றாலும், உங்கள் கதையேதானே, என்னதும்? பின்னே, நானும் லக்கிதானே?" என்று சுந்தரி போட்டிக்கு வர, இருவருக்கும் சிரிப்பு வந்தது.

வனிதா சொன்ன ஐஸ்க்ரீம் பார்லர் வழியாகத்தான் கார் சென்றது. ஆனால், காரை நிறுத்தி, இறங்கிச் சென்று, வாங்கி வந்து சாப்பிட வேண்டும் போல, இருவருக்குமே தோன்றாததால், காரை மேலே ஓட்டிக்கொண்டு போனான் சதானந்தன்.

"இப்போது நிறைய விஷயம் புரிகிறது, வதனி. முதலில் இருந்தே,

தோன்றுகிறது. மற்றபடி, நீ என் மனதை கவர்ந்து விட்டிருக்கிறாய் என்று கவனித்திருக்க மாட்டேன் உன்னை, நான் அவ்வளவு உன்னிப்பாகக் போர்டைப் என்று நினைக்கிறேன்! அத்தனை பேர் சென்று, பார்க்கும்போது, உன் ஒரு சொட்டுக் கண்ணீர் மட்டும், என் கண்ணில் எப்படி படும்? பிறகும் பார், வனிம்மாவை நீ வெறித்தும் முறைத்தும் பார்த்ததை எல்லாம் கவனித்திருக்கிறேனே! அம்மாவை நீ தப்பாக நினைக்கக்கூடாதே என்று, மெனக்கெட்டு உன்னிடம் வந்து, அவர்களைப் பற்றிப் புகழ்ந்து பேசி... நீ, அவர்களைத் தப்பாக எண்ணி விடக்கூடாதே என்று எவ்வளவு கவலைப்பட்டேன்! உனக்கு ஒன்று தெரியுமா? ஒரு பெண், வனிம்மாவைப் பற்றி ஒரு மாதிரிப் பேசினாள் என்று, கிட்டத்தட்ட நிச்சயமான கல்யாணத்தையே நான் நிறுத்தியிருக்கிறேன்"

ஓரக் கண்ணால் பார்த்துவிட்டு "நான் வரப் போகிறேன் என்று, அப்போதே உள்ளுணர்வு கூறியிருக்கும்" என்றாள் அவள் சாதுவாக.

வியந்து நோக்கிவிட்டு "அப்படித்தான் இருக்கும் போல!" என்று அவன் நகைக்க, அவளும் இணைந்து கொண்டாள்.

சற்று நேரச் சிரிப்பின் பின் "இப்போது, உன் உள்ளுணர்வைப் பற்றி சொல்லு. என்னை எதிர்பார்த்துத்தான் கோவைக்கு வந்தாயா?" என்று கேட்டான் சதானந்தன்.

கண்கள் பளிச்சிட "அப்படிச் சொல்லி, உச்சி குளிர வைக்கத்தான் ஆசை! ஆனால், என்ன செய்வது? பொய் சொல்லிப் பழக்கம் இல்லையே!" என்று போலியாக வருத்தம் காட்டி, உடனே சிரித்தாள் சுந்தரி.

"ஆஹாஹா! அம்மையார் சொன்னால், அப்படியே ஒத்துக் கொள்ள வேண்டியதுதான்! சத்தியத்தின் திருவுரு! வேலையில் சேர்ந்த விதமே அதைத் தெளிவு படுத்தவில்லையே!" என்று கிண்டல் செய்தான் அவன்.

குரல் தணிய "இப்போதேனும் சொல்லலாமில்லையா?"என்று கேட்டான்.

"கட்டாயம்!" என்று ஒத்துக்கொண்டாள் சுந்தரியும் "அம்மா முன்னிலையில் இதைச் சொல்லக் கூடாது என்று நினைத்தேன். ஏனெனில், அம்மாவை அவர்கள் சித்தரித்த விதமே வேறு. அது எனக்குத் தெரிய வந்ததும்..." என்று தொடங்கி, தன் வரையில் நடந்த அனைத்தையும், அவனிடம் தங்கு தடையின்றிக் கூறி முடித்தாள்.



"இனி உங்களிடம் எனக்கு ஒளிவு மறைவில்லை சதா. ஆனால், இந்த மாதிரியெல்லாம் நான் நினைத்திருக்கக் கூடும் என்ற ஐயம் கூட, அம்மாவுக்கு வந்துவிடக்கூடாது. அதனால், இதெல்லாம் கூட அம்மா கூறியது போல, ஒரே ஒரு தடவையாகச் சொன்னதுதான், சரிதானே, சதா?" என்று கேட்டாள்.

காரை நிறுத்தி, அவளை ஆழப் பார்த்துவிட்டு "முழுக்க முழுக்கச் சரிதான்" என்று ஒத்துக்கொண்டான் அவனும்.

நிம்மதியான சிறு அமைதியின் பின் "ஆனால்..." என்று சதானந்தன் யோசனையோடு தொடங்கவும், சுந்தரி திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"எ...என்ன ஆனால்? இன்னும் என்ன, சதா?" என்று சிறு பதட்டத்துடன் கேட்டாள்.

"எல்லாம், இந்த 'சதா'தான்" என்றான் அவன்.

அவள் புரியாமல் விழிக்கவும், "ஆமாம்மா! எனக்கு நீ 'வதனி' நான் மட்டும் உனக்கு, வெறும் 'சதா'தானா?" என்று பெரிதாக அவன் குறைப்படவும் சுந்தரி கலீரென்று சிரித்தாள்.

"அட்டா! ரொம்பப் பெரிய விஷயம்தான்! என்றேனும் 'சாதா'என்று விடுவேனோ என்று சாருக்குப் பயமாக்கும்!" என்று கேலியாகக் கூறிவிட்டு, "அப்படியெல்லாம் அனாவசியமாகப் பயப்படாதீர்கள் சார். எனக்கு நீங்கள் எப்போதும், பயமோ, கவலையோ, இல்லாமல் ஆ...னந்தமாக இருக்க வேண்டும்! ஆனந்...தமாக! சரிதானா? ஆனந்த்?" என்று கேட்டுக் கிளுக்கிச் சிரித்தாள் அவள்.

விழிகளை விரித்து "அம்மாடியோவ்!" என்றான் அவன் "என்ன செய்வது? நீயெல்லாம், என்னை மாதிரி, நல்ல அம்மாவிடம் வளர்ந்திருந்தால், ஒழுங்காக இருந்திருப்பாய். இப்போது பயங்கர வம்புக்காரியாக இருக்கிறாயே! ஏதோ நல்ல மாமியார் கிடைத்திருப்பதால், ஓரளவு சரிப்பட்டு விடுவாய் என்று நினைக்கிறேன்!" என்று அவன் ஆறுதல் அடைய, மறுபடி காருக்குள் ஒரு சிரிப்பலை அடித்தது.

அவர்கள் திரும்பி வருமுன், காந்திமதி அம்மாளிடம், வனிதா பேசியிருந்தாள்.

"பாட்டிக்கு மிகுந்த மகிழ்ச்சி! திருமணத்தை எப்போது வைக்கலாம் என்று கேட்கிறார்கள்"

குறும்பாக அவனை நோக்கிவிட்டு "மற்ற யார் வசதியையும், நான் பார்க்கப் போவதில்லை. என் மாமியார் சொல்லுகிற நாளில்தான்

திருமணம்!" என்றாள் சுந்தரவதனி.

"அதெப்படி? என் மாமியார் மட்டும் குறைவா? அவர்கள் சொல்லுகிற நாளில்தான் கெட்டிமேளம் கொட்ட வேண்டும்!" என்றான் சதானந்தன்.

"ஊகூம். என் மாமியார்!"

"என் மாமியார்தான்!"

"அடடா! அதற்குள் சண்டையா? வேண்டாம்ப்பா, வேண்டாம்! நீங்கள் இருவரும் ஒற்றுமையாக இருப்பதற்காக, இரண்டுபேர் மாமியார்களிடமும் பேசி, நானே, திருமண நாளை ஏற்பாடு பண்ணுகிறேன். ஒரே ஒரு நிபந்தனை. இரண்டு பேரும் அவரவர் மாமியாரின் கால்களில், ஒரே நேரத்தில் விழுந்து ஆசி வாங்க வேண்டும், என்ன? சம்மதம்தானா?"

கிளுகிளுவென்று, மூன்று பேரின் சிரிப்பொலிகள், அந்த அறையில் இனிமையாக ஒலித்தன!

முற்றும்

Owned Published Edited and Printed by SP.RAMU. Published at 6/84. Mallan Ponnappan Street, Triplicane, Chennai - 600 005. Phone: 2844 0617, 2848 3163. Telefax: 2848 0610. Printed at Sri Parameswari Printers & Binders. 9, Swami Aachari Street, Pudupakkam, Chennai - 600 016. Editors: SP.RAMU. Editor incharge: Bharathi. E-mail: vivekpublications@usa.net.



